ரூ. 06

575

இலங்கையில் ஒரு
இல்லற ஞானி

~~(49)~~

~~க. ணி 143~~

~~B. 294~~

563

நகரத்தினம் ம.ம. வித்தியாலய [illegible]

கீழ்க் குறிக்கப்பட்டுள்ள திகதியிலோ, அதற்கு முன்னரோ இந்த நூலைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 25/[illegible]/76 | [illegible] | Sivakumar |
| 2/2/78 | [illegible] | Rajan |
| 23/3/79 | | |

T 06

த.கி 143

429

கனகரத்தினம் ம. ம. வித்தியாலய
நூல் நிலையம்
யாழ்ப்பாணம்

T 06

உ
சிவமயம்

B 294

# "இலங்கையில் ஓர் இல்லற ஞானி"

சிவத்திரு. க. இராமச்சந்திரனுர்
அவர்களுடைய
வாழ்க்கை வரலாறு

எழுதியவர்:
நா. முத்தையா அவர்கள்

வெளியீடு:
ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி.
(ஸ்ரீ லங்கா)

முதற் பதிப்பு:
1974.

வரவுப் பதிவு எண்
வகுப்பு எண் 920

வெளியிட்டோர்:
ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.

2631

அச்சிட்டோர்:
ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி.

# முன்னுரை

ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றை இன்னொருவர் எழுதுவதும் தன்னுடைய வரலாற்றைத் தானே எழுதுவதுமென இருவகையான வரலாறுகளை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதிய என்சரிதையும் மகாத்மா எழுதிய சத்தியசோதனையும் பின்னதற்கு உதாரணங்களாகும். முன்னதற்கு உதாரணங்கள் எத்தனையோ உண்டு. முன்னது பெரும்பாலும் ஒருவரது பூத உடல் மறைவின் பின்புதான் எழுதப்படுவதுண்டு. அதில் எத்தனையோ கற்பனைகளும் உண்மைக்கு மாறானவைகளும் கலக்கப்படலாம். இதனால்தான் போலும் மகாத்மாவும், டாக்டர் உ. வே. சாமிநாதஐயரும் தம் சரித்திரத்தை தாமே எழுதி வெளியிட்டனர்.

"இலங்கையில் ஓர் இல்லற ஞானி" மேற்கூறிய இருவகைகளையும் சேர்ந்தது அல்ல. கிட்டத்தட்ட இரண்டும் சேர்ந்த ஒன்று எனக்குறிப்பிடலாம். ஒருவருடைய வரலாற்றை இன்னொருவர் எழுதினாலும் நூலுக்குரிய இலக்கிய புருஷர் இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

உயர்திரு இராமச்சந்திரனார் தமது சரித்திரத்தை தாமே எழுதுவதற்கேற்ற உளப்பாங்கு இல்லாதவர். பிறர் எழுதி அவர் வரலாறு வெளிவர வேண்டும் என்று கேட்டதற்கு முதலில் மறுப்புரை கூறியவர்கள். சுயசரிதம் எழுதப்படப் போகிறது என்று தெரியாதவகையிலேயே அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் காலந்தோறும் சேட்டுக் கேட்டு குறிக்கப்பட்டனவாகும். ஒரு சில விடயங்கள் அவரோடு நெருங்கிய தொடர்புடையாரிடமிருந்து பெறப்பட்டனவாகும்.

இது எவ்விதத்திலும் அவர்களுடைய பூரணமான ஒரு வரலாற்று நூல் என்றோ சுயசரித்திர நூல் என்றோ சொல்வதற்கில்லை. பிற்காலத்தில் அவர்களுடைய அத்யாத்மிக நூல் ஒன்று வரக்கூடுமாயின் அதற்கு இது ஒரு முன்னுரை போன்றது என்றே கூறலாம். அவர்களுடைய ஆத்மீக அனுபவங்கள் கடல் போன்றவை. அவற்றில் ஒரு சிறு துளிகளே நம் மத்தியில் சிதறியன என்று துணிந்து கூறலாம்.

இதனை எழுதுவதற்கு வாள்முனையில் நடப்பது போன்றதொரு முயற்சியும் அனுபவமும் வேண்டும் என்று கூறலாம். ஐயா அவர்களைப்பற்றி எள்ளளவாகிலும் வேண்டாத புகழ்ச்சி வந்து விட்டால் அதனைக் கடுகளவேனும் சகிக்கமாட்டாதவர்கள். யார் எழுதினாலும் அதனைப் பகிரங்கமாகவே கண்டிக்கத் தவற மாட்டார்கள்.

அவர்கள் சிறு பிழைகளைக்கூட பொறுக்கமாட்டாதவர்கள். அதனால் ஏற்படும் சிறு கோபத்தைத்தானும் ஆண்டவன் அந்த நேரத்திலே கோபிக்கச் செய்துவிட்டான் என்றுகூறுவாரே தவிர தன் முனைப்பிலே உண்டான கோபம் என்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பதிலே அவ்வளவு பூரணமான நம்பிக்கை உடையவர்கள்.

"உனது வாழ்க்கையிலே ஒரு கையினால் உலகத்தையும் மறுகையினால் ஆண்டவனையும் பிடித்துக் கொள். சந்தர்ப்பம் வரும்போது இரு கைகளினாலுமே ஆண்டவனைப் பிடித்துக் கொள்" என்பது இராம கிருஷ்ண பரமஹம்சரது உபதேசமாகும். இந்த உபதேசத்திற்கு இலக்கிய புருஷராய் விளங்குகிறவர்கள் இராமச்சந்திரனார் அவர்கள்.

தன்னலமும் புகழும் எள்ளளவேனும் கருதாது அவர் செய்த சமூக ஆத்மீக சேவைகளுக்கு இன்னொரு உதாரண புருஷரைத் தேடிக் காண்பது மிக அரிதாகும். காந்தி அரசியல்வாதியல்ல. ஆனால், அரசியலிலே அறத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அரசியலாளருக்கு அறவுரைபகர்ந்தவர். இதே போன்றுதான் இராமச்சந்திரனார் அவர்களும் அரசியல் சூறாவளிக்கு அப்பால் நின்றுகொண்டு அரசியலாளருக்கு அறத்தைக் கூறியவர். உள்ளம் சரியென்று கண்டு தீர்மானித்த ஒன்றை அஞ்சா நெஞ்சத்தோடு வெளிப்படையாகக் கூறும் சுபாவம் உடையவர்; துணிந்து செய்யும் தீரமும் உடையவர். பிரித்தானிய இராச்சியம் தமக்குப் பகைவன் என்று கருதிய காந்தி அடிகளை இலங்கையிலே பிரித்தானிய இராச்சியத்தின் விசுவாச அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர், தமது வீட்டிலே வைத்து வரவேற்றதை எள்ளளவேனும் விரும்பவில்லை. அதற்குப் பயந்து இராமச்சந்திரனார் காந்தி அடிகளின் கொள்கைகளை மறுத்துரைப்பவர் அல்ல. காந்தி அடிகளை வரவேற்றதனால் உத்தியோகம் பறிபோவதாயினும் அதனைப் பெரியதொரு பேறாகக் கருதும் மனோதிடம் உடையவர். தனது சொந்த வாழ்க்கையிலே அநீதிக்கு எள்ளளவேனும் இடம் கொடுக்காத ஒருவன்தான் பொது வாழ்க்கையிலே நீதியையும் நேர்மையையும் கடைப்பிடிக்க முடியும். அதர்மத்தை எதிர்த்து நிற்க முடியும்.

இத்தகைய குணநலன்களை எல்லாம் இராமச்சந்திரனாரது வாழ்க்கையிலே காணமுடிகிறது. வள்ளுவரும், காந்தியும் இல்லறத்தில் நின்று

கொண்டே ஞானிபோல் வாழ்ந்தார்கள். இராமச்சந்திரனும் தமது வாழ்க்கைக்கு இவ்விருவரையும் உதாரண புருஷர்களாகக் கொண்டு இல்லற ஞானியாக வாழ்ந்தவர்கள். இன்றும் வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள். அவரது வாழ்க்கையின் இலட்சியங்கள் இந்நூலை வாசிப்போ ருக்கு வாழ்க்கையில் ஆதர்சமாக அமையும் என்ற ஒரு நோக்கத்தி லேயே இந்நூலை எழுதி வெளியிடுகின்றோம்.

''குற்றம் களைந்து குணமளைந்து கொள்ளுதல்
கற்றறிந்த மாந்தர் கடன்'' என்ற குறளை வாசகர்களுக்கு அறிமுகம் செய்துவைத்து விடைபெறுகின்றேன்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி,
ஸ்ரீ லங்கா.

நா. முத்தையா.

5.06

563

AUM

# Foreword

*Homage unto the Divine Almighty!*
*My salutations to Satguru Bhagavan Sri*
*Swami Sivananda, the Light of the Himalayas,*
*and the Great Yogi and Jnani of this*
*20th century, who brought about a*
*world spiritual awakening by His spiritual*
*teachings and by his ceaseless Jnana*
*Yaina or propagation of spiritual knowledge!!*
*May the Blessings of god and His Saints*
*and Sages be upon all mankind!!!*

I am very happy indeed to write these lines for this brief biographical sketch of revered Sri. K. Ramachandra written by Sri. N. Muthiah the editor of the "ATHMA JOTHI". As the very appropriate title, of the book "Elankaiyil oru Illara Jnani" aptly describes, Sri. K. Ramachandra is indeed a Householder Sage in Lanka. His life has been characterised by a firm faith in God, deep belief in Religion and great reverence for saints and holy men. Philosophy and spiritual teachings have exercised an attraction for this noble soul and influenced his life, and thoughts to a very considerable degree. It is thus we find him imbued with spiritual aspiration and noble idealism.

I first met Sri. Ramachandra in the year 1950 when visiting Ceylon in the holy company of our most worshipful Gurudevar Sri. Swami Sivanandaji Maharaj. Sri. Ramachandra took the leading part in organising the programme of Gurudev's visit, reception, etc. It was then that I witnessed his exceptional piety, his wonderful devotion and his great spirit of service as well as his keen interest in spiritual matters. Every minute of the entire period that Swami Sivanandaji was in Colombo, Sri. Ramachandra kept close to him in his divine company. Guru Maharaj at once perceived his genuine spiritual nature and aspirations coupled with rare humility and simplicity despite his erudition and status. This greatly endeared Ramachandra to Gurudev, who invited him to come to India and visit his Ashram at Rishikesh. Mr. Ramachandra had his 1st Dharsam & blessing of the Swamiji in

06

May 1936 when the latter was living in a Cave as Rishikesh. This he did and came to the Ashram a couple of years later and had the unique joy of being with the great saint and sage of the Himalayas at his abode on the banks of holy mother Ganges. Everyone at the Ashram remembers his visit well and still speaks of his exceptional devotion and great spiritual "Bhav" which they observed in him.

His deep study of the lives and teachings of the Saints and God-men and his personal association with contemporaray saints and sages like Sri Ramana Maharishi and Sri. Swami Ramadas resulted in the gradual flowering of his aspiration and devotion and brought about the dawn of wisdom within his heart. He himself blossomed into a sage householder and a saint hidden under the veil of routine family life and social activity. God inspired him to share the treasures of holy Satsang with all his fellowmen and he did this through the pages of a Spiritual Journal "Religious Digest" which he founded. He also travelled abroad and brought the treasures of Philosophy and Yoga to seekers in the different part of the world.

This book is very important and very valuable because it will be a source of inspiration and guidance to numerous householders. I congratulate the author Mr. N. Muthiah and wish this book wide circulation. God Bless you all.

*SWAMI CHIDANANDA,*
President, Divine Life Society,
Rishikesh, Himalayas.

Jaffna.
*14-9-1974.*

563

# அணிந்துரை

எல்லாம் வல்ல இறைவனுக்கு வணக்கம்.

இமய ஜோதியாயும் இந்த இருபதாம் நூற்றுண்டின் மாபெரும் யோகியாயும் ஞானியாயும் விளங்கி, தமது ஆன்மீக போதனைகளின் மூலமும் ஆன்மீக அறிவைப் பரப்புவதாகிய இடைவிடாத ஞானயக்ஞத்தின் மூலமும் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்திய சற்குரு பகவான் சிவானந்தருக்கு எனது வணக்கங்கள்.

இறைவனது அருளும் மகான்கள், ஞானிகள் ஆகியோரின் ஆசிகளும் மனித சமுதாயம் முழுவதற்கும் துணை நிற்குமாக.

போற்றுதற்குரிய ஸ்ரீ இராமச்சந்திரா அவர்களது சீவிய சரித்திரத்தைச் சுருங்கக்கூறும் இந்நூலுக்கு இந்த அணிந்துரையை வழங்குவதில் நான் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆத்மஜோதி ஆசிரியர் ஸ்ரீ நா. முத்தையா அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார். இந்நூலுக்கு இடப்பட்டுள்ள ''இலங்கையில் ஓர் இல்லற ஞானி'' என்ற பெயர் மிகவும் பொருத்தமானது. இப்பெயர் சரியாகக் குறிப்பதேபோல ஸ்ரீ இராமச்சந்திரா அவர்கள் உண்மையிலேயே இலங்கையிலுள்ள ஓர் இல்லறஞானி ஆவார். இறைவனிடத்தில் உறுதியான நம்பிக்கை, சமய விஷயங்களில் ஆழ்ந்த சிரத்தை, மகான்களிடத்தும் சாதுக்களிடத்தும் பெருமதிப்பு ஆகியவை இவரது வாழ்க்கையின் தனிப்பண்புகள். தத்துவ ஞானமும் ஆன்மீக உபதேசங்களும் இப்புண்ணியாத்துமாவைக் கவர்ந்து, இவரது வாழ்க்கையையும் சிந்தனைகளையும் பெரிதும் பண்படுத்தியுள்ளன. எனவேதான் ஆன்மீக நாட்டமும் உயர்ந்த லட்சிய நோக்கும் உடையவராக இவரைக் காண்கிறோம்.

வணக்கத்துக்குரிய எமது குருதேவர் சுவாமி சிவானந்தஜீ மகராஜ் அவர்களோடு 1950-ம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது நான் முதன் முறையாக ஸ்ரீ இராமச்சந்திரா அவர்களைச் சந்தித்தேன். குருதேவரின் விஜயம், வரவேற்பு முதலியவை சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் ஸ்ரீ இராமச்சந்திரா பிரதான பங்கெடுத்துக்கொண்டார்.

அப்போது ஆன்மீக, விஷயங்களில் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டோடு, அவரது தனிச்சிறப்பு வாய்ந்த கடவுட்பற்றையும் வியக்கத்தக்க பக்தியுணர்ச்சியையும் நான் கண்டேன். சுவாமி சிவானந்தர் கொழும்பிலிருந்தபோது ஸ்ரீ இராமச்சந்திரா ஒவ்வொரு நிமிஷமும் அன்னாருக் கண்மையில் அவரது தெய்வீக சந்நிதியிலேயே இருந்தார். புலமையும் பதவியும் படைத்தவராக இருந்தும், அவரிடம் விளங்கிய தூய ஆன்மீகப் பண்பு, உயர் நாட்டங்கள் ஆகியவற்றோடு அவரது அசாதாரணமான பணிவையும் எளிமையையும் குருமகராஜ் உடனே கண்டுகொண்டார். இதனால் இராமச்சந்திரா குருதேவரின் பேரன்புக்கு உரியவரானார். இந்தியாவிலுள்ள தமது ஆசிரமத்துக்கு விஜயம் செய்யுமாறு குருதேவர் அவரை அழைத்தார். அங்ஙனமே அவர் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் ஆசிரமத்துக்கு வந்து, தூயகங்காமாதாவின் கரையிலே இமயத்தின் மாபெரும் மகானும் ஞானியுமான சுவாமி சிவானந்தருடன் அவர் வசிக்குமிடத்திலே தங்கியிருக்கும் தனிப்பெரும் இன்பத்தைப் பெற்றார்.

ஸ்ரீ இராமச்சந்திரா முதன் முறையாக வணக்கத்துக்குரிய சுவாமி சிவானந்தரைத் தரிசித்து ஆசிபெற்றது 1936ஆம் ஆண்டு மே மாதத்திலாகும். அப்போது சுவாமிஜீ அவர்கள் தற்போதுள்ள ஆசிரமத்துக்கருகில் ஒரு குகையில் தவம் செய்துகொண்டிருந்தார்.

ஆசிரமத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரது விஜயத்தை நன்கு நினைவில் வைத்துள்ளனர். அவரது தனிச்சிறப்பு வாய்ந்த பக்தியையும் அவரிடம் அவர்கள் கண்ட சிறந்த ஆன்மீக பாவனையையும் பற்றி அவர்கள் இன்னும் பேசிக்கொள்கின்றனர்.


மகான்கள், தெய்வீக புருஷர்கள் ஆகியோரின் வாழ்க்கையையும் போதனைகளையும் ஆழ்ந்து சிந்தித்ததன் விளைவாகவும் ஸ்ரீ ரமண மகரிஷிகள், ஸ்ரீ ராமதாசர் போன்ற தம்காலத்து மகான்களுடன் நேரடியாகத் தொடர்பு பூண்டதன் விளைவாகவும் அவரது ஆன்மீக நாட்டமும் பக்தியுணர்ச்சியும் மேன் மேலும் பெருகி, அவரது இதயத்தில் ஞானோதயம் ஏற்பட்டது. தாமே ஓர் இல்லற ஞானியாகவும் சாதாரணக் குடும்ப வாழ்க்கை, சமூகப் பணிகள் ஆகிய புறப்போர்வையில் மறைந்திருக்கும் ஒரு மகானாகவும் அவர் திகழலானார். புனிதமான சத்சங்கத்தின் மூலம் தாம் பெற்ற ஆன்மீகச் செல்வங்களைத் தம் உடன் வாழ்வோர் அனைவரோடும் பகிர்ந்துகொள்ளுமாறு இறையருள் அவரைத் தூண்டியது.

தாம் ஆரம்பித்த Religious Digest என்னும் ஆன்மீக சஞ்சிகையின் மூலம் அவர் இப்பணியை ஆற்றலானர். அத்துடன் அவர் வெளிநாடுகளுக்கும் யாத்திரை செய்து, தத்துவஞான யோகச் செல்வங்களை உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் சாதகர்களுக்கும் வழங்கியுள்ளார்.

இந்நூல் முக்கியத்துவம் வாய்ந்ததும் பெருமதிப்புடையதுமாகும். ஏனெனில், எண்ணற்ற இல்லறத்தாருக்கு இந்நூல் தெய்வீக எழுச்சியளித்து நல்வழி காட்டும் சாதனமாகத்திகழும். இதன் ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இந்நூல் எங்கும் பரவிப் பலராலும் படிக்கப்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இறைவன் உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

சுவாமி சிதானந்தா.
தலைவர், திவ்விய ஜீவன சங்கம்,
ரிஷிகேசம், இமாலயம்.

14-9-1974,
யாழ்ப்பாணம்.



திரு. க. இராமச்சந்திரா தம்பதிகள்

உ
சிவமயம்

# நயினுதிவு

சிதம்பரம் என்ருல் கோயில் என்ற சிறப்புப் பெயரைத் தாங்கிய நடராஜப் பெருமான் கோயிலேயும், மதுரை என்ருல் மீனுட்சி அம்மை கோயிலேயும், பழனி என்ருல் முருகப் பெருமான் கோயிலேயும் குறிப்பது போல நயினுதீவு என்ருல் நாகபூஷணி அம்பாள் கோயிலேயே குறிக்கும். காரணம் இந்த ஊர்கள் எல்லாம் அந்தந்த ஊர்களிலுள்ள திருத்தலங்களால் புகழ் பெற்றவையாகும்.

உலகெங்கணும் உள்ள ஐம்பத்தொரு சக்தி பீடங்களுள் இதுவும் ஒன்ருகும். இதனே நாகேஸ்வரி ஆலயம் என்றும், நாகம்மாள் கோவில் என்றும் அழைப்பர். நான்கே நான்கு மைல் சுற்றளவுள்ள இத்தீவு சரித்திரப் பிரசித்தி பெற்றது. மணிமேகலே என்ற காவியத்தில் வரும் மணிபல்லவத்தீவு இது தான் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

நயினுதீவினே நாகதீபம் என்றுஞ் சொல்லுவர். இது ஒரு பரிசுத்த தலமாகும். புத்தபிரான் இதனேத் தரிசித்தபடியினுல் இது பௌத்தருக்கும் ஒரு பரிசுத்த தலமாகும். நாகபூஷணி அம்மன் கோயில் இருப்பதனுல் இந்துக்களுக்கும் இது ஒரு பரிசுத்த தலமாகும். ஆகவே இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் வருடம் முழுவதும் யாத்திரீகர்கள் வந்து செல்வதை இன்றும் காணலாம்.

ஸ்ரீ லங்காவில் இருபெரும் சமயங்களாகிய பௌத்தரையும் இந்துக்களேயும், இருபெரும் சமூகங்களாகிய சிங்கள மக்களேயும் தமிழ் மக்களேயும் ஒன்றுபடுத்தி வைக்கும் திருத்தலங்கள் மூன்று உள்ளன. தெற்கே கதிர்காமம். மத்தியில் சிவனடி பாதம். வடக்கே நயினுதீவு. முருகனும் சிவனும் தேவியும் இருபெரும் சமூகங்களேயும் ஒன்றுபடுத்தும் தெய்வீகக் குடும்பமாக விளங்குகின்றனர். இந்த ஆத்மீக தத்துவத்தை உணர்ந்து கொள்ளாத அரசியல்வாதிகள் இனவாதத்தையும் சமூக விரோதத்தையும் தூண்டிவிடும் கைங்கரியங்களேப் பார்க்கும்போது மனம் மிக வேதனே அடைகின்றது.

ஐம்பெருங் காவியங்களில் ஒன்ருகிய மணிமேகலையில் வரும் மணிமேகலை, தேவியை வழிபட்டதாகப் பாரம்பரியக் கதைகள் கூறுகின்றன. ஆபுத்திரன் விட்டுச் சென்ற அமுத சுரபி மணிமேகலைக்கு இங்குதான் கிடைத்தது. இது பல மகான்களுக்கும், அறிஞர்களுக்கும் புலவர்களுக்கும், சாதனையாளர்களுக்கும் இருப்பிடமாய் அமைந்திருந்தது என்பதை யாரும் அநுபவத்தில் அறியலாம். அங்கு ஒரு ஆத்மீக அலை உண்டு. கதிர்காமம், செல்லச்சந்நிதி போன்ற தலங்களில் உள்ள ஆத்மீக அலைபோன்று அங்கும் உள்ளதை எவரும் உணரலாம். அந்தச் சக்தியினுலேயே ஸ்ரீ லங்காவிலிருந்து மாத்திரம் அல்ல பாரத நாட்டிலிருந்தும் யாத்திரீகர்கள் கவரப்படுகின்ருர்கள்.

நயினுதீவு முற்காலத்தில் ஒரு சிறந்த துறைமுகமாக விளங்கியது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆபுத்திரன் பிரயாணம் செய்து வந்த கப்பலே இங்கு தங்குவதற்கு ஏற்ற வசதியோடு இருந்ததென்ருல் வேறு அத்தாட்சி எதுவுமே வேண்டியதில்லை. தென்னிந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கப்பல் செல்லும் பாதையில் நயினுதீவு இருந்தமையால் தமிழ்நாட்டுக் கப்பல்களும் வேற்றுநாட்டுக் கப்பல்களும் இத்துறையிலேயே தங்கிச் சென்றிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. சங்குகுளிக்கும் துறைகள் இருந்ததென்பதற்கு இன்றும் அத்தாட்சி உண்டு.

இந்தியா முழுவதையுஞ் சேர்த்து நாவலந்தீவு என்று அழைத்தது போல யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதனைச் சேர்ந்த தீவுகளையும் சேர்த்து மணிபல்லவம் என்று அழைத்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நயினுதீவுக்கு நாகதீவு, மணித்தீவு என்னும் பெயர்களும் உண்டு. நயினுதீவுச் சாமியார் என்று அழைக்கப் பெறும் திருப்பெருந்திரு முத்துக்குமாரசுவாமிகளும் நயினை மான்மியம் இயற்றிய வரகவி நாகமணிப் புலவர் அவர்களும் வாழ்ந்த ஊர் நயினுதீவு என்னும்போது அதற்கு ஒரு தனி மதிப்பு ஏற்படுகின்றது.

# துப்பாசி குடும்பம்

இத்தகைய சிறப்புவாய்ந்த நயினுதீவு, நாகபூஷணி அம்மையின் திருவருளினுல் பல பெருமக்களை உலகிற்கு அளித்துள்ளது. அவர்களில் ஒருவர்தான், நமது மதிப்புக்கும் அன்புக்கும் உரியவரான இல்லற ஞானியாகும் உயர்திரு. க. இராமச்சந்திரனுர் அவர்களாகும். இவரது தந்தையார் பெயர் வைரமுத்து கதிரேசு. தாயார் பெயர் முத்துக்குமாரு வள்ளியம்மை. கதிரேசுவும் வள்ளியம்மையும் எவ்வளவு பெயர்ப் பொருத்தம். இப்படிவந்தமைவது பூர்வீக தவப் பயனுகும். வள்ளியம்மையாரின் பாட்டனுர் தென்னிந்தியா விலிருந்து வந்த பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவராகும். இவர்கள் பட்டர் என்று அழைக்கப்படுவர்.

வைரமுத்துவின் பாட்டனுர் பட்டாளத்தில் சேர்ந்த ஒரு போர் வீரர். டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் டச்சுத் தளபதி ஒருவருடன் அவரது மெய்காப்பாளனுக இவர் சென்றிருந்தார். இருவரும் மனமொத்த நல்ல நண்பர்கள். உயிர்ச்சிநேகிதர் என்றே கூறலாம். தளபதி தனது சிநேகிதரிடம் மிகமிக இரகசியமான செய்தி ஒன்றைச் சொல்லி இருந்தார்.

தளபதியாருக்குத் தங்க நாணயங்களில் ஒரு அலாதியான ஆசை. புதை பொருளாகக் கிடைத்த தங்கம் முழுவதையும் தங்க நாணயங்களாக்கி அவற்றைத் தனது மேலங்கியுள் வைத்துத் தைத்திருந்தார். போர் வீரருடைய சீருடைக்கு மேலாக அதனையும் அணிந்து வந்திருந்தார். யுத்தத்தில் தான் தற்செயலாக இறக்க நேர்ந்தால் அத் தங்க நாணயங்கள் தனது சிநேகிதனைச் சேரவேண்டும் என்பதே தளபதியின் இரகசியமாகும்.

யுத்தம் மும்முரமாக நடைபெற்றது. எதிர்ப்பக்கத் திலிருந்து வந்த குண்டு ஒன்று தளபதியை அடித்து வீழ்த்தி யது. அதிலிருந்து சிதறிய சின்னங்கள் பக்கத்தில் நின்ற நண்பர் மீதும் பாய்ந்தன. இருவரும் அக்கமும் பக்கமுமாக வீழ்ந்தனர்.

அந்தக் காலத்தில் காயம்பட்ட வீரரைக் காப்பாற்று வதற் கேற்ற சாதனங்கள் கிடையா. போர்வீரர் காயம்பட்டு வீழ்ந்தால் குதிக்கால் நரம்பை வெட்டி எடுத்துக்கொண்டு சென்று விடுவார்கள். குதிக்கால் நரம்பு வெட்டப்பட்டு விட் டால் காயம் பட்டவன் உயிர் தப்பமுடியாது. டச்சுத் தளபதி இறந்துவிட்டார். மற்றவருக்கு லேசான காயம். அவரும் இறந் தது போலவே கிடந்தார். குதிக்கால் நரம்பு வெட்ட வந்தவர் கள் டச்சுத் தளபதியின் இருகால் நரம்புகளையும் மாத்திரம் வெட்டிச் சென்றுர்கள். காரணம் இருவரது கால்களும் ஒன் றேடொன்று பின்னுப்பட்டுக் கிடந்ததாகும். ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு கால் நரம்பை மாத்திரம்தான் வெட்டிச் செல் வது வழக்கம். டச்சுக்காரத் தளபதியின் இரு கால் நரம்பு களும் வெட்டுப்பட்டுவிட்ட படியினுல் பக்கத்தில் கிடந்த நண் பர் உயிர் தப்பிவிட்டார்.

போர் ஒழிந்து, மனித நடமாட்டமும் ஓய்ந்து ஓர் அமைதி ஏற்பட்டதை அறிந்தார் நண்பர். மெல்லமாக எழுந் தார். தளபதியின் மேலங்கியைக் கழற்றினுர். அப்படியே அதனை மூட்டையாகக் கட்டித் தலையில் வைத்துக்கொண்டார். போருடைகளைக் களைந்து சாதாரண உடையில் மாறினுர். கையில் ஒரு துப்பாக்கியுடனும் தலையில் தங்க நாணய மூட் டையுடனும் இரவோடிரவாக சொந்த ஊரை நோக்கிப் புறப் பட்டார். தெய்வத் திருவருளால் வீடு வந்து சேர்ந்தார். நயினுதீவில் முதன் முதலாக துப்பாக்கி வைத்திருந்த குடும் பத்தவர்கள் அவர்களானபடியினுல் அவர்கள் குடும்பம் மற்றையோரால் துப்பாசி குடும்பம் என்று அழைக்கப்பட்டது.

# பிறப்பு

மேற்கூறிய செய்தியிலிருந்து திரு. இராமச்சந்திரனர் உடைய பரம்பரை ஒரு வீரம் நிறைந்த பரம்பரை என்பதை அறியமுடிகின்றது. திரு. இராமச்சந்திரனர் அவர்களுடைய இரண்டாவது மகனர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் பொலிஸ் மா அதிபராக இருப்பதுவும் ஒரு அத்தாட்சியாகும்.

## சாதகக் குறிப்பு

1895-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் தேதிக்குச் சரியான மன்மத வருஷம் ஐப்பசி மாதம் 20-ந் தேதி திங்கட்கிழமை காலே தனு இலக்கினத்தில் துலா நவாம்சத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் ஜனனம்.

கிரகநிலே பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | சந்திரன் 6 | 7 |
| ராகு | தனு இலக்கினம் | | வியாழன் 8 |
| 2 | | | கேது 9 |
| ல | 12 | சனி 11 சூரியன் புதன் செவ்வாய் | சுக்கிரன் 10 |

கார்த்திகை நட்சத்திரம் நாலாம் பாதம், சூரிய திசையில் எஞ்சியிருந்த காலம் வருஷம் 1, மாதம் 3, தினம் 27.

ரிஷிவாக்கியத்தின்

முதற்காண்டம் முதலாம் பாடலின் பின்னிரு வரிகள்:—

● ● ●

"சேரநிற்கும் சூத்திரகுலப் பிரிவுநீட்சி
தேகம் விம்மா நிறம் பொதுமான் யூகனெத்தன்
நாரியரின் மயலடக்கன் பலவிடங்கள்
நண்ணிவருவான் ஒன்றீர் கல்விகற்பான்"

பதினொராவது காண்டம் 6-ம் பாடல் இறுதி வரிகள்:—

"வாகுடன் கேள்பிறந்த முதலிரைண்டரைக்குள்
மயக்கமன்னே பிரசோபதாயம் நீங்கு
மோகமுடன் மறுநாளில் எடுத்தணைத்து
முத்தமிட்டுப் பாலூட்டிப் போற்றவிப்பன்"

7-ம் பாடல் முதல் இரு வரிகள்:—

"அப்பன் மற்றோர் கண்டுமரிருமன் இர்பை
அடுத்த தென்மனம் போலோர் நாமம்சூட்ட
வெப்பம் பாலரிட்டம் புண்படரளிமாந்தம்
வேதனை மாறியுமகலத் தவழ்ந்தெழுந்து"

பதினோராம் காண்டம் 27-ம் பாடல் முழுதும்:—

"பாத்திரச் சேர்க்கையும் நாளுயோரிணக்கம்
பார்த்துதவி செய்துவந்தும் கணிதப்பார்வை
ஏத்தமுற ரேகைபலன் எடுத்தே சொல்லும்
என்னபுத்தி யுக்திஅதில் வரத்தெய்தாது
சாத்திர முண்டெனக்கூறிச் சமர்த்தனென்னச்
சஞ்சரித்துங் கங்கைபல தலநீராடி
தோத்திய பெண்டீருடன் சார்ந்தூரில் பாரி
சுரநோயால் வருந்திச் சாம்துக்கமெத்த"

*(யாத்திரையும் முதல் மனைவி மரணமும்)*

அதே காண்டம் 31-ம் பாடல் முன் மூன்று வரிகள்:—

“வந்துமயல் நாட்டில் மன்னர் வழியோராலே
வரைந்துநின்ற குறிப்பறிந்து வகையீதென்று
சிந்தை மகிழ்ந்திடக் காட்டித் தேசத்தொண்டு
செய்பவர்க் காதரவாயும் சிலபொன்தந்து
நந்தல் விபகாரவழிக் கேகனுகி
நாயகியின் சுகபோகமான சேய்தோற்றி”

*(இஃது 1927-ம் ஆண்டு கதர் நிதிக்குப் பணம் சேர்த்த தொண்டும் அதன்பின் டாக்டர். மகனுரின் ஜெனனமும். நாவலப்பிட்டி இறுதி வாழ்க்கை.)*

திரு. இராமச்சந்திரனுர் சோதிடம் நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள். ஆகவே அவர் பிறந்த தேதியைக் கொண்டு எண் சோதிட ரீதியில் அதன் பலனை இவ்விடத்தில் சொல்லி வைப்பது பொருத்தமாயிருக்குமென்று நம்புகின்றேன்.

முதன் முதலாக உலக அமைப்பைப் படத்தின் மூலம் காட்டலாம் என்று கண்டுபிடித்த ‘மர்க்கேடர்’ (Mercator) என்பவரும், தேர்தலில் நின்று வெற்றி பெற்று ஜெர்மனியை ஆண்ட ‘கோன்ரட் அடன் யூர்’ (Konred Aden Auer) என்பவரும், அமெரிக்க ஜனுதிபதி தேர்தலுக்கு நின்று தோல்வி அடைந்த ‘அட்லாய் ஸ்டீவன்சன்’ (Adlai Stevenson) என்பவரும், கப்ப லோட்டிய தமிழன் என்று சிறப்புப் பெயர் பெற்ற V. O. சிதம்பரம்பிள்ளை அவர்களும், இந்திய ஜனுதிபதியாயிருந்த டாக்டர் S. இராதாகிருஷ்ணன் அவர்களும், ஸ்ரீ தியாகப் பிரம்மம் என வழங்கப்பட்டு வரும் ஒப்பற்ற சாகித்ய கர்த்தா ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும் 5-ம் தேதியில் பிறந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

5 என்ற எண் மோகன சக்தி உடையது. ஒன்பது எண்களுக்கும் நடுவே அமைந்திருப்பது போலவே இவ்வெண்ணுல் குறிக்கப்படுகிற மனிதரும் மற்றெல்லோரும் நன்கு அறிந்த பிரமுகராக வாழ்வர். இவ்வெண் முக்கியமான ஜனவஸ்யத்தைக் குறிக்கும். எல்லோரையும் மோகிக்கச் செய்யும் சக்தி இதற்கு உண்டு.

சீக்கிரம் சீக்கிரம் வேகமாக என்று பிறரைக் கட்டளையிடு வார்கள். இராஜசகுணம் மிகுதி உடையவர்கள் ஆதலால்

இவர்களுக்கு உலகமே ஒரு தாமதமான முட்டாள் கூட்ட மாகத் தோன்றும். வெகு சீக்கிரமே எந்த விஷயத்தையும் கிரகித்துக் கொள்வார்கள். வேகமாகவும் பேசுவார்கள். பிறர் புரியவில்லை என்று சொன்னால் கோபம்தான் வரும். இவர்களது யோசனைகளும் புத்தியும் மின்னல் போன்ற வேகமுடையவை. மற்றவர்கட்கு வெகு நாட்கள் யோசனை யின்பேரில் வரும் முடிவுகள் இவர்களுக்கு உடனே தோன்றி விடும். ஆகையால் தன் முன்னேற்றம் சதா தன்னைச் சூழ்ந் திருக்கிறவர்களின் தாமத குணத்தால் அல்லது மெதுவான இயல்பால் பாதிக்கப்படுவதாகக் கூறுவர். இவர்களில் அதிக வேகமுடையவர்களின் கருத்துக்களைப் பல சமயங்களில் இவர்களது வாழ்நாளுக்குப் பிறகே உலகோர் அறிந்திருக் கின்றனர்.

மிக எளிதில் குழந்தைகள்போல எவரிடமும் சுலபமாகப் பழகிவிடுவார்கள். மனதில் தோன்றுவதை சுலபமாக வெளி யிட்டு விடுவார்கள். ஒன்றையும் மறைக்கத் தெரியாது. எதை யும் மிகச் சுலபமாகச் சாதித்துவிடலாம் என்று உண்மையாக நம்புவார்கள். ஆகையால் எவ்வளவு பெரிய காரியமாக இருந் தாலும் சிறிதும் பயமோ, தயக்கமோ இன்றித் துணிந்து இறங்கிவிடுவார்கள்.

அறிவாளிகள் பெரிய கருத்துக்களையும் சமூக மாறுதல் களையும் உலகினரிடை புகுத்துவர். எல்லோராலும் போற்றப் பட்டு மேலான காரியங்களைச் செய்த வண்ணம் இருப்பர். சிறு வயதிலிருந்தே யாருடன் பழகினாலும் அவர்களது குணங்களை யும் பழக்கங்களையும் சீக்கிரம் கிரகித்துக் கொள்வர். உதவி செய்யப் பின்வாங்காதவர்களாதலால் இவர்களைக்கொண்டு சுலபமாக எக்காரியத்தையும் சாதித்துக் கொள்ளலாம். இவர் களது புத்தியைப் பிரகாசப் படுத்தும் அறிவு இவர்கள் மூலம் உலகில் பல காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்காக இயங்குகின்றது.

இத் தேதியில் பிறப்போர் சிறு வயதிலேயே பெரிய லட்சி யங்களால் கவரப்படுவர். வசீகரமான குணங்களும் நிரம்பின வராக இருப்பர். பிறருக்குப் போதிப்பவராவர். தெய்வீகமான வாழ்க்கை அமைவதுண்டு.

தனக்கு மேலானவர்களின் கட்டளைகளை சிரமேற்கொண்டு உண்மையுடன் சலியாமல் உழைப்பார்கள். இவர்களுக்கு

இயல்பாகவே அடக்கம், பொறுமை, பெரியோருக்குக் கீழ்ப் படிதல் முதலிய குணங்கள் அமைந்திருக்கும். கௌரவத்தையும் நல்ல பெயரையும் உயிருக்கும் மேலாக மதிப்பர். மற்றவர்களை அதிகாரம் செய்யும்போது கடினசித்தம் உடையவர் போலத் தோன்றும் இவர்கள் உண்மையில் பொன்னுன இருதயம் படைத்தவர்கள். பிறர் கஷ்டம் கண்டு உருகும் இயல்பினர். ஆழ்ந்த மதப்பற்றுடைய இவர்கள் எந்த மதத்தினராகப் பிறந்தாலும் ஆசார சீலராகவே காணப்படுவர். எல்லோருக்கும் உதவ விரும்பும் இவர்கள் பிறரிடம் ஒரு உதவியும் கோரமாட்டார்கள். சொந்த வேலைகளைவிடப் பொதுக்காரியங்களில் இவர்களுக்கு ஊக்கம் அதிகம் உண்டாகும்.

இங்கு இதனைக் குறிப்பிட்டதன் முக்கிய நோக்கம் உயர் திரு. க. இராமச்சந்திரா அவர்களை நேரில் நன்கு அறிந்தவர்கள், மேற்கூறிய குணங்கள் யாவும் அவரிடம் மிளிர்வதை நன்கு அறிந்திருப்பார்கள் என்பதற்காகவே.

சில ஊர்களிலே பிறப்பதனுல் சிலருக்குப் புகழ் உண்டு. சிலர் சில ஊர்களிலே பிறப்பதனுல் ஊருக்குப் புகழ் உண்டு. நயினுதீவிலே பிறந்ததனுல் திரு. இராமச்சந்திரா அவர்களுக்கும் திரு. இராமச்சந்திரா அவர்கள் பிறந்ததனுல் நயினுதீவுக்கும் புகழ் உண்டாயது. இப்படி வாய்ப்பது மிக அருமை. அவருடைய ஆத்மீக வாழ்க்கைக்கு நயினுதீவின் கிராமியச் சூழல் பொருத்தமாக அமைந்தது எனலாம். ஆனுல் அவரது பிற்கால வாழ்க்கைத் தத்துவத்தின்படி அவரை ஒரு ஊரற்றவர், நாடற்றவர் என்றே சொல்லத் தோன்றும்.

கதிரேசு புதுப்பணம் படைத்தவர். அவரது வாழ்வு ஜமீன்தாரின் வாழ்வு போல அமைந்தது. வள்ளியம்மை நாகம்மாள் கோயில் தர்மகர்த்தாவினுடைய மகள். அதனுல் அக்குடும்பத்திற்கே ஒரு தனி மதிப்பு. இந்தக்காலத்தில் சில தர்மகர்த்தாக்களின் குடும்பங்கள் கோயில் வருமானத்தைக் கொண்டே நடைபெறுவதைக் கண்கூடாகக் காண்கின்ருேம். கோடேறி வழக்காடுவதும் இப்பணத்தைக் கொண்டே நடைபெறுகிறது. ஆனுல் வள்ளியம்மையாரின் பர்த்தா இந்தக் கோயிலுக்குச் சென்ருல் குத்து விளக்கில்தானும் தொடக் கூடாது என்று சொல்லுவாராம். காரணம்:- குத்துவிளக்கிலே தொட்டால் கையில் எண்ணெய்படும். கையில் பட்ட எண்ணெயை இல்லாமல் செய்வதற்காகத் தலையிலே பூச வேண்டி வரும். கோயில் சொத்தினைத் தீண்டக்கூடாது

என்று சொல்வார்களாம். எத்தனையோபேர்களின் கர்மச் சொத்துக்கள் கோயிலுக்கு வந்து சேருகின்றன. அதனைத் தீண்டுபவன் அந்தக் கர்மத்தையும் சேர்த்து அநுபவிக்க வேண்டும் என்று சொல்லுவார்கள்.

கதிரேசுவின் பரம்பரையினருக்கு வீரபத்திர கோயில் சொந்தமானது. வாள் வழிபாடு நடக்கும். வீரவாகு கோயில் என்றும் சொல்லுவர். அக்கோயிலிலே பெரும் பூசை பெரும் பொங்கல் நடைபெறும். ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் பூசைக்கு வருவர். பூசைக்கு வராது வீட்டிலிருப்பவர்களுக்கும் பூசைச்சோறு அனுப்பப்பெறும். கதிரேசுவின் பிதா நாயக வழுந்து கட்டுபவர். ஒருமுறை நாயக வழுந்துக்கு அரிசி போடுவதற்கு இவ்வள்ளியம்மையை அழைத்தார். அவர் தமது தந்தையாரைக் கேட்டார். பலி கொடுக்கிற கோயிலில் சென்று நீ அரிசி போடக் கூடாது என்று தந்தையார் மறுத்து விட்டார். இவ்வாண்டு தொடக்கம் பலி நிறுத்தம் ஏற்பட்டால் நீ சென்று அரிசி போடலாம் என்றார். அவ்வண்ணமே பலி நிறுத்தப் பட்டது. நாகம்மாள் கோயில் தர்மகர்த்தாவினுடைய மகள் நாயக வழுந்துக்கு அரிசிபோடுவது பெரிய மதிப்பு என்று மாமனார் கருதினார். இன்று வரை எந்தக் கோயில் பொங்கலிலும் நாயக வழுந்துக்கு ஒரு பெண் அரிசி போட்ட செய்தியை நாம் கேள்விப்படவில்லை. ஒரு பெண்ணுக்கு எத்தகையதான ஒரு உயர்வான இடம் அளிக்கப்பட்டது என்பதை எம்மால் இப்போ உணரமுடிகிறது.

கதிரேசு வெளிநாட்டுக் குடிவகை கொந்தருத்து எடுத்தவர். அதனால் பணம் தண்ணீர்பட்டபாடாய்ப் புரண்டது. கதிரேசு கடையில் சாமியாரின் பக்தன். அதனால் கடையில் சாமியாரைப்போல் தானும் குடிவகை உபயோகித்து மாமிசமும் சாப்பிடப் பழகிக் கொண்டார். வள்ளியம்மை பிறவிச் சைவம். என்றாலும் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் அவர் தவறியது இல்லை. வள்ளியம்மை தெய்வீக நிலையில் உயர்ந்து நின்றார். இதனால் கதிரேசு தன் மனைவியார்மீது தனி ஒரு அன்பும் அபிமானமும் வைத்திருந்தார்.

கடையிற் சுவாமிகளின் தொடர்பினாற்போலும் கதிரேசுவிடம் சாதிவித்தியாசம் பாராட்டுவது கிடையாது. சமரச சன்மார்க்கியாக வாழ்ந்து வந்தார். தந்தையிடமிருந்து வந்த அந்த முதுசொம்தான் இன்றும் திரு. இராமச்சந்திரா அவர்களிடம் விளங்குவதைக் காண்கிறோம்.

திரு. இராமச்சந்திரா அவர்கள் பிறந்தபோது தந்தையாரிடம் இருபத்தைந்துக்கு மேற்பட்ட பசுக்கள் நின்றன. வீட்டில் பாலுக்கும் மோருக்கும் நெய்யுக்கும் தயிருக்கும் பஞ்சம் இல்லை. பானை நிறைந்த மோர் எல்லா நாளும் எந்த நேரமும் இருக்கும். போவோர் வருவோர் எல்லோரும் மோர் விரும்பிக் குடிப்பர்.

கதிரேசு வியாபாரத்தில் நாட்டம் கொண்டவர், சங்கு வியாபாரம், புகையிலை வியாபாரத்தோடு கள்ளு வியாபாரமும் செய்தவர். இவர் கள்ளுவியாபாரம்செய்வது வள்ளியம்மைக்கு எள்ளள வேனும் விருப்பம் இல்லை. பாடுபட்டு உழைக்கிற பணத்தைக் கள்ளுக் குடித்துச் செலவு செய்துவிட்டு வெறுங் கையோடு வீட்டுக்குத் திரும்புகிற குடிகாரர்களை வள்ளியம்மை நேரில் பார்த்திருக்கிருர். அதுவும் அல்லாமல் குடியால் சீரழிந்த குடும்பங்களுக்குக் கணவனை அறியாமலே பண உதவியும் செய்து வந்தார். இந்தச் செய்கைதான் கள்ளுவியாபாரத்தைக் கணவன் செய்யவிடக்கூடாது என்ற எண்ணத்தை வள்ளியம்மையின் உள்ளத்தில் உறுதிபெறச் செய்தது. கணவனுரிடம் கள்ளு வியாபாரத்தை நீங்கள் விடத்தான் வேண்டும் என்று பரிவுடனும் உறுதியுடனும் கேட்டார். அவரும் மறுப்புச் சொல்லாமல் விட்டுவிட்டார். கதிரேசுவுக்கு வள்ளியம்மையார் மந்திரிபோல அமைந்தவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்திய தலயாத்திரை செய்த முதல் குடும்பம் கதிரேசுவின் குடும்பமாகும். பாம்பன் சுவாமிகளைத் தரிசித்து அவருடைய ஆசியைப் பெற்ற பெருமை கதிரேசுவுக்கு உண்டு. தந்தையிடமும் தாயிடமும் உள்ள இந்தப் பண்புதான் உயர்திரு. இராமச்சந்திரா அவர்களைப் பாரதநாட்டுத் திருத்தலங்களையும், மகான்களையும் தரிசிக்கத் தூண்டியது என்று சொல்லலாம். ரமண பகவானின் தொடர்பு திரு. இராமச்சந்திரா அவர்களுக்கு ஏற்பட்ட பின்பு ஆண்டுதோறும் தவருது யாத்திரை செய்துள்ளார்கள். இலங்கைப் புகையிரதப் பகுதியில் வேலை செய்தவர்களில், இந்திய யாத்திரைக்குத் தமது புகையிரத ஆணைச்சீட்டை முறையாக உபயோகித்த பெருமை திரு. இராமச்சந்திரா ஒருவருக்கே உரியதாகும்.

கதிரேசுவுக்கு சுவாமி விவேகானந்தர் மீது ஒரு தனி அலாதிப் பிரியம். சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்தபோது

சுவாமிகளைத் தரிசிக்கும் பாக்கியம் கதிரேசுவுக்குக் கிடைத்தது. கதிரேசுவின் குரு இளையவி என்பவராகும். குருவும் சீடனும் சேர்ந்தே விவேகானந்தரைத் தரிசிக்கச் சென்றனர்.

யாழ்ப்பாணம் கதிரேசன் கோயிலில் விவேகானந்தருக்கு வரவேற்பு நிகழ்ந்தது. கு. வெங்கடாசலம் செட்டியார் வெள்ளிக்குடத்தில் வெந்நீர் கொண்டு வந்து சுவாமிகளுடைய திருப்பாதங்களைக் கழுவினர். விவேகானந்தர் கதிரேசன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தவகையை உற்றுக்கவனித்த குருவும் சீடனும், "சுவாமி சுகமாயிருக்கிறீர்களா?" என்று விவேகானந்தர் கதிரேசப் பெருமானைக் கேட்பது போலிருந்தது எனப் பேசிக்கொண்டனர். கதிரேசுவுக்கு தீவுப்பற்று மணியகாரன் வைத்த பெயர் வீரகத்தி என்பதாகும். அவருடைய வீரம் நோக்கிக் காரணப் பெயராகவே அமைந்துவிட்டது.

கதிரேசுவின் வேதநூல் மகாபாரதம் ஆகும். வள்ளி அம்மையாரின் வேதநூல் கந்தபுராணம் ஆகும். கதிரேசுவுக்குக் குரு இளையவி என்று பார்த்தோம். இளையவியின் குரு தாயுமானுர் ஆகும். கதிரேசுவிடமும் அவர் அருமை மகன் இராமச்சந்திராவிடமும் காணப்பட்ட சமரச சன்மார்க்கம் பரம்பரையாக வந்த சொத்தாகும். கதிரேசு பலவழிகளில் பணம் சம்பாதித்தவர். ஆனுலும் கோயில் சொத்து ஒரு சதமேனும் தன் குடும்பத்திற்குச் சேர்ந்துவிடக்கூடாது என்ற வைராக்கியம் உடையவர். இந்த வைராக்கிய சீலத்தை பிற்காலத்தில் திரு. இராமச்சந்திரா அவர்களிடமும் அவரது பிள்ளைகளிடமும் நாம் கண்கூடாகக் காணமுடிந்தது.

இளையவி மீன்பிடித் தொழில் செய்பவர். ஆனுல் அவர் ஒரு நிஷ்காமியப் பக்தர். வேறுவழியறியாது குலத்தொழிலைப் பற்றின்றிச் செய்து வந்தார். தோணியில் செல்வார். பறியை நீருள் அமிழ்த்துவார். அதற்குள் அகப்படும் மீனைக்கொண்டு தோணியில் திரும்பிவிடுவார். வெள்ளிதோறும் தவருது புனிதமாக கதிரேசுவிடம் வருவார். வெள்ளிக்கிழமைகளில் மீன் பிடிக்கச் செல்லமாட்டார். "பூரணி புராதனி" என்ற தாயுமானுர் பாடலை இளையவி மெய்மறந்து பாடுவார். கதிரேசு மனமொன்றி அனுபவித்துக் கொண்டிருப்பார். ஆனந்தக்களிப்புப் பாடல்களில் அவருக்கு ஒரு அலாதிப் பிரியம்.

இராமச்சந்திரனுருக்கு வயது எட்டு. ஒருநாள் விடப் பாம்பு ஒன்று தீண்டிவிட்டது. அறிவு மயக்கம் ஏற்பட்டு விட்டது. இளையவியைத் தேடி கதிரேசு சென்றுர். இளையவி மீன் பிடிக்கப் புறப்பட்ட நேரம், பாம்பை அழைத்துச் சிரட்டை ஒன்றுக்குள் புகச் செய்தார். பார்வை பார்த்தபின் பாம்பை கடற்கரையில் விடச் செய்தார். இளையவியின்மேல் இராமச்சந்திரனுரின் தாயாருக்கும் ஒரு அலாதிப் பிரியம் இருந்து வந்தது. அவரது இறைபக்தியும் நிஷ்காம்ய சேவையுமே அதற்குக் காரணமாகும். தாயாரின் தமையனுர் பரமலிங்கம். அவர் ஒரு ஆசிரியர். இலக்கியத்திலும், சமய நூல்களிலும் சங்கீதத்திலும் ஈடுபாடுள்ளவர். அவரிடத்தில் பாடம் கேட்டவர்கள் இன்றும் உள்ளனர். அவர் பாடம் சொல்லும் முறை ஒரு தனிப் பாணியாகும். கேட்போர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துவிடும். இராமச்சந்திரனுருக்கு ஒரு ஆண் சகோதரரும் 5 பெண்சகோதரிகளும் உளர்.

# இளமையிற் கல்வி

இராமச்சந்திரனுருக்கு ஐந்து வயதில் ஏடு தொடக்கி வைத்தவர் அவரது தாய்மாமனுராகிய ஆசிரியர் பரமலிங்கம் அவர்களாகும். அந்தக்காலத்தில் தில்லையம்பல வித்தியாசாலை என்று அழைக்கப்பட்ட வித்தியாலயத்திலேதான் வித்தியாரம்பம் நடைபெற்றது. அந்தக்காலத்தில் வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளையவர்கள் புராணங்களுக்குப் பயன் சொல்லும் போது பாடல் வாசிப்பதில் சிறந்து விளங்கியவர் பரமலிங்க ஆசிரியராகும்.

இராமச்சந்திரனுரின் கல்வி 8-ம் வகுப்புவரை தில்லையம்பல வித்தியாலயத்தில் நடைபெற்றது. அப்போது தலைமை ஆசிரியராக இருந்தவர் சிட்னி சின்னத்தம்பி என்பவராகும். கிறிஸ்தவராய் இருந்த சிட்னி சின்னத்தம்பி ஆசிரியர் பரமலிங்கம் ஆசிரியரின் நல்லுறவினுல் சைவ சமயத்தை கடைப்பிடித்து வந்தார். இராமச்சந்திரனுர் தமது 12-ம் வயதில் 8-ம் வகுப்புச் சித்தி அடைந்து விட்டார்.

இராமச்சந்திரனுர் பிறந்த உடனே அவரை நாகம்மாள் கோயிலுக்கு பெற்றுர் விற்றுவிட்டனர். இக்குழந்தைக்குப் பாலாரிஷ்டம் உண்டு. 6 மாதத்திற்கு மேல் வாழாது என்று சோதிடர்கள் கூறினர். தாயாரோ அவன் அம்பிகையின் குழந்தையாகிவிட்டான். அவள் தன்னுடைய குழந்தையைக் காப்பாற்றுவாள். நான் சொல்லியா அவள் அதனைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கூறி முழுப்பாரத்தையும் தேவியிடமே ஒப்படைத்துவிட்டு கவலையின்றி வாழ்ந்துவந்தார். அச்சுவேலியைச் சேர்ந்த மன்மதன் கணபதிசோதிடர், குழந்தையைத் திருவண்ணுமலையில் கொண்டு சென்று விற்க வேண்டுமெனக் கூறினுர். தாயாருக்கோ அம்பிகைமீது அபார நம்பிக்கை. திருக்கார்த்திகை தினத்தன்று நாகம்மாள் சந்நிதானத்திலேயே தாயார் குழந்தையை விற்றுர். அக் குழந்தையை விலைக்குப் பெற்றுக்கொண்டவர் நாகலிங்கக் குருக்கள். தேவியின் பெயரமைந்த குருக்கள் வாங்கியதிலிருந்தே அம்மையாரின் அபார அன்பு தெளிவாகிறது. இராமச்சந்திரனுருக்கு தீட்சாகுருவாக ஊரெழு சபாபதி குருக்களும், ஆத்மீக குருவாக நாகலிங்கக் குருக்களும் விளங்கினர். திருவண்ணுமலையிலே குழந்தையை விற்கவேண்டுமென்று சோதிடர் கூறிய

கூற்றும் பொய்யாகவில்லை. பிற்காலத்திலே இராமச்சந்திரனார் பகவான் ரமணமகரிஷிகளுக்கு தாமே தம்மை முழுவதாக ஒப்புக் கொடுத்து அவரது உத்தம சீடராக விளங்கினார். இத் தொடர்பை சோதிடரால் வேறு எவ்வாறுதான் உலகினருக்கு உணர்த்த முடியும்.

தாயாரோ எழுத்தறியாதவர். ஆனால் கோயில் புராணப் படிப்பு மூலம் ஆத்மீக அறிவையும், சமயவாழ்வையும் பெற்றுக்கொண்டவர். "கற்றதனால் ஆயபயனென் கொல்" என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்தவர்.

தகப்பனார் இலட்சியவாதியல்ல. ஆனால் தாயாருடைய ஆத்மீகப்பண்புகளே இராமச்சந்திரனாரின் வாழ்க்கைக்கு உரமிட்டவை என்று துணிந்து கூறலாம்.

அம்மையாரின் சமய அநுட்டானங்கள், காருண்யம், தாராளமனப்பான்மை என்பனவே, இராமச்சந்திரனாரின் மனப்போக்கை உருவாக்கியன என்று கூறலாம். எல்லாவற்றிலும் பார்க்க அம்மையாருக்கு தெய்வ சக்தியில் இருந்த நம்பிக்கை இராமச்சந்திரனாருக்கு ஒரு அழியா வழிகாட்டியாகவும் ஆர்வத்தை மென்மேலும் ஊட்டுவதாகவும் இருந்தது. பெற்றோரின் முன்மாதிரியான வாழ்வினால்தான் குழந்தைகள் உருவாகிறார்கள் என்பதை இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

10 வயதிலேயே முதன் முதலாக கடவுள் நம்பிக்கையின் வல்லமையைத் தமது தாயாரிடமிருந்து உணரக் கூடியதாக இருந்தது. அன்னையாருக்கு நோய் கண்டது. 6 மாதங்களாக அன்ன ஆகாரம் எதுவும் உட்செல்ல முடியவில்லை. கடுமையான குன்மநோய். அக்காலத்தில் கிடைக்கக்கூடிய நல்ல மருந்துகள் எவற்றாலுமே குணப்படுத்த முடியவில்லை. இறுதியில் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்குச் சென்று பல வாரங்கள் கழிந்தும் ஒரு முன்னேற்றமும் காணப்படவில்லை. இராமச்சந்திரனார் தாயாருடனேயே இருந்து தொண்டு புரியும் வாய்ப்பைப் பெற்றார். அல்லும் பகலும் அன்பு மகனார் அன்னையுடனேயே இருந்தார்.

ஒருநாள் கிறிஸ்து மதப் போதகர்கள் இருவர் இவர்கள் இருந்த அறைக்குள் நுழைந்தனர். மனச்சோர்வுடன் இருந்த

அம்மையாரை அணுகி இரட்சகர் இயேசுவிடம் சரண்புகுந்தால் உடனே சுகம் கிடைக்கும் என்று கூறினர். அப்படிப் பலர் சுகம் அடைந்த சரித்திரங்களை ஆதாரபூர்வமாகக் கூறத் தொடங்கினர். இயல்பிலேயே சங்கோசியாக வாழ்ந்த இராமச்சந்திரனுரின் காதில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் எங்கிருந்தோ ஒரு தைரியம் உதித்தது. அப்பர் சுவாமிகளுடைய சரித்திரத்தை விமர்சித்தார். இராமச்சந்திரனுரின் இந்த மறுமொழி மதபோதகர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆத்திரம் கொண்டு அறையைவிட்டு ஏகினர்.

இந்த நிகழ்ச்சி அம்மையாரின் உள்ளத்தில் ஒரு விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தியது. அடுத்தநாட் காலையிலேயே வைத்தியசாலையைவிட்டு ஏகினுர். தாம் வழிபட என்றே தகப்பனுர் ஊரில் கட்டிய முருகன் கோயிலில் தஞ்சம் அடைந்தார். நோய் மாறும்வரை முருகன் கோயிலைவிட்டு அகலுவதில்லை என உறுதிபூண்டார். அன்னையாருடன் தனயனும் கோயிலிலேயே குடிபுகுந்து விட்டார். 6 மாத காலமாக பள்ளிப்படிப்பையே மறந்தார். முருகன் கோயில் இருவருக்கும் தவச்சாலையாகவே மாறியது.

அவர்கள் கோயிலினுள் புகுந்த 9-ம் நாள் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அர்ச்சகர் சாயங்காலப் பூஜை முடித்து வீடு சென்றுவிட்டார். அன்னையும் மகனும் உறக்கத்திற்குச் சென்றனர். நடுநிசி 12 மணியிருக்கும். திடீரென மணி அடித்துச் சத்தம் கேட்டது. அன்னையார் சுருட்டிவாரி எழுந்திருந்தார். கோயில் கதவுகள் திறந்திருந்தன. கற்பூர தீபம் அசைந்து கொண்டிருந்தது. தாய் அவதானித்தார். ஐயர் மூடிச்சென்ற கதவை யார் திறந்தார்கள்? இந்த நேரத்தில் யார் பூசை செய்ய முடியும்? மகனைத்தட்டி எழுப்பினுர். மூலஸ்தானத்தில் தோற்றிய முருகப்பெருமானின் அழகுத் தோற்றத்தை இருவரும் மெய்மறந்து இமைகொட்டாது பார்த்து ரசித்தனர். வலக்கையால் முருகப்பெருமான் அபயம் கொடுப்பதை ஊனக் கண்களால் கண்டு மெய்மறந்தனர்.

இக்காட்சி இளம் உள்ளம் படைத்த இராமச்சந்திரனுருக்கு ஒரு கனவுபோல இருந்தது. ஆனுல் அது உள்ளத்தை விட்டு என்றும் நீங்காத நினைவாக மாறிவிட்டது. ஆனுல் அந்த நேரத்தில் தாயும் தனயனும் தங்களால் வாய்விட்டுச் சொல்ல முடியாத ஒரு மாபெருஞ் சக்தியின் முன்பு நிற்பதை உணர்ந்தனர்.

இந்த அனுபவத்தை வாய்விட்டுக் கூறிஞல் யாராவது நம்புவார்களா? வாய்விட்டுத்தான் கூற முடியுமா? அங்ஙனம் கூறிஞலும் ஏதோ கனவு கண்டிருக்க வேண்டும் என்றுதான் ஒரு சிலர் கூறுவர். ஒருவர் அனுபவத்தை இன்னெருவர் புரிந்துகொள்வது இயலாத கருமம் ஒன்ருகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வள்ளிமலேச்சுவாமிகளே நெடுங் காலம் வாட்டிய குன்ம நோயிலிருந்து காப்பாற்றி திருப் புகழ்ப் பிரசாரம் செய்ய வைத்த பழனியாண்டவன் திருவருளே வாசகர்களுக்கு நினேவூட்டாமல் இருக்கமுடியாது.

இது நிகழ்ந்து 3ம் நாள் இருவரும் வீடு திரும்பினர். அன்று தொடக்கம் 37 ஆண்டுகளுக்கு அன்னேயார் சுகவீனம் என்று பாயில் படுத்ததே கிடையாது. அன்னேயாரின் நம்பிக் கைக்கும் வைராக்கியத்திற்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகும். இந்த நம்பிக்கையும் வைராக்கியமும் அன்னேயாரிடமிருந்து மகனுக்குக் கிடைத்த அரும்பெருஞ் சொத்தாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்த வாணிபச் செட்டியார் ஒருவர் கதிரேசுவின் சினேகிதர். செட்டியார் நயினுதீவுக்குச் சென்ருல் கதிரேசுவோடுதான் தங்குவார். செட்டியார் தமிழையும் சைவத்தையும் இரு கண் எனப் போற்றி வளர்த்தவர். அவர் பாரதி பாஷிய வித்தியாலயத்திற்கு மனேச்சராகவும் தலேமை ஆசிரியராகவும் இருந்தவர். இராமச்சந்திரனர் 8ம் வகுப்புச் சித்தி பெற்று வீட்டில் இருந்ததைக் கண்ட கோவிந்தச் செட்டியார் கதிரேசுவிடம் அவரைத் தம்மோடு அனுப்புமாறு கேட்டார். மகனுடைய எதிர்கால நன்மை கருதி மகன் யாழ்ப்பாண நகரத்தில் இருப்பதும் படிப்பதும் நல்லதெனக் கதிரேசு கருதினர். அட்டி சொல்லாமல் இராமச்சந்திரனரைச் செட்டியாருடன் அனுப்பி வைத்தார்.

இராமச்சந்திரனர் தமது 13ம் வயதில் பாரதி பாஷிய வித்தியாலயத்தில் மாணவ ஆசிரியரானர். அங்கு 6 மாதங்கள் கடமையாற்றிய பின் அந்த ஆசிரியரின் ஆலோசனேப்படி மத்திய கல்லூரிக்கும் அதன்பின் ஹில்னர் கல்லூரிக்கும் சென்று கல்வி கற்ருர். அங்கு லத்தீன் மொழியைத் தவிர மற்றைய பாடங்களில் எல்லாம் மிகத் திறமையாக விளங் கினர். இதனல் ஆசிரியர்கள் எல்லாருடையவும் அன்பையும் நன்மதிப்பையும் பெற்ருர். அக்காலத்தில் உப அதிபரா யிருந்த எஸ். ஏ. எட்வேட் என்பவர் இவர்மேல் தனிப்பட்ட

தொரு விருப்புடையவராக விளங்கினுர். இவரது திறமை நோக்கி அடுத்தடுத்து இருதடவைகளில் இவ்விரண்டு வகுப்பு களைக் கடந்து செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

இதற்கு முக்கிய காரணம் இளமையிலேயே இவர் தாய் மொழியில் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தமையே. ஒரு மொழியில் தகுந்த அறிவு பெற்றுவிட்டால் மற்றையமொழி களைக் கற்றுக் கொள்வதில் கஷ்டம் இருக்காது என்ற உண்மையை இராமச்சந்திரனுரின் சொந்த அனுபவத்திலி ருந்தே எம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

ஆங்கிலம் படிக்கத் தொடங்கி 4-ம் ஆண்டிலேயே கேம்பிரிட்ஜ் சீனியர் வகுப்பை அடைந்தார். கணிதத்தில் அவரது திறமையைக் கண்டு பாராட்டிய ஆசிரியர் (பிற் காலத்தில் கணிதப் பேராசிரியராகப் பல்கலைக் கழகத்தில் இருந்த) F. H. V. குலசேகரம் அவர்கள் லண்டன் பல்கலைக் கழகப் பட்டதாரியாவதற்கு உயர் கல்வியைப் பெறுமாறு தூண்டினுர்கள். மாணவன் அதி திறமைசாலியாய் இருந்த போதிலும், ஆசிரியருடைய உதவி தாராளமாக இருந்த போதிலும், பெற்ருர் பொருள் வசதிபடைத்தவராக இருந்த போதிலும், அவரது விதியும் இறைவனுடைய திருவுளச் சித்தமும் பல்கலைக் கழகப் படிப்புக்கு எதிராக இருந்தன.

"வருத்தான் வருத்தவகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தலரிது"

என்ற குறள் இந்த இடத்திலே நமக்கெல்லாம் ஆறுதல் தருகிறது.

## துணிவான செயல்வீரன்

வளர்ந்து வரும் இளம் இராமச்சந்திரனுர் துணிவுமிக்கவர். இது அவர்கள் குடும்பத்தினரின் பரம்பரைச் சொத்து. மற்றையோரைப் போல வளமையான வழியைப் பின்பற்ருது புதிய திசை நோக்கிச் செல்லச் சித்தம் கொண்டார். செல்லும் வழி கடினமானதாளுலும் புதியவழியில் சென்று வெற்றிகாண வேண்டுமென்று ஒரு ஆர்வம்.

தாமாகவே ஆராய்ந்து புதிய விடயங்களேக் காணவேண்டுமென்ற உள்ளத்துடிப்பு அதிகம் உடையவர். 18 வயது வரை மற்றையோருடன் தலைநிமிர்ந்து பேசுவதிலேயே சங்கோசியாக வாழ்ந்த இராமச்சந்திரனுருக்கு இப்போது அவரது இயல்பையும் மீறிய ஒரு தைரியம் பிறந்தது. அதுவரை காலமும் தம்மோடு உடன் பிறப்பாக இருந்த வெட்கத்தைக் களேந்து எறிந்தார். துணிவுடன் உலகை நோக்கிப் புறப்பட்டார்.

தந்தையார் தென்னிந்தியத் தலயாத்திரைக்குச் சென்றிருந்தார். அப்பொழுது இராமச்சந்திரனுரின் உள்ளத்தில் திடீர்த்தீர்மானம் ஒன்று உதித்தது. தாயாருக்கோ அன்றி ஆசிரியருக்கோ ஒரு வார்த்தைகூடச் சொல்லிக்கொள்ளாமல் யாழ்ப்பாணத்தைவிட்டு கொழும்பிற்குப் பிரயாணமானுர். அங்கு தொழில் நுட்பக் கல்லூரியில் புகையிரதத் துறையில் 1914-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒரு மாணவனுகச் சேர்ந்தார். அக்கால இளேஞர்களுடைய உள்ளத்தில் அரசாங்க உத்தியோகமே இடம்பெற்றிருந்தது. போதிய பாதுகாப்பும் முன்னேறுவதற்கேற்ற வழியும் நிறைந்தது அரசாங்க சேவை என்பதை அக்கால இளேஞர் நூற்றுக்கு நூறுவீதம் நம்பினர். வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இதனேத் தவிர வேறு வழி இல்லை எனக்கண்டனர். இத்தகைய எண்ணமே திரு. இராமச்சந்திரனுரின் உள்ளத்திலும் குடிபுகுந்தது. ஆகவேதான் அவரும் அரசாங்க சேவையை நாடினுர்.

ஒரு சில அரசாங்க சேவையாளர் தாம் உண்டு தமது தொழில் உண்டு என்றுதான் இருப்பார்கள். அக்கம் பக்கத்திலே ஒரு உலகம் இருக்கிறது என்பதைக் கனவிலுங்கருதார். உலகில் தினமும் எல்லா வழிகளிலும் மாற்றம் நிகழ்ந்து வருவதையும் அறியார். அதற்குத் தக்கதாகத் தமது வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதையும் விரும்பார்.

இன்ஞெரு பகுதியார் இருக்கிருர்கள். அவர்கள் வெறும் பன்ஞடை போன்றவர். உலகத்திலிருந்து வரும் நல்ல தாக்கங்களை எல்லாம் ஒழுக விட்டு விட்டு தேவையற்றவைகளைத் தமது உள்ளத்திலே ஏந்தி வைத்திருப்பதோடு வேண்டாததீய பழக்கத்திற்கும் தம்மை அடிமையாக்கி வைத்திருந்தார்கள்.

திரு. இராமச்சந்திரா அவர்கள் தமக்கும் தமது தொழிலுக்கும் புறம்பாக உள்ள ஆத்மீகம், சமூகசேவை, உலக அரசியல் நோக்கு, ஆகியவற்றிலும் ஓய்வு நேரங்களில்கூடிய கவனம் செலுத்திவந்தார். புகையிரதச் சேவையில் இருக்கும் போது ஒரு நாள் காலை அரசாங்க சேவையிலும் பார்க்க விரிந்த துறைகள் பல வேறு இருப்பதை உணர்ந்தார். மறக்க முடியாத ஒரு சம்பவம் நிகழ்ந்தபின்பே இம்மாற்றம் ஏற்பட்டது.

"மோணிங் லீடர்" என்ற ஆங்கிலத் தினசரி அக்காலத்தில் வெளிவந்ததை யாவரும் அறிந்திருப்பர். அதன் ஆசிரியர் துணிவும், நேர்மையும், கடுமையாகக் கண்டிக்கும் இயல்பும் உடையவர். இத்தகைய ஆசிரியருக்குப் புகையிரத மேடையில் பிரித்தானியராச்சியத்தின் உயர்ந்த உத்தியோகத்தரால் கௌரவமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்தருணத்தில் இராமச்சந்திரனும் சகாக்களும் வேறு சில உத்தியோகத்தர்களும் அதே மேடையின் எதிர்ப்பக்க மூலையில் ஒதுங்கி நின்றனர்.

அந்தப் புகையிரதம் இலங்கை இந்தியப் புகையிரதச் சேவை அங்குரார்ப்பணம் செய்வதற்காக முக்கிய பிரமுகர்களை ஏற்றிச் சென்றது. புகையிரத ஸ்தானத்தைவிட்டு புகையிரதம் செல்லத் தொடங்கிய பின் சிரேஷ்ட லிகிதர் ஒருவர் மேலே கௌரவிக்கப்பட்டவரைச் சுட்டிக்காட்டி அந்தப் பிரபல பத்திரிகை ஆசிரியரான (மிஸ்ரர். டி. சௌசாவும்) முன் ஒரு காலத்தில் புகையிரதப் பகுதியில் லிகிதராக இருந்தார் என்று திரு. இராமச்சந்திராவுக்கும் மற்றையோருக்கும் அறிமுகம் செய்துவைத்தார். இச் சம்பவங்களும் இக் கூற்றும் அவருடைய நம்பிக்கைக்கு உரம் அளித்தன.

காலகெதியில் திரு. டி. சௌசா திரு. இராமச்சந்திரனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதும் உதவி தரக்கூடியதுமான சிறந்த நண்பரானர்- புகையிரதத் தொழிலாளர் சங்கத்தைத் தொடக்கி வைத்தவருள் உயர்திரு. இராமச்சந்திராவும் ஒருவராவர். இவர்கள் இருவருடையவும் சந்திப்பின்

பயனே புகையிரதத் தொழிலாளர் சங்கம் என்றும் கூறலாம். தொழிலாளரின் கஷ்டம் நிறைந்த காலங்களில் திரு. இராமச் சந்திராவுக்கு சௌசா அவர்கள் வேண்டிய உதவிகள் புரிந் துள்ளமை என்றும் மறக்கத்தகுந்ததல்ல. பிரித்தானிய குடி யேற்ற நாட்டு அரசாங்கத்தின் கீழ், மற்றைய தேசாபிமானி களைப் போல் திரு. இராமச்சந்திராவும் கஷ்டங்களை அனுப விக்க வேண்டி இருந்தது.

இதே காலத்தில் வீட்டைவிட்டு புதுமையாக வெளியேறிய இராமச்சந்திரா வாழ்க்கையின் பல கோணங்களிலும் புதிய புதிய அனுபவங்களை அநுபவிக்க நேர்ந்தது. தொழில் நுட் பக் கல்லூரியைச் சேர்ந்ததும் தமது அபிமானத்திற்குரிய ஆசிரியர் ஒருவரை ஆணையாளர் ஆக்கும் முயற்சியில் ஈடு பட்டு அதில் வெற்றியும் கண்டார். புகையிரதப் பயிற்சி மாண வர்களிற் சிலர் "சிலோன் லைற் இன்வென்றி" (C. L. I.) என் னும் பட்டாளப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். கல்லூரி அதி பரின் ஊக்கத்துடன் இப்பட்டாளப் பிரிவு ஆக்கப்பட்டதுடன் இராமச்சந்திராவும் அதில் சேர்ந்துகொண்டார்.

யுத்த சேவைப் பயிற்சி முடிந்ததும் முதலாவது மகா யுத்தமும் தொடங்கியது. இராமச்சந்திரா இருந்த பிரிவும் ஆயுதந்தாங்கி யுத்தம் செய்யவேண்டி ஏற்பட்டது. இவரது பூட்டனும் ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தில் யுத்தம் செய்த சரித்திரத்தை முன்பு பார்த்தோம். இன்று இராமச் சந்திரனுரின் இரண்டாவது மகனுர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் பொலிஸ் மா அதிபராக இருந்து குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாகவும் மேலதிகாரியாகவும் இருந்து செயற்கருஞ் செயல்களைச் செய்து வருவதைப் பத்திரிகை வாயிலாகவும் வானொலி வாயிலாகவும் அறிகின் ரேம். பல வெளியூர் ஸ்தானங்களில் சேவை செய்தபின் அவர் புகையிரதப் பகுதி நிர்வாகக் கிளையில் முதலில் கடமை யாற்றினுர். இத்துறையில் கடமையாற்றி வரும்போது மீண்டும் 6 மாத காலத்திற்கு போர் வீரனுகக் கடமையாற்ற வேண்டி ஏற்பட்டது. இவரை இன்றும் உத்தியோக காலத் தின் பிற்பகுதியிலும் தூய வெள்ளை உடையுடனும் நரைத்த முடியுடனும், அருள் ஒழுகும்கண்களுடனும் உருகிய உள்ளத் துடனும் கண்டவர்கள் அரை நூற்றுண்டுக்கு முன் இவர் காக்கி உடைதரித்து நாட்டின் பல பாகங்களிலும் துப்பாக்கி ஏந்தித்திரிந்து கடமையாற்றினுர் என்பதையே நம்பமாட் டார்கள்.

பட்டாளச் சேவை முடிந்தது. இரண்டுகிழமை விடுமுறை கிடைத்தது. இன்றைய இளைஞர்களாய் இருந்தால் என்ன செய்திருப்பார்கள் என்பதை வாசகர்களின் கற்பனைக்கே விட்டுவிடுகின்றேன். இராமச்சந்திரா தென்னிந்திய தல யாத்திரையை முதன் முதலாகத் தொடர்ந்தார்.

எல்லாருக்கும் இன்று சனி, ஞாயிறு விடுமுறை நாட்களாகக் கிடைக்கின்றன. ஒரு சிலர் வீட்டுக் கருமங்களைக் கவனிக்கின்றனர். வேறு சிலர் வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படும் வகையில் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இன்னொரு சிலர் கோயில்களை நாடியும், தீர்த்தங்களை நாடியும், யாத்திரை செய்கின்றனர். பிறிதொரு சிலர் சத்சங்கத்தை நாடி மகான்களிடம் செல்லுகின்றனர். இன்னுமொரு பகுதியார் கூடிக்குடித்துக் கும்மாளம் அடித்து மிருக நிலைக்குத் தம்மைத் தாழ்த்திக் கொள்ளுகின்றனர். இந்த விபரீத நிலைக்குக் காரணம் என்ன? அவரவர் மனமே காரணமாகும். ஒரே நாள் ஒரே மாதிரி எல்லாருக்கும் கிடைக்கிறது. பயன்படுத்தும் முறைதான் வித்தியாசமானது.

இராமச்சந்திரா அவர்கள் சென்னையில் சைதாப்பேட்டையில் ஒரு நண்பருடைய இல்லத்தில் தங்கியிருந்தார். இந்தியா தனது அடிமைத் தளையை அறுத்தெறிய கங்கணம் கட்டிக் கொண்டிருந்த காலம்.

மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவை விட்டு இந்தியா வந்திருந்த காலம். மகாத்மா காந்தியின் அரசியல் குருவாகிய Q. K. கோகலேயின் சொற்படி நாட்டின் உண்மையான நிலையையும் மக்கள் படும் கஷ்டங்களையும் மகாத்மா காந்தி இந்தியா முழுவதும் சுற்றித் திரிந்து தெரிந்து கொண்ட காலம். இங்குதான் இராமச்சந்திரா அவர்கள் முதன் முதலாக மோகன்தாஸ் காந்தியைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். காந்தியினுடைய சென்னைப் பிரசங்கமும் அதில் அவர் வள்ளியம்மை என்ற தென்னாபிரிக்க சத்தியாக்கிரகியின் தியாகம்பற்றிய குறிப்புரையும் இராமச்சந்திரனின் உள்ளத்தைக் கவர்ந்தன.

சைதாப்பேட்டையில் தான் இருக்கும் வீட்டு எஜமானனிடம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். உலகத்திலேயே பெரிய ஒரு மனிதனை இன்று நான் தரிசித்தேன். பாரத நாட்டின் தவப்புதல்வனைக் கண்டேன். இன்றே எனது

பிறவி புனிதம் அடைந்தது என்றெல்லாம் தனது மகிழ்வைத் தெரிவித்தார். ஆனல் எந்தவீட்டில் இவர் தங்கி இருந்தாரோ, அந்த வீட்டின் எஜமானன் ஒரு தலைசிறந்த துப்பறியும் உத்தியோகத்தராக இருந்தார். ஆகவே இராமச்சந்திரனரின் இந்த ஆர்வத்தைக் கண்டு வீட்டு எஜமானருடைய மனம் துணுக்குற்றது. அவசரப்பட்டு எதையும் தீர்மானித்துவிடக் கூடாது என்றும், நாட்டில் காந்தியைப்போல் பல தீவிர வாதிகளும் சதிகாரர்களும் அரசியல்வாதிகளும் உள்ளனர் என்றும் அறிவுறுத்தினர். அந்தத்துப்பறியும் உத்தியோகத்தர் இவ்வாறு சொல்லி இருவருடைய உத்தியோகத்திற்கும் பங்கம் விளைவிக்கக்கூடாது என்றும் புத்திமதி கூறினர்.

இதே துப்பறியும் உத்தியோகத்தர் அக்காலத்தில் சென்னை மாகாணத்தில் காந்தியினுடைய இயக்கங்களையும் செயல்களையும் கண்காணித்து வந்தார். 8 வருடங்களுக்குப் பின் தற்செயலாக மைலாப்பூரில் இராமச்சந்திரா அவர்கள் இந்த உத்தியோகத்தரைச் சந்திக்க நேர்ந்தது. சந்தித்த உடனே அவர் கூறிய முதல் வார்த்தை 'நீர் ஒரு தீர்க்க தரிசி' என்பதாகும். இந்தியாவில் வாழும் ஒரு பெரியார் என்றும் உலகப் பெரியார் என்றும் யாரைச் சொன்னீரோ அது சரியாகிவிட்டது. இக்கால இடைவெளிக்குள் தான் மோகன்தாஸ் காந்தி அவர்கள் மகாத்மாகாந்தி என்ற பட்டப் பெயரைப் பெற்றுர்.

# தொழிற் சங்க இயக்கத்தின் முன்னேடி

இந்திய யாத்திரையில் இருந்து திரும்பிய உடன் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய முக்கிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. இந்தியாவிலிருந்து இலங்கை வரும் போது காந்தியின் இலட்சியங்களையே நெஞ்சத்தில் சுமந்து கொண்டு வந்தார். மனதை முழுதாகக் கவர்ந்த அந்த இலட்சியங்களைப் பின்பற்றுவதற்கு இச்சம்பவம் சந்தர்ப்பம் அளித்தது.

பிரித்தானிய குடியேற்ற இராச்சிய காலத்தில் உயர் பதவிகளில் மிகச்சிலவே இலங்கையருக்குக் கிடைக்கக் கூடியன வாய் இருந்தன. போக்கு வரவுப் பரிசோதகர் போன்ற புகையிரதப் பகுதியிலுள்ள சிறுச்சிறு உத்தியோகங்கள்கூட ஐரோப்பிய "காட்"மாருக்குக் கொடுக்கப்பட்டன. சிறு உதவிகளுக்கும் தேசீய லிகிதர்களிடம் செல்லும் புதிதாகப் பதவி உயர்த்தப்பட்ட "காட்" ஒருவர் காட் றாமில் இலங்கையர்களைத் தூஷித்துப் பேசத் தொடங்கினர். ஒருநாள் இவ்வாறு அவர் தூஷித்துப்பேசும்போது அவருக்குக்கீழ் வேலைபார்த்த ஒருவர் 4 கிழமைக்கு முன் அவர்களிடம் சிறு உதவிநாடிவந்த செய்தியை நினைவூட்டினர். இவ்வளவு அகங்காரம் கொண்டு எம்மையெல்லாம் உதாசீனமாகப் பேசுவது உமது பெருந்தன்மைக்குத் தகாது என்றும் சுட்டிக்காட்டினர்.

தனக்குக் கீழ் உள்ள கறுப்பன் ஒருவன் தனக்குப் புத்தி சொல்வதா? தன்னைச் "சேர்" என்றுகூட அழைக்கவில்லை என்ற காரணத்தால் ஆத்திரங்கொண்ட அவர் நேராகப்போக்குவரத்து மனேச்சரிடம் சென்று இந்த லிகிதரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி 24 மணிநேரத்திற்குள் அவருக்கு இடமாற்றம் கொடுத்துவிட வேண்டும் என்றும் வற்புறுத்தினர். இது மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினர். ஒரு வெள்ளைக்காரர் இன்னொரு வெள்ளைக்காரரிடம் முறைப்பாடுசெய்தால் அதற்கு விசாரணை ஏது? அவரது முறைப்பாட்டை அப்படியே ஏற்றுக்கொண்ட மனேச்சர் உடனேயே மலேரியா நோய் நிரம்பிய அநுராதபுரிக்கு இடமாற்றம் செய்தார். லிகிதர் தனது இடமாற்றத்தை ரத்துச் செய்யும்படி ஜெனறல் மனேச்சருக்கு விண்ணப்பித்தார். அதில், தான் பிள்ளை குட்டிக்காரன் என்றும் புது இடத்திற்குச் சென்று வசதிகள் ஏற்படுத்துவதற்கு அவகாசம்

வேண்டுமென்றும் அவ்விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டார். ஜெனறல் மனேச்சர் அவ்விடயத்தில் தலையிட மறுத்ததுமன்றி அடுத்த புகைவண்டியிலேயே அநுரதபுரம் செல்ல வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர் அநுரத புரத்தை அடைந்ததும் நேரடியாகப் புகையிரத நிலைய அதி காரியிடம் சென்று நடந்ததையெல்லாம் ஆதியோடந்தமாகக் கூறினுர். அவமதிக்கப்பட்ட அந்த உத்தியோகத்தர்மீது கருணைகொண்ட புகையிரத நிலைய அதிகாரி, புகையிரத இலாகாவால் அவருக்குத் தகுந்த வீடு கொடுக்கும் வரை பிர யாணிகள் தங்கும் அறை ஒன்றைக் கொடுத்து உதவினுர்.

இந்த விடயத்தை இதன்பின் மாவட்டப் போக்குவரத்து மேற்பார்வையாளருக்கு அறிவித்தார். நாளடைவில் இவ்விட யத்தைக் கவனித்து வந்த இராமச்சந்திரா அவர்களிடம் தஸ் தாவேஜுகள் கிடைத்தன. அநீதி இழைக்கப்பட்ட உத்தியோ கத்தருக்காகக் கவலைப்பட்ட இராமச்சந்திரா இன்னெரு நண் பருடன் இந்த உத்தியோகத்தரைத் தேடிச் சென்ருர். இவர் கள் சென்றபோது அந்த உத்தியோகத்தர் இராசப் பிரதி நிதிக்குக் குறைதீர்க்குமாறு விண்ணப்பிக்கத் தபாற்கந்தோ ருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மூவரும் தபாற்கந் தோருக்குச் சென்று அந்நாள் தேசாதிபதியாயிருந்த சேர். ஜோன் அண்டர்சனுக்கு விண்ணப்பித்தனர். இவ்விண்ணப் பம் 300 சொற்கள் கொண்ட நீண்ட தந்தியாக இருந்தது. இவ்வளவு நீண்ட தந்தியை அனுப்பத் தபால் அதிகாரிதயங்கி அதைக் கடிதமூலம் அனுப்புமாறு கூறினுர். 300 சொற்கள் கொண்ட தந்தி அனுப்பக்கூடாது என்ற விதிமுறையைக் காட்டுங்கள் என்று கேட்டதும் உதவி உத்தியோகத்தரைக் கலந்து ஆலோசித்து விட்டு ஒருவாறு சம்மதித்தார்.

சேர். ஜோன் அண்டர்சன் அக்காலத்தில் அனுதாபமும் நீதி நியாயமும்நிறைந்த ஒரு நிர்வாகியாகப் புகழ்பெற்றிருந்தார். சிங்கள இனத்தவர்களுக்கு 1915-ம் ஆண்டு இனக்கலவரத்தில் முன்னுள் கவர்னர்செய்த கொடுமைகளுக்கு நிவாரணம்அளிக் கும் பொருட்டே இவரைப் பிரித்தானிய அரசாங்கம் அனுப்பி யிருந்தது. மக்களுடைய நன்னம்பிக்கையைப் பெறும் ஆவ லுடைய சேர். ஜோன் மேற் குறிக்கப்பட்ட தந்தியைப் பெற் றுக்கொண்டதாகத் தந்தி மூலம் உடனே பதில் அளித்ததுடன் இவ்விடயம் சம்பந்தமாக விவரமான அறிக்கை அனுப்புமாறு

ஜெனறல் மனேச்சருக்குத் தந்தி அனுப்பினர். இந்த அறிக்கையின் மூலம், இந்த மாற்றப்பட்ட உத்தியோகத்தர், சின்னத்தனம்கொண்ட வெள்ளே உத்தியோகத்தரின் கொடுமைக்கு ஆளானவர் என்பதை உணர்ந்து, சிறிய பதவியிலுள்ள ஊழியர்களேப் பெரிய பதவியில் உள்ளவர்களின் துன்புறுத்தலில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியதான புதிய சட்ட திட்டங்களே வகுக்குமாறு கட்டளே பிறப்பித்தார்.

இச்சம்பவமே, புகையிரத ஊழியர்கள் நீதிக்கும் நியாயத்துக்குமாகப் போராடக் கூடிய ஒரு தொழிற் சங்கத்தை உருவாக்க வேண்டுமென்ற தேவையை இராமச்சந்திரனுருக்கு உணர்த்தியது. இவ்வுணர்ச்சி அவருடைய மேற்படிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அந்தக் காலந் தொடங்கி அவர் பாட்டாளிகளின் பாதுகாவலனுகக் கணிக்கப்பட்டார். தொடக்கத்தில் மறைமுகமாகச் சேவை ஆற்றிய இவர் 1919-ம் ஆண்டு புகையிரதப்பகுதி ஊழியர்களின் நிலைமையை ஆராய்வதற்காக ஆணேக்குழு ஒன்று நியமிக்கப்பட்டபோது ஒரு தூதுக்குழுவிற்கு இராமச்சந்திரா தலைமை தாங்கினர்.

புகையிரதப் பகுதி லிகிதர்களின் தொழிற் சங்கத்தை ஆரம்பித்த முதல் காரியதரிசியாக விளங்கியதுடன் புகையிரதப் பகுதியினர் சஞ்சிகை ஒன்று வெளியிடுவதற்கும் கர்த்தாவாக விளங்கினர். புகையிரத ஊழியர்களேப் பாதுகாக்கும் ஒரு ஸ்திரமான தொழிற் சங்க இயக்கத்தை அமைப்பதற்கும் காரண கர்த்தாவாக விளங்கினர்.

எனினும் இத்தொழிலாளர் சங்கத்திற்குள் அரசியல் தலையீட்டைத் தவிர்ப்பதற்கு மேலதிக கவனம் பாதுகாப்பு எடுத்துக் கொண்டார். உயர்நோக்கும் உண்மையும் தீர்க்கதரிசனலும் நிறைந்த அவருடைய சிறந்த நண்பனும் உதவியாளருமான திரு. ஆமன்டி சொய்சாவின் புத்திமதிகளே இராமச்சந்திரனுர் ஒருநாளும் மறந்ததில்லே. எக்காரணத்தைக் கொண்டும் எப்பொழுதாயினும் இத்தொழிற்சங்கத்தை அரசியல் பகடைக்காயாக்க விடக்கூடாது என்பதே அப்புத்திமதியாகும்.

ஆனல் தொழிற் சங்கவாதி என்ற வாழ்க்கையிலிருந்து அவர் ஓய்வு பெறுவதற்குச் சற்று முன்னதாக, அவருக்குப் பின் புகையிரதப் பகுதிச் சஞ்சிகைக்குப் பத்திரிகை ஆசிரியராக இருந்தவரும் இராமச்சந்திராவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவருமான நண்பர் ஒருவர் சஞ்சிகையில்வெளி

வந்த ஒரு விஷயத்தை முன்னிட்டுக் கடுமையான இன்னல் களுக்கு ஆளானுர். அந்த விடயம் மறுக்க முடியாத உண் மைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும் புகை யிரதப் பகுதி அதிகாரிகள் அதை வன்மையாகக் கண்டித்த னர். கண்டித்தது மாத்திரமல்லாமல் சஞ்சிகை நிர்வாகி களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் தயாரிக்கவும் முற்பட்ட னர். தன்னுடைய நண்பரைக் காப்பாற்றுவதற்காகத்தனது இன்னெரு நண்பர் மூலம் டி. எஸ். செனனுயக்கா அவர்களை "வூட்லண்ஸி"ல் சந்திக்க ஒழுங்கு செய்தார். இந்த விடயம் பிரசுரிப்பதில் சம்பந்தப்பட்ட 3 பேர் இராமச்சந்திராவுடன் சென்ருர்கள். இராமச்சந்திரா டி. எஸ். உடன்பேசி இது சம் பந்தமாகப் பிரதம காரியதரிசியுடன் பேச்சுவார்த்தை மேற் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

டி. எஸ். அவர்கள் சலுகைகள் வேண்டி எந்த அதிகாரியி டமும் போவதில்லை என்று கூறித் தயக்கம் காட்டியபொழுது இராமச்சந்திரா அவர்கள், தாங்கள் சலுகை வேண்டி நிற்க வில்லை என்றும் பிரதம காரியதரிசியோ அல்லது பதில் அதி காரியோ நேரடியாக இவ்விடயத்தை ஆராய்ந்து நீதி வழங்க வேண்டும் என்பதே 'தமது கோரிக்கை' என்றும் திட்டவட்ட மாகத் தெளிவாகக் கூறினுர்.

டி. எஸ். அவர்கள், திரு. இராமச்சந்திரா இதில் சம்பந் தப்பட்டவர் அல்ல என்றும், வேற்று இனத்தவராகிய மூவ ருக்காக உதவி புரிந்து விடயங்களை விளக்கும் பொருட்டே அங்கு வந்தார் என்பதையும் அறிந்ததும் பதில் பிரதம காரிய தரிசி எந்த விடயத்திலும் நீதி நியாயத்துடன் நடப்பவர் என்றும், இந்த விடயத்தைத் தான் நேரடியாகவே அவரிடம் சமர்ப்பிப்பதாகவும் விடை அளித்தார். வாக்குறுதிப்படி இந்த இக்கட்டான நிலையிலிருந்து டி. எஸ். அவர்கள் அம்மூவரை யும் காப்பாற்றினுர்.

முடிவில் தொழிற்சங்க விடயமாக ஒரு முக்கிய விடயம் குறிப்பிடத்தக்கது. அதாவது சுதேச உத்தியோகத்தர்களுக்கு உரிமைகளுக்காகவும் சேவை நலத்திற்காகவும் பிரத்தியேக உரிமைகளுக்காகவும் போராடிய இந்த நீண்டகாலசேவையில் இராமச்சந்திரனுரிடம் தனிப்பட்ட முறையிலோ, இன அடிப் படையிலோ, எவ்வித பகைமையோ, துவேஷமோ காணப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எல்லா ஐரோப்பிய மேலதிகாரிகளும் சக ஊழியர்களும் அவரிடம் அன்பும் மரி யாதையும் கொண்டிருந்தனர்.

இங்கிலாந்தின் முதல் தொழிற்கட்சிப் பிரதமரான ராம் சேமக்டொனல்டுக்கு ஐரோப்பிய மேலதிகாரிகளால் வரவேற்பு ஒழுங்கு செய்யப்பட்டபொழுது, இலங்கை உத்தியோகத்தர் சார்பாக சொற்பொழிவாற்றுமாறு இராமச்சந்திரனுக்கு அழைப்புக் கிடைத்தது. இதனை மிகமகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட இராமச்சந்திரனர் எல்லார் உள்ளத்தையும் தொடுமாறு அரிய ஒரு வரவேற்புரை நிகழ்த்தினர். பல வருடங்களுக்குப் பின்னர் இராமச்சந்திரனர் "றிலிஜஸ் டைஜஸ்ற்" என்ற சர்வமத சமரச சஞ்சிகையைத் தொடங்கிய போது இந்தியாவில் பிரித்தானியாவின் தூதுவராகக் கடமையாற்றிய மக்டொனலின் மகன் தனது நல்லாசிச் செய்தியை இராமச்சந்திரனருக்கு அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது ஒன்றாகும்.

# சமுதாய சேவை

தொழிற் சங்க முயற்சிகள் அவருடைய வாழ்க்கையில் ஒரு அம்சமாகும். தேவையை நோக்கி அதில் ஈடுபட்டார்; உழைத்தார்; பின்னுல் இருந்தவர்களிடம் அச்சேவையை ஒப்படைத்துவிட்டு வேறு துறைகளில் ஈடுபடலானுர்.

தீண்டாமை ஒழிப்பு, சீதன எதிர்ப்பு, சிங்கள தமிழர் வேற்றுமை, சிரமதானத்தொண்டு, கூட்டுப் பிரார்த்தனை இயக்கம், அந்தர்யோகம் ஆகியவற்றில் எல்லாம் ஈடுபட்டு உழைத்தார். சிரமதானத்தைப் பொறுத்த மட்டில், அதற்கு ஓர் பயிற்சிக்கூடம் அமைப்பதற்கு அநுராத புரத்தில் தமக்குச் சொந்தமாயிருந்த 10 ஏக்கர் காணியை நன்கொடை அளித்ததுடன் நிற்பாட்டிக்கொண்டார். புகையிரதத் தொழிலாளர் இயக்கத்தில் 1917ஆம் ஆண்டு தொடக்கம் ஞானகுருவின் தரிசனமும் ஆசியும் பெறும் வரையில் (1935) ஈடுபட்டிருந்து அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டார்.

# பண்ணைப் பாலம்

இன்றைய பண்ணைப்பாலம் உருவாவதற்கு முக்கிய முன்னோடியாகத் திகழ்ந்தவர் இராமச்சந்திரனார் என்பதைப் பலர் அறியார். ஒரு கட்டிடத்தில் அத்திவாரக் கல் எப்படி மறைந்துள்ளதோ அதேபோல் இராமச்சந்திரனார் பண்ணைப் பாலத்திற்காகப் பாடுபட்ட செய்தி மறைந்துள்ளது.

இந்தச் சமுதாயத்துறையில் அவர் எடுத்த முயற்சியும், பெற்ற சித்தியும் தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களைத் தீர்க்க இரண்டு முழு ஆண்டுகள் செய்த தொண்டையே பெரிதாகத் தமது வாழ்க்கையின் வெற்றிகரமான ஒரு பாகமாகக் கருதுகிறார்.

தற்போது இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் மோட்டார் ஏறி நேரே புங்குடுதீவிலுள்ள குறிகட்டுவான் சென்று, அத்துறையிலிருந்து 10 நிமிஷத்துள் மோட்டார் வள்ளமூலம் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் சந்நிதானத்தைச் சேர்கிறார்கள். நாற்பது ஆண்டுகளுக்கு முன் பல்லாயிரக்கணக்கான யாத்திரீகர்கள், தீவுப்பகுதி மக்கள் அனுபவித்த கஷ்டங்களைப் பலர் அறியார்கள். அதுவும் இன்றைய சந்ததியினரும் மாணவரும் அறியமாட்டார்கள். எனக்குப் 10 வயதாயிருக்கும்போது தாயாருடன் கூடிக்கொண்டு நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்கச் சென்றிருந்தேன். மாலை 6 மணிக்குப் பண்ணையில் பாய்மரத்தோணியில் ஏறி இரவு முழுவதும் பல கஷ்டங்களுக்குள்ளாகி விடிய 6மணிக்கு நயினாதீவையடைந்த சரித்திரம் இப்பொழுதும் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறது.

திரு. இராமச்சந்திரனார் யாழ்ப்பாணத்தில் மாணவனாயிருந்த காலத்தில் மாதம் ஒருமுறையாவது பெற்றோர் சகோதரங்களைப் பார்க்கவும் அம்பாளைத் தரிசிக்கவும் செல்லும்போது பட்ட கஷ்டங்களைக் கதை கதையாகப் பலமுறை சொல்லக் கேட்டுள்ளேன். அவர் அதனை விபரிக்கும்போது பெரிய பரிதாபமாக இருக்கும்.

தென்னாபிரிக்காவில் இந்தியர்படும் கஷ்டங்களைக் காந்தி நேரில் அனுபவித்தார். அதன்பேறாக இந்தியா சுதந்திரம் அடைந்தாலல்லாது இப்பிரச்சினைகள் தீரமாட்டா என்ற

முடிவுக்கு வந்தார். இதுபோன்றே இராமச்சந்திரனுர் பிரயாணத்தில் பட்ட கஷ்டங்கள் பண்ணைப் பாலமாக அமைய வேண்டும் என உருப்பெற்றது. பத்திரிகைகளுக்கு எழுதியும் சொற்பொழிவு மூலமும் மக்களைத் தட்டி எழுப்பி அதற்கு ஆதரவு தேடினுர். மக்களிற் பெரும்பாலோர் ஆட்டுக்குத் தீர்ந்தது தானே குட்டிக்கும் என்பதுபோல ஏனோ தானோ என்று உணர்ச்சியற்றவராய்க் காணப்பட்டனர்.

இரண்டு வருட காலமாக அவர் எடுத்த சமுதாய சேவையில் பண்ணைப் பாலமும் வேலணை—புங்குடுதீவுப் பாலமுமே முக்கிய இடம் பெற்றன. பேச்சும் எழுத்தும் சம்பாஷணையும் அதுவாகவே இருந்தது.

இவரது சேவைக்கு உறுதுணையாக இருந்தவர்கள் முக்கியமாக நால்வர். அப்பொழுது வடமாகாண அதிபராய் இருந்த F. G. சிமித், திரு. செல்லையா அமரசிங்கம், திரு. K. அம்பலவாணர், திரு. S. சரவணமுத்துச்சாமியார். பின்னவர் மூவரும் புங்குடுதீவு வாசிகளாவர். வேலணை, ஊர்காவல் துறைவாசிகள் இதில் அவ்வளவு ஊக்கங்காட்டவில்லை. நயினுதீவு மக்களோ, நம்மவர்தானே இராப்பகலாய்த் தலையைக் கொடுத்துள்ளார். நமக்கென்ன வேலை? என்று சும்மா பார்த்துக்கொண்டிருந்தனர்.

கொழும்பில் நடந்த பல கூட்டங்களில் எல்லா ஊர்க் கடைக்காரர்களும் கலந்துகொண்டனர். ஒவ்வொரு சனிக்கிழமையிலும் பின்னேரப் புகையிரதத்தில் நாவலப்பிட்டியிலிருந்து கொழும்பிற்குச் சென்று ஞாயிற்றுக்கிழமை காலை கூட்டத்தில் பேசிவிட்டு மத்தியானப் போசனம் முடித்து மாலையே திரும்பிவிடுவார்.

நல்ல கருமம் எதை தொடங்கினுலும் அதற்குப் பக்கத்திலே ஒரு எதிர்ப்பும் இருந்துகொண்டுதானிருக்கும். பண்ணைப் பாலத்திட்டத்திற்கும் எதிர்ப்புத் தோன்றியது. முக்கியமாக எதிர்த்தவர் அக்காலத்தில் தீவுப் பகுதிக்கு அரசாங்கசபை அங்கத்தவராக இருந்த வை. துரைசாமி அவர்களாகும். தமது ஊருக்கூடாகப் பாலம் அமையவேண்டும் என்பதே அவருடைய எதிர்ப்புக்கு முக்கிய காரணமாகும். காலகதியில் யோகர் சுவாமிகளுடைய அறிவுரையைப் பெற்ற அவர் பண்ணைப் பாலத் திட்டத்திற்கு இசையவேண்டியவரானுர். அதுவுமன்றி யாழ்ப்பாண முற்றவெளியில் பிரமாண்டமான

கூட்டங்கூடி தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்திற்கும் பத்திரிகைகட்கும் ஆங்கிலத்திலும் தமிழிலும் அனுப்பிவைத்தனர்.

சைவக் கலாவிருத்திச் சங்கத்தின் தலைவரும் அக்காலத்தில் சட்ட நிரூபண சபையில் அங்கத்தினராயுமிருந்த திரு. எஸ். இராசரத்தினம் அவர்கள் இவ்விஷயமாகப் பெரிதும் ஈடுபட்டு இராமச்சந்திரனுரின் அயரா முயற்சியைப் பாராட்டினுர். அவர் தீவுப் பகுதிகளில் தொடங்கிய பாடசாலைகளுக்குப் பிரயாணம் செய்து அக்கஷ்டங்களை நன்கு அனுபவித்தவர்கள்.

பண்ணைப் பாலத்திற்குப் பாடுபட்ட முன்னேடிகளையும் அதன் வரலாற்றையும் அறியாத சிலர் பிற்காலத்தில் இதனேடு எள்ளளவும் சம்பந்தப்படாத சிலருக்குச் சிலை எழுப்ப நினைந்த செய்தியையும் பத்திரிகைகளில் படித்தோம். அதற்குப் பலத்த கண்டனங்கள் எழும்பவே அவை தாமாகவே கைவிடப்பட்டு விட்டன.

இராமச்சந்திரனுரின் முயற்சியைப் பாராட்டி அந்தக் காலத்தில் டெயிலி நியூஸ், மோணிங் லீடர், இன்டிப்பென்டன் முதலிய பத்திரிகைகள் பெரிதும் எழுதின. இராமச்சந்திரனுரின் பண்ணைப் பால முயற்சிக்கு இப்பத்திரிகாலயங்களிலுள்ள "பைல்"களே சான்று பகரும்.

# கல்வித் தொண்டு

கல்வித் தொண்டில் ஈடுபடும் ஆர்வம் இவருக்குக் கர்ப்பத்திலேயே செறிந்த ஒன்ருகும். இவர் தமிழ் படித்த நயினுதீவு தில்லையம்பல வித்தியாசாலையின் வரலாறு சின்னஞ்சிறு வயதிலிருந்தே இவர் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது. அந்த வித்தியாசாலையைக் கட்டப் பணம் உதவியவர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரும் பணக்காரராயிருந்த திரு. வே. சின்னகுட்டியார் அவர்கள். அவரின் மூதாதையர் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள். இராமச்சந்திரனுரின் தந்தையாரும் அந்தச் செல்வரும் நெருங்கிய நண்பர்கள். சின்னகுட்டியாரின் இரண்டாவது மகனுன தில்லையம்பலம் அகால மரணம் அடையவே மகப் பிரிவால் வாடிமெலிந்த பிதா மனச்சாந்தி தேடி நாகம்பாள் தரிசனத்திற்காக நயினுதீவு வந்து கதிரேசுவின் இல்லத்தில் தங்கி இருந்தார். அப்போது இருவரும் உள்ளங்கலந்து பேசிக்கொண்ட சம்பாஷணையின் பயனுகவே இறந்த மைந்தனின் பெயரால் வித்தியாசாலை கட்டப்பட்டதாகும். அதன் லோக்கல் மனேஜராகப் பல வருஷங்களாக அதாவது சின்னக்குட்டியார் உடல்கொண்டு உலாவும் வரையில் இராமச்சந்திரனுரின் தந்தையாரே தொண்டு செய்தனர். மனேஜர் உரிமையை ஸ்தாபகரின் மூத்த மகனுன பிறக்டர் பொன்னம்பலத்தார் ஏற்றுக்கொண்டதும் தாமாகவே கதிரேசு லோக்கல் மனேஜர் பதவியினின்றும் விலகிக்கொண்டார்.

இந்த வரலாற்றை நன்கு அறிந்திருந்த இராமச்சந்திரனுரின் உள்ளத்தில் ஆசிரியராகப் பணியாற்றவேண்டும் என்ற ஆர்வம் தோன்றியதில் வியப்பில்லை. 13-ம் வயதில் ஆசிரியர் பிரவேசப் பரீட்சையில் சித்திபெற்று அந்தக் கல்விக்குரிய வயது வரும் வரையில் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள பாரதி பாஷிய வித்தியாசாலையில் மாணவ ஆசிரியராயிருந்து ஆங்கிலம் படிக்கச் சென்ற சரித்திரத்தை முன்பு பார்த்தோம். ஆசிரியராகப் பயிற்சி பெற்று, தில்லையம்பல வித்தியாசாலையிலேயே இடம் பெற்று, தனக்கெதிரில் இருந்து, தந்தையார் கட்டிய முருகன் ஆலயத்தில் தொடர்ந்து கந்த புராணப்படனம் நடத்துவான் மகன் என்று தாயார் பகற் கனவு கண்டுகொண்டிருந்தார். ஈற்றில் அவருக்குத்தான் ஏமாற்றம் காத்திருந்தது.

1924-ம் ஆண்டில் உத்தியோகமாற்றம் காரணமாக நாவலப்பிட்டிக்கு வந்தபோது, அங்குள்ள இந்து வாலிப சங்கம் தனக்கென ஓர் மண்டபத்தை எழுப்பியது. இராமச்சந்திரா அவர்கள் சங்கத்தின் அங்கத்தவராக இருக்கவும் இல்லை; சங்க மண்டபத்திற்கு எவ்வித உதவியும் செய்யவும் இல்லை. மண்டபத் திறப்பு விழாவின் பின் நியமிக்கப்பட்ட நிர்வாக சபைக் குழுவில் இடம் பெறும் பாக்கியம் இராமச்சந்திரனுருக்குக் கிடைத்தது. அந்த மண்டபம் வருஷம் முன்னூற்றுபத்தைந்து நாட்களும் மூடிக்கிடக்கும் அதே நேரத்திலே தெருவெல்லாம் பாடசாலைக்குச் செல்லவேண்டிய தோட்டத் தொழிலாளரின் குழந்தைகள் அலைகிருர்களே, இதனைப்பார்க்குந்தோறும் உள்ளம் வருந்துகிறதென இராமச்சந்திரனுர் மிக உருக்கமாக முதலாவது நிர்வாகக் கூட்டத்திலேயே பேசினுர். அவரது கோரிக்கைக்குப் பழைய நிர்வாகிகள் பலர் ஆதரவு நல்கினர். சிலர் கட்டிடம் கடனில் இருக்கிறது. இந்த நிலையில் புதுச்செலவை உண்டாக்குதல் உசிதமல்லவென்று மறுப்புக் கூறினர்.

இந்த நெருக்கடியில் ஆசிரியர் ஆழ்வாப்பிள்ளை என்பவர் தமக்கு வசிக்க இடமும் உணவுச் செலவும் தந்தால் போதியது. தாம் பாடசாலை நடாத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளமுடியும் எனக் கூறினுர். பள்ளிக்கூடத்திலேயே வசிக்க வசதி இருந்தது. மலகூடம் ஒன்றே தேவைப்பட்டது. அதன் செலவைப் பொறுக்கவும் ஆசிரியரின் உணவுச் செலவைப்பொறுக்கவும் ஒரு தர்மசீலர் முன்வந்தார். வேறு சிலரும் உதவி செய்ய வாக்களித்தார்கள். பிள்ளைகளைச் சேர்க்கும் பொறுப்பு இராமச்சந்திரனுரிடமும் ஆசிரியரிடமும் விடப்பட்டன.

பிள்ளைகளைச் சேர்த்தல் அவ்வளவு இலகுவானதல்ல என்ற விஷயம் அதில் ஈடுபட்டதன் பின்னர்தான் தெரியவந்தது. பலர் தமது பிள்ளைகளைப் புதிய பள்ளிக்கூடத்திற் சேர்ப்பதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இதனைக்கண்ணுற்ற இராமச்சந்திரனுர் ஊரில் இருந்த ஐந்து வயதுடைய தனது மைத்துனனைக் கூட்டிவந்து முன்மாதிரிக்காகத் தாமே சேர்த்தார். கதிரேசப்பெருமானுடைய திருவருட் துணைகொண்டு 12 மாணவருடன் பாடசாலை ஆரம்பமாயிற்று. இவ்வித எளிய முறையில் பல எதிர்ப்புக்களிடையே தோன்றிய இவ் வித்தியாலயம் இன்று கனிஷ்ட வித்தியாலயம், குமாரமகா வித்தியாலயம் என்ற பெயரில் இரு பெரும் வித்தியாலயங்களாய் 1500க்கும் அதிகமான மாணவர்களையுடையதாய் விளங்குகின்றது.

சுமார் ஐந்து ஆண்டுகட்கு முன்பு இராமச்சந்திரனுர் நயினு தீவு மகாவித்தியாலயத்திற்கு தமது சொந்தப் பொறுப்பிலே யே வாசிகசாலைக் கட்டிடம் ஒன்றைக் கட்டிக்கொடுத்தமை அவரது கல்வித்தொண்டின் பெருமையை விளக்குகின்றது. இக்கட்டிடத்திற்கு அத்திவாரக்கல் நாட்டுவிழா நடைபெற்ற போது தாம் சமூகம் அளிக்காது என்னையே அனுப்பி அவ் விழாவில் பங்குபெறச்செய்தமை இன்னும் என்மனத்தில் பச்சையாகத் துளிர்விட்டுள்ளது.

1931-ம் ஆண்டு திரு. இராமச்சந்திரா அவர்கள் கொழும் புக்கு மாற்றலாகி வெள்ளவத்தையில் வசிக்கத் தொடங்கினுர். வெள்ளவத்தையில் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் மொழியில் கற் பதற்குத் தமிழ்ப் பாடசாலை ஒன்று இல்லாமையை உணர்ந் தார். பழைய கல்லூரி நண்பனுகிய எம். எம். குலசேகரத் துடன் சேர்ந்து இராமகிருஷ்ண மிஷனுக்குக் கீழ் ஒரு தமிழ்ப் பாடசாலை அமைக்க முயன்றுர். இன்றைய சைவ மங்கையர் கழகப் பாடசாலை இவ்விருவருடைய முயற்சியின் மறைமுகப் பயனுகும்.

# இலங்கையில் கூட்டுப் பிரார்த்தனை இயக்கம்

இன்று எங்கு பார்த்தாலும் இல்லங்களிலும், பள்ளிக் கூடங்களிலும், ஆலயங்களிலும் ஏன் வீதிகளிலும்கூட நாம ஜெபத்தையும் பஜனையையும் கூட்டுப் பிரார்த்தனைகளையும் காண்கின்றோம்; கேட்கின்றோம். ஆனால் இற்றைக்கு முப்பது முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் திரு. இராமச்சந்திரனுருடைய இல்லத்தில்தான் வாரந்தோறும் வழிபாட்டுக் கூட்டங்களும் முற்காலத் தற்கால மகான்களின் குருபூசைத்தினங்களும் தவறாது கொண்டாடப்பட்டு வந்தன. பெரிய குருபூசைவிழாக்களாகஇருப்பின் இல்லத்தில்இடம்போதாமையால் ஏதாவது ஒரு மண்டபத்தில் அவர் ஒழுங்கு செய்வதுண்டு.

இத்தொண்டில் அவருக்குத் துணையாக இளம் வாலிபர்களைக்கொண்ட ஒரு சத்சங்கம் உருவானது. இவ்வழிபாட்டில் கலந்துகொண்டதன் பயனாகவே இன்றுபலஆலயகர்த்தாக்கள் தமது ஆலயங்களில் கூட்டுவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து வித்தியாலயங்களுக்கும் இல்லங்களுக்கும் இக்கூட்டுவழிபாடு பரவியது.

அடிக்கடி இராமச்சந்திரனுர் தென்னிந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் தலயாத்திரை செய்யத் தொடங்கினுர். அதனுல் அங்குள்ள அறநிலையங்களையும் ஆச்சிரமங்களையுந் தரிசித்து ஆங்கு நடைபெறும் ஆராதனை, யோகம், தியானம் முதலியவற்றை நேரில்கண்டு கலந்தவராகையால் அவற்றைப் பின்பற்றியே இலங்கையில் தாம் வசித்த இடங்களில் அந்த ஒழுங்கைச் செய்திருக்கலாம் என்பது அன்பர்கள் பலரினுடைய அபிப்பிராயம் ஆகும். இது உண்மையல்ல. அவர் பிறந்த இல்லத்தில் அவரது தந்தையார் வெள்ளிக்கிழமை தோறும் கையாண்டு வந்த நன்முறையையே மைந்தனும் செய்துள்ளார்.

தந்தையார் வாழ்ந்த காலம் கடையிற் சுவாமிகளும் அவரது உத்தம சீடரான குழந்தைவேற் சுவாமிகளும் யாழ்ப்பாணம் குடாநாட்டில் முக்கியமாக மண்டை தீவு, வேலணை முதலிய இடங்களில் குருபூசைகள் செய்து சாதாரண மக்களிடையே கடவுள் பக்தியை வளர்த்த காலம். இராமச்சந்திரனுரின் தந்தையாரும் அவருக்கு ஆத்மீகத் துறையில் வழி

காட்டியாக இருந்த இளையவியாரும் அடிக்கடி அந்தப் பூசைகளில் பங்குபற்றியதுமுண்டு. இளையவி ஒரு தேவி உபாசகராய் இருந்தாலும் தாயுமானுரையே குருவாகக் கொண்டு வழிபாடு செய்தவர். இவர் திமில சாதியைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளராஞலும் ஆசார அநுட்டானமும் அனுபூதியும் நிறைந்தவர். இளையவியாரைப் போன்றே சடைவரத சுவாமிகளும் சலவைத் தொழிலாளர் குடும்பத்தில் உதித்தவர் ஆவர். இவர்கள் இருவருக்கும் உயர்ந்த சாதியினரான வேதாந்த சித்தாந்திகள் பலர் சீடர்களாக இருந்தார்கள் என்ருல் அதற்கு முக்கிய காரணம் ஆன்மீகத்தில் அவ்விருவரும் அடைந்த அநுபூதிநிலையே.

இளையவியார் ஒரு நிஷ்காம்யயோகி. இல்லற ஞானி. இந்த இல்லற ஞானியை இராமச்சந்திரராகிய இல்லறஞானிக்குச் சிறுவயதிலேயே நன்கு பிடித்துக்கொண்டது. இளையவியார் சாஸ்திர தோத்திர விற்பன்னர். மாந்திரீக, மந்திரக்கலை பயின்றவர்.

ஸ்ரீ பரமகுரு சுவாமிகள் கீரிமலையில் வாழ்ந்தபோது அடிக்கடி தனிமோனத் தவத்திற்குச் சென்ற இடம் மருதஞமடம் பனந்தோட்டமாகும். அந்த இடம் இப்போது சேர் பொன். இராமநாதன் சமாதிக் கோயிலோடும் பெண்கள் கல்லூரியோடும் சிறப்புற்று விளங்குகிறது. அதேபோல இளையவியார் நாமஜெபத்துடன் மீன்வலையோ, பறியோ, திருத்துவதற்காக இருந்த இடத்தில்தான் தற்போது புத்தர் கோவிலும் சிவன் ஆலயமும் விளங்குகின்றன.

எவ்விதம் பரமகுரு சுவாமிகளின் பெருமையை சேர் பொன்னம்பலம் அருணுசலம் அவர்கள் 1916-ம் ஆண்டில் கல்கத்தா சர்வகலாசாலையில் எடுத்து விளக்கினுரோ, அதேபோல் 1960-ம் ஆண்டில் ஜேர்மனியிலுள்ளமாபோவ்சர்வகலாசாலையில் தாமியற்றிய தாயுமானுர் மகிமையைப் பற்றிய பேச்சில் அவரது சீடரான இளையவியாரின் பெருமையையும் எடுத்து விளக்கியதை காணுந்தோறும் அவர் பெருமை மேலும் உயரும்.

இளயவியாரும் கதிரேசனுரும் முக்கிய குருபூசைகளுக்குச் சேர்ந்து போகத் தவறுவதில்லை. எனவே இவ்விருவருடைய உள்ளத்திலும் தாம் பெற்ற இன்பம் மற்றையோரும் பெற

வேண்டும் என்ற ஆர்வம் உண்டானது. அதனுல் வெள்ளி தோறும் தமது இல்லத்திலேயே இத்தகைய பூஜைகள் வழி பாடுகளை ஆரம்பித்தார்கள்.

இருவரும் ஊர்காவற்றுறையிலிருந்து பாம்பன் மார்க்க மாக தென்னிந்திய யாத்திரையும் செய்தார்கள். இருவரும் போற்றி வணங்கிய பெரியார் பாம்பன் சுவாமிகளாகும். இப் பெரியார் யாழ்ப்பாணத்தவர். குமரகுருதாசர் என்ற இயற் பெயருள்ளவர். அவரைப்பற்றிக் கதிரேசனுர் பேசும் போதெல்லாம் அவரைப்போன்ற சித்த புருஷனை இந்தியா முழுவதிலுங் காணமுடியாது என்று கூறுவார். கதிரேசனுரிட மிருந்து இராமச்சந்திரனுருக்குப் பிதிரார்ச் சிதமாகக் கிடைத்தவை இருபொக்கிஷங்கள். அவை பாம்பன் சுவாமி கள் அருளிய சண்முக கவசமும் மயூரபந்தமுமாகும்.

இராமச்சந்திரனுரின் வீட்டில் நடைபெற்ற வழிபாட்டின் சிறப்புக்கு முக்கிய காரணராக இருந்தவர்கள் இருவர். அவர் கள்தான் அவரது பெண் குழந்தைகளாகிய தனமும், புவன மும் ஆவர். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து பாடிக் கேட்போர் உள்ளங்களைக் கசியவைக்கும் தன்மையன அவர் கள் பாடல்கள். இராமச்சந்திரனுரால் பாடாமலிருக்க முடியா மல் பாடிய பாடல்களை அவர்கள் இருவரும்சேர்ந்துபாடுவதே ஒரு தனி ஆனந்தம்.

# வானொலிச் சேவை

இலங்கை வானொலி மூலம், தமிழ் மொழிக்கும் எமது சமயத்திற்கும் சேவை செய்தவர்களுள் இராமச்சந்திரனர் முக்கிய இடம்பெறுகிறார். வானொலி வளர்ச்சிக்கு முன்னோடியும் வழிகாட்டியுமாக அமைந்தவர். இந்து சமயத்தைப்பற்றி ஆங்கிலத்தில் பிரச்சாரம் செய்யும் ஒழுங்கை, காலஞ்சென்ற சைவப்பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் அரசாங்கத்தின் மூலம் ஏற்பாடு செய்தார்- அதற்கு ஏற்றவர் இராமச்சந்திரனரே என்று ஏகமனதாக முடிவு செய்தனர். இது ஓர் ஊதியமற்ற சேவை. பின்னர் இரு இந்துக்கள் அதில் பங்கெடுக்க ஆயத்தம் என முன் வந்ததும் இராமச்சந்திரனர் தாமாகவே விலகிக்கொண்டார். ஆனால் அந்தப் பிரமுகர்கள் இடைநடுவில் நிற்பாட்டிக்கொண்டனர்.

வானொலிக்கிளை இந்து சமய ஆலோசனைக்குழுவில் பத்து வருடங்கள் தொடர்ந்து தொண்டாற்றியுள்ளார். இறுதியான ஐந்து வருடங்களும் அவரே அக்குழுவிற்குத் தொடர்ந்துதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். பத்து வருட முடிவில் தாமாகவே அதிலிருந்து இளைப்பாறிக் கொண்டார். பிறர் எவராவது ஆசைப்படும் பதவியில் தொடர்ந்து இருப்பதில் இவர் வெறுப்புள்ளவர். பொறுப்பை ஏற்க எவரும் முன்வராவிடில் ஏற்பார். பின்னர் பதவி விருப்பம் பிறரிடம் இருப்பதை அறிந்ததும் அவர்கட்கும் சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென விலகிக்கொள்ளுவார். புகையிரதத் தொழிலாளர் இயக்கத்திலும் இதேவிதம் நடந்து அங்கத்தவர்களின் நன்மதிப்பையும் நன்றியையும் பெற்றுள்ளார்.

வானொலிப் பிரச்சாரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது 1960-ம் ஆண்டில் லண்டன் B. B. C.யில் பிரச்சாரம் செய்ததையும், 1963-ம் ஆண்டில் அமெரிக்காவிலும், 1968-ல் ஜேர்மனியிலும், 1969-ல் நோர்வேயிலும் அவர் செய்துள்ள பிரச்சாரத்தை நாம் நினைவில் வைத்தல் வேண்டும். பிந்திய மூன்று இடங்களில் அவர் தொண்டு வானொலியோடு நிற்கவில்லை. ரெலிவிஷனிலும் நடந்ததாகும். இந்த உண்மைகள் இலங்கையில் பலர் அறியாதவைகளாகும். நாம் முன்னர் பலமுறை எழுதியிருப்பதுபோல் அவர் தம்மைப்பற்றிய பிரச்சாரத்தையோ தம்பட்டம் அடிப்பதையோ அணுவேனும்விரும்பாதவர். பிறர் அவருக்காகச் செய்ய முனைந்தாலும் தடுப்பவர்; வெறுப்பவர்.

# மேடைப் பேச்சுக்களினதும் எழுத்துச் சேவையினதும் ஆரம்பம்

1915-ம் ஆண்டில் அனுராதபுரத்திற்கு இடமாற்றம் கிடைத்த போது, அங்கு தாம் சின்னஞ் சிறு வயதிலிருந்து பேணிவந்த முருகன் வழிபாட்டிற்கு இடந்தேடியபோது ஒரு அரிய சந்தர்ப்பத்தை அடுத்த ஆண்டிலேயே திருவருள் கூட்டி வைத்தது. அங்கே நீதிமன்றத்தில் முதலியார் வேலை பார்த்துவிட்டு அதனைவிட்டு விலகிய ஸ்ரீமத் குழந்தைவேற் சுவாமிகள் ஸ்தாபித்து வழிபட்ட வேலாயுதம் இருந்த ஓர் சிறுகுடில் இருந்தது. அதனைப் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். என். சிற்றம்பலம் (வியாபாரியார்), வி. இராமசாமி (நியாயதுரந்தரர்), ஆர். வேலுப்பிள்ளை (கச்சேரி லிகிதர்) ஆகியோர் கிடுகால் வேய்ந்த ஓர் மடாலயமாக்கி அதில் பூசை செய்யப் புலோலியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ தம்பையாக் குருக்களை நியமித்து இருந்தனர். நியாயதுரந்தரர் எம். எஸ். இளையதம்பி அவர்களின் பிரச்சாரத்தின் பயனாக அநுரதபுரத்திலும் ஓர் இந்து வாலிப சங்கம் நிறுவப்பட்டது. அதன் உப காரியதரிசியாக இராமச்சந்திரனார் தெரிவுசெய்யப்பட்டார். புகையிரதப்பகுதி உத்தியோகத்தர்களையும் அதில் இழுத்து வைக்கப் புலோலி இந்துக்கள் செய்த உபாயம் இதுவாகும். அந்த இந்து வாலிப சங்கமே பின்னாளில் விவேகானந்த சபையாக மாறி அரிய கல்வித் தொண்டும் சமயத்தொண்டும் செய்து கதிர்வேலாயுத சுவாமி கோயிலும் வித்தியாசாலையும் அமைத்துப் பெருமை தேடியதாகும்.

ஆரம்பத்தில் ஸ்ரீ தம்பையாக் குருக்களே ஞாயிறுதோறும் சமய வகுப்பு நடாத்தி வந்தார். இப்பெரியார் கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலத்திற்கு ஞான உரை எழுதிய பேரறிஞர். அவர் கட்டளைப்படி ஞாயிறு மாலையில் அங்கத்தவர் ஒருவர் தமிழ்மொழி குறித்தோ அல்லது சைவசமயம் பற்றியோ பிரசங்கஞ் செய்ய வேண்டும் என ஒழுங்கு ஏற்பட்டது. 1917-ம் ஆண்டில் இராமச்சந்திரனார் பேச வேண்டிய முறை வந்தது. அப்போது அவர் தமது முதலாவது தென்னிந்திய யாத்திரையை முடித்துத் திரும்பியிருந்தார். சென்னையில் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த தமிழ்மொழியையும், தமிழ்ப் புலவர்களையும் பாராட்டி, சுப்பிரமணிய பாரதியார் பாடிய (யாமறிந்த மொழிகளிலே, யாமறிந்த புலவரிலே,

பிறநாட்டுநல்லறிஞர்,உள்ளத்தில்உண்மைஒளி)நான்குபாடல்களையும் கொண்டு வந்திருந்தார். அவர் தமது முதல் பிரசங்கத்திற்கு எடுத்துக் கொண்ட விஷயம் "தமிழின் தொன்மையும் அதன் தற்கால நிலைமையும்" என்பதாகும். பாரதியாரின் நான்கு பாடல்களையும் ஞாபகத்திலிருந்து பாடிய பின்பே பேச்சைத் தொடர்ந்தார். தலைமை தாங்கிய தம்பையாக் குருக்கள், சரஸ்வதி கடாட்சம் திடீரெனக் கிடைத்து பிரசங்கியாரே இயற்றிய பாடல் எனத்தப்பாகக் கருதி ஆவேசத்துடன் எழுந்து நீண்ட குறிப்புரைகள் கூறினார். அந்தத் தப்பான அபிப்பிராயத்தைத் திருத்தி உண்மையில் பாடல்கள் எவருடையது என்பதைச் சுட்டிக்காட்டினார் இராமச்சந்திரனார்.

பாரதியின் நாமத்தை அப்போது இலங்கையில் எவரும் கேள்விப்படவில்லை. கூட்ட முடிவில் குருக்கள் அவர்கள் அந்த நான்கு பாடல்களும் ஓர் துண்டுப்பிரசுரமாக வெளிவர வேண்டுமென்று ஆமோதித்தார். அப்பெரியாரது ஆர்வம் செறிந்த சங்கற்பம் சீக்கிரம் நிறைவேறியது. இராமச்சந்திரனார் அடுத்த சனிக்கிழமை தாமே கொழும்பு சென்று அப்போது கொம்பனித் தெருவில் மீனும்பாள் என்ற ஒரு சிறு அச்சகம் நடாத்திய தமிழ் அபிமானியும் கதிர்காமக்கந்தனின் பக்தருமான திரு. தம்பையா அவர்களைச் சந்தித்தார். பாடல்களைப் படித்ததும் அவர் பரவசம் அடைந்தார். அவற்றைக் கொண்டு சென்றவரின் ஊர், பேர், உத்தியோகம், சம்பளம் முதலானவற்றை விசாரித்த பின்னர் 1000 பிரதிகள் ஒரே பக்கத்தில் அச்சிட உடன்பட்டார். அச்சுக்கூலி தமக்குத் தேவை இல்லை என்றும் 500 பிரதிகளைத் தமக்குத் தரும்படியும், எஞ்சிய 500 பிரதிகளின் காகித விலைக்கு மாத்திரம் ரூபாய் ஒன்று தந்தால் போதுமானது என்றும் சொன்னார். அவரது நிபந்தனையை ஏற்று இப் பிரசுரம் வெளியானது. பின்பு பல்லாயிரக்கணக்கான தர்ம வெளியீடுகள்—எல்லாம் எமது சமய சம்பந்தமானவை—சென்ற ஐம்பது ஆண்டுகளாக இராமச்சந்திரனார் மூலம் வெளிவந்திருப்பதை அன்பர்கள் அறிவார்கள். இந்த முதல் வெளியீட்டில் பாரதியாரின் ஆத்மசக்தி முன்னின்றுதான் பின்னர் பல வெளிவந்தன என்பது அவரின் அசைவற்ற நம்பிக்கையாகும்.

சென்னையில் ஜோர்ச் ரவுனில் உள்ள ஓர் பெண்கள் வித்தியாலயத்தில் பேசுவதற்குப் பாரதியார் புதுச்சேரியிலிருந்து வந்து தங்கியுள்ளார் என்பதை அறிந்து இராமச்சந்திரனார்

அவரைச் சந்தித்துப் பேசச் சென்ருர். அவர் வந்ததையும், பேசியதையும் அறிந்த இரகசியப் பொலிசார் அவரைத்தேடத் தொடங்கிவிட்டனர். இச்செய்தி வெளிவந்ததும் அவர் அன்றிரவே தலைமறைவாகப் புதுச்சேரி போய்த் தப்பித்துக் கொண்டார்.

அன்பர்கள் இராமச்சந்திரனுரை ''அங்கு செல்லவேண்டாம்; யுத்தகால அவசரச் சட்டங்கள் உண்டு; நீங்களும் சிறைப்படுவீர்கள்; தாய்நாடு திரும்பமாட்டீர்கள்'', என்றுஅச் சுறுத்தி இலங்கைக்குத் திரும்புமாறு தூண்டினுர்கள். மகாத்மாகாந்தி அவர்களைச் சென்னையில் தரிசித்ததும் கேட்டதும் இந்தச் சந்தர்ப்பத்தில்தான்.

மேலே குறித்த வெளியீடு இவரது முதலாவது பிரசுரம் என்ரேம். அது முற்றிலும் சரியல்ல. 1914ஆம் ஆண்டில் கொழும்பு தொழிற் கல்லூரியில் மாணவனுய் இருக்கும்போதே நயினுதீவு அன்பர்களின் வேண்டுக்கோளுக்கிணங்கி அவர் எழுதிய முதல் வியாசம் வெளிவந்துள்ளது. அத்தீவிலுள்ள இந்துமத பாடசாலையான தில்லையம்பல வித்தியாசாலை சிறிது தளர்வடைந்திருந்தபோது அந்த இடத்தை அபகரிக்க கிறிஸ்தவ பாதிரிமார் தெற்குப் பகுதியில் ஒரு பள்ளிக்கூடம் நிறுவினுர்கள். அதில் முக்கிய சைவ குடும்பங்களின் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்மாளின் தர்மகர்த்தாக்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை உதவி உபாத்தியாயராகவும் நியமித்தனர். இப்படி அற்பச் சம்பளத்திற்காகச் சமயத்தை விற்பனை செய்தவரை வெறுத்த, கொழும்பில் வாழ்ந்த நயினை வாசிகள் இராமச்சந்திரனுரைக் கொண்டு ஓர் நீண்ட கட்டுரை எழுதுவித்தனர். ''நீறு பூசிய பாதிரிமார்'' என்ற தலையங்கத்தில் நாவலர் காட்டிய வழியைத் தழுவி எழுதப்பட்டது. அதைத் தமது செலவில் அச்சிட்டு பரப்பியவர் V. R. சுந்தரம்பிள்ளை அவர்களாவர்.

# குடும்ப நினைவுகள்

இராமச்சந்திரனுருடன் சேர்த்து இவரது உடன் பிறப்புக்கள் ஒன்பது பேர். இராமச்சந்திரனுர் ஐந்தாவது பிள்ளை. மூத்தவர்கள் இருவரும் பெண்கள். கடைசியாக உள்ள இருவரும் பெண்கள். மூன்ருவது ஆண் சகோதரம். நான்காவது பெண்சகோதரம். அதேபோல ஆருவது பெண் சகோதரம். ஏழாவது ஆண் சகோதரம். மொத்தமாக ஆறு பெண்களும் மூன்று ஆண்களுமாவர். இராமச்சந்திரனுரை நடுவாக வைத்து இரு பக்கமும் இரு பெண்களும் அடுத்து இரு பக்கமும் இரு ஆண்களாகவும் கடைசியிலும் முதலிலும் இவ்விரு பெண்களுமாய் அமைந்த அமைப்பை இவ்வுலகில் எக்குடும்பத்திலாவது நான் கண்டதில்லை. முதல் மூவரும் மறைந்துவிட்டனர். மற்றைய அறுவரும் வாழ்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரோ இருவரோ ஆசிரியத் தொழில் புரிகின்றனர். இதனுல் இவர்கள் குடும்பமே சரஸ்வதி கடாட்சம் பெற்ற குடும்பம் என்று சொல்லத் தோன்றும்.

இராமச்சந்திரனுர், ஒரு மனைவி இறந்தபின் இரண்டாம் மனைவியாக இன்னெரு பெண்ணை மணந்தவர் என்பதைப் பலர் அறியார். முதலாவது மனைவியார் சின்னுச்சிப்பிள்ளை என்னும் பெயருடையவர். இரண்டாவது மனைவியார் சின்னத்தங்கம் என்னும் பெயருடையவர்.

தேவையானவற்றை மாத்திரம் எழுதித் தேவையற்றவற்றைத் தவிர்ப்போமா என்று இராமச்சந்திர ஐயாவிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் சரித்திரம் உண்மையாக அமைய வேண்டும். நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல வாழ்க்கையிலும் இரண்டும் அமைய வேண்டும். ஆகவே தெரிந்த எல்லாவற்றையும் நல்லது பொல்லது என்ற பேதமின்றி எழுதுங்கள் அப்போதான் அது பூரணமாகும் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய அன்புக்கட்டளையை மறுக்க அஞ்சியே இந்த அத்தியாயத்தை இடையில் எழுதுகின்றேன்.

சின்னுச்சிப்பிள்ளை, சின்னத்தங்கம் இருவருக்கும் என்ன பெயர்ப் பொருத்தம். சின்னுச்சிப்பிள்ளைக்கு குழந்தை உள்ளம். சின்னத்தங்கத்திற்குத் தங்கமான மனசு. தமது கணவனுரின் முன் தம்மை அவர்கள் சின்னவர்களாகவே எப்பொழுதும் காட்டிக்கொண்டார்கள்.

சின்னச்சிப்பிள்ளைக்கு இரு பெண்களும் ஒரு ஆணுமாக மூன்று குழந்தைகள். ஆணும் ஒரு பெண்ணும் ஊமைப் பிள்ளைகள். இந்தநிலை சின்னச்சிப்பிள்ளைக்குப் பெரும் வேதனையைத் தந்தது. தனது குழந்தைகளின் ஊமைத்தன்மை கடவுளின் திருவருளாலாவது நீங்காதா என்று ஏங்கினர். மணிவாசகரிடம் வாதுக்குச்சென்று ஈழ அரசனின்மகளின் ஊமைத்தன்மை நீங்கவில்லையா? குமரகுருபரரின் ஊமைத்தன்மை திருச்செந்தூரில் நீங்கவில்லையா? என்றெல்லாம் ஏங்கினர்.

தனது குழந்தைகள் மற்றையோரைப்போல வாழ வேண்டும் என்று எந்தத் தாயும் விரும்புவது இயற்கைதானே. காசி விசுவநாதப் பெருமானிடம் தன்னையே முழுதாக ஒப்புக்கொடுத்தார். நான் உடல் கொண்டு வாழ்வதானல் குழந்தைகள் பேசி மகிழவேண்டும். இல்லையேல் என்னையே ஏற்றுக்கொள் என்பதே அவரது பிரார்த்தனை. கணவனும் மனைவியுமாகக் காசியாத்திரை மேற்கொண்டனர்.

காசி சென்று அடைந்ததும் மூன்றுநாள் உபவாசம் இருந்து விசுவநாதப்பெருமானுக்குத் தனது கரங்களாலேயே கங்கா ஜலங்கொண்டு அபிஷேகம் செய்தார். அவரது நேர்த்திக்கடனும் இதுவே.

பூசை முடிந்ததும் பரபரப்புடன் எழுந்து ''வந்தகாரியம்முடிந்தது'' இனிமேலுள்ள பிரயாணத்திட்டம் உங்கள் விருப்பம் போல் நடக்கட்டும் என்று கணவனரிடம் கூறினர். காசியை விட்டுக் கிளம்பிய உடனேயே அவருக்கு நோய் கண்டுவிட்டது. சென்னை வந்ததும் ஆஸ்பத்திரியில் படுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சென்னையில் திருவல்லிக்கேணி ஆஸ்பத்திரியில் சரியாக இரவு 12 மணிக்கு உடலைவிட்டு உயிர் பிரிந்தது. காசியில் வைத்துக் கணவனருக்கு வந்த காரியம் முடிந்தது என்று தீர்க்கதரிசனமாகக் கூறிய வார்த்தையின் பொருளையே அவரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

அது ஒரு புண்ணியம் செய்த ஆத்துமா. கடைசி வரையில் பதிசேவை செய்தே உடலை விட்டு உயிர் பிரிந்துள்ளது. காசியில் பிரிந்திருக்கவேண்டிய உயிர் கணவனருக்காகவே சென்னை வரையில் தங்கியிருந்தது. காசியில் கணவனர் கஷ்டப்பட்டிருக்ககூடும். காசியில் இறந்திருந்தால் காசிவிசுவநாதரின் தாரக மந்திர உபதேசத்தைப் பெற்று உடனே முத்தி கிடைத்திருக்கும். முத்தி அடைதலில்கூட கணவனரை முந்தி விடக்கூடாது என்ற எண்ணம் போலும்.

பூதவுடலை ஏழு சந்நியாசிகள் தாங்கிச் செல்லும் பேறு பெற்றார். இராமகிருஷ்ண மடத்துச் சுவாமிகளே அப் பூதவுடலைச் சுமந்து சென்றவர்களாவர். பூம்பாவையைத் தகனஞ் செய்த திருமயிலாப்பூர் மயானத்திலே பூத உடல் தகனமாகும் பேறு கிடைத்தது. கடைசி நேரத்திலே அவர் கணவனுருக்குச் சாதுக்களின் உறவினை ஏற்படுத்தியே மறைந்துள்ளார். இதனைற் போலும் இராமச்சந்திரனுர் அடிக்கடி தனது முதற்குரு தனது தாயார் என்றும் தனது இரண்டாவது குரு தனது முதல் மனைவியார் என்றும் கூறிக்கொள்ளுவார்.

முதல் மனைவியார் மறைந்து சரியாக ஒன்றரை ஆண்டுகளுக்குப்பின் சின்னதங்கத்தை இரண்டாவது தாரமாக ஏற்றுக்கொண்டார். வள்ளுவருக்கு வாசுகிபோல வாய்த்தவர் இராமச்சந்திரனுருக்கு சின்னத்தங்கம் என்னும் மனைமங்கலம். எந்த உருவில் நகை செய்தாலும் மாற்று விட்டுப்போகா ஒளிர்ந்து கொண்டிருப்பது தங்கம். தங்கத்தினுல் உலக மக்கள் பயன் அடைவர். உலக மக்களால் தங்கத்திற்கு ஏது பயன்? அதுபோல குடும்பக் கடமையே கருத்தாக உடையவர் சின்னத்தங்கம். பெயருந் தங்கம்; குணமுந் தங்கம்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்ற குறளுக்கு இலக்கியமாக விளங்கியது இந்தக் குடும்பம்.

முருகனுக்கு ஆறுமுகங்கள்போல இந்தக் குடும்பத்திற்கு ஆறு குழந்தைகள். திரு. இராமச்சந்திரனுர் நாவலப்பிட்டியில் உத்தியோகம் பார்த்த காலத்தில் அதாவது 1927-ம்ஆண்டில் மகாத்மாகாந்தி இலங்கைக்கு வந்திருந்தார். நாவலப்பிட்டிக்கு காந்தி வந்தபோது இராமச்சந்திரனுரின் இல்லத்திலேதான் தங்க நேர்ந்தது. காந்தி அடிகளுக்குச் சேவை செய்யும் பாக்கியம் சின்னத்தங்கத்திற்குக் கிடைத்தது. அவர் அப்போது ஐந்து மாதக் கர்ப்பவதியாக இருந்தார்.

மூத்த மகன்: டாக்டர். பரராசசேகரம்

இவரும் இவரது மனைவியாரும் கண் வைத்தியத்தில் சிறந்தவர்கள். ஆசியா முழுவதிலும் சிறந்தவராக F. R. C. S. பட்டம் பெற்றவர். காசுக்காக வைத்தியம் செய்யாது மக்களுக்காக வைத்தியம் செய்பவர்.

இரண்டாவது மகன். சுந்தரலிங்கம்.

கொழும்பில் குற்றத்தடுப்புப் பிரிவில் பொலிஸ் மா அதிபராக மேலதிகாரியாகக் கடமையாற்றுகிருர். அரசாங்கத்திடமிருந்தும் பொதுமக்களிடத்திருந்தும் நல்ல பெயரைத் தேடிக்கொண்டவர். கடமை வீரன்.

மூன்ருவது மகன்: பாலசுப்பிரமணியம்.

இங்கிலாந்தில் கட்டிட இடமதிப்பாளராகக் கடமை ஆற்றுகிருர்.

நாலாவது மகன்: சண்முகலிங்கம்.

மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் அகால மரணம் அடைந்தவர்.

ஐந்தாவது மகள்: தனலட்சுமி.

உடற்பயிற்சி ஆசிரியையாகத் தேறி இப்போ வேறு தொழில் புரிபவர்.

ஆருவது மகள்: புவனேசுவரி.

இவர் ஒரு பட்டதாரி. மொழிபெயர்ப்பு இலாகாவில் உத்தியோகம் செய்பவர். இவர் கர்ப்பத்தில் இருக்கும்போது ரமண மகரிஷிகளின் ஆசி கிடைத்தது.

ஐயாத்துரைச் சோதிடரின் தீர்க்க தரிசனம் ஒன்றைக் கூறவிரும்புகின்றேன். பரம்பரையாக முருக பக்தியில் ஈடுபட்ட குடும்பம் ஆனபடியினுல் இராமச்சந்திரனுர் இரண்டாவது மனைவியாரின் மூத்த குழந்தைக்குப் பாலசுப்பிரமணியம் என நாமம் சூட்டினுர். பிறந்த நேரத்தை அனுப்பும்போது இந்த உண்மையையும் நயினுதீவு பிரபலசோதிடரான ஐயாத்துரை சாஸ்திரியாருக்கு அறிவித்து சாதகம் குறிப்பு எழுதி அனுப்புமாறு கேட்டிருந்தார். கேட்டபடி குறிப்பை அனுப்பும்போது குழந்தையின் பெயரைப் பரராசசேகரம் என்று மாற்றும்படி வற்புறுத்தியிருந்தார். ஏனெனில் இக்குழந்தை பிற்காலத்தில் பழைய பரராசசேகரன்போல் பிரபல வைத்தியராக வரும் என்பதே சாத்திரியாரின் உள்ளக்கிடக்கை. அக்கடிதம் இன்றும் இராமச்சந்திரனுரின் கைவசம் உள்ளது.

# குருவைத் தேடல்

ஒவ்வொரு மனிதருக்கும் நான்கு ஆச்சிரமங்கள் உண்டு. அவை பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாகும். பெரும்பான்மை மனிதர்கள் இரண்டாவது ஆச்சிரமத்தோடேயே வாழ்க்கையை முடித்து விடுகின்றனர். வானப்பிரஸ்தமும் சந்நியாசமும் முறையாக இல்லறம் நடத்தியவனுக்குத்தான் உரியவை என்பதைப் பலர் நினைப்பதில்லை. ஆரியக்கூத்தாடினலும் காரியத்திலே கண்ணாயிருப்பதுபோல இராமச்சந்திரனுர் இரு மனைவிகள் ஒன்பது பிள்ளைகள் கொண்ட குடும்பஸ்தராக இருந்தாலும்குறிக்கோள் முழுவதும் ஆத்மீக நாட்டத்திலேயே லயித்திருந்தது.

21-ம் வயதில் காந்தி அடிகளைச் சந்தித்து அவர் போதனைகளைப் பற்றிச் சிந்தித்து உதயமான சமுதாய சேவை (தொழிலாளர் இயக்கம், கல்வித்தொண்டு; தீண்டாமை ஒழிப்பு முதலானவை) 37-ம் வயது வரைக்கும் உள்ளத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தன. தந்தையார், தாயார் இருவரினதும் அடுத்தடுத்த மரணம் ஓர் தீவிர விரக்தியையும் வைராக்கியத்தையும் கொடுத்தன. வாழ்வில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தியதென்றே கூறவேண்டும்.

இராமச்சந்திரரின் தாயாரின் ஈமக்கிரியைகள் முடித்து இராமச்சந்திரனுரும் உற்ருர் உறவினரும் நண்பர்களும் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர். மேற்குக் கரை ஓரத்திலிருந்து கிழக்குநோக்கி வந்த கூட்டம் சிறுச்சிறு கூட்டங்களாகப் பிரிந்து தோட்டக்கிணறுகளையும் குளங்களையும் நாடிச் சென்றன. மயானத்திலிருந்து வரும்போது எல்லாருக்கும் சுடலை ஞானம் பிறப்பது சர்வசாதாரணம். இந்தக் கூட்டத்தினரும் அதற்குவிலக்காகவில்லை.

கூட்டத்தில் ஒரு பெரியார். கதிரேசனுர் 3 ஆண்டுகட்கு முன் மறைந்ததுபற்றி நினைவூட்டினுர். 2 மாதகாலமாக வள்ளியம்மையார் படுத்த படுக்கையில் இப்பவோ பையவோ என்று மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவரது மரணம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து பந்தலும் போடப்பட்டது. கதிரேசனுருக்குத் திடீர் என ஏற்பட்ட இருதய நோய் காரணமாக அதே பந்தலில் அவருடைய

மரணச்சடங்குகள் நிறைவேறின. விதியை யார் வெல்ல முடியும்? அம்மையார் விதவையாகவே இறக்க வேண்டும் என்பது அவரது தலைவிதி? அன்றெழுதியவன் அழித்தெழு தப்போவதில்லையல்லவா?

இத்தகைய நினைவூட்டல்களை யெல்லாம் கேட்டுக்கொண்டே இராமச்சந்திரனார் நடந்துகொண்டிருந்தார். பக்கத்தில் வந்த இவரது மைத்துனர் மிருதுவான குரலில் "ஓர் சாமியார் இந்த ஊருக்குச் சில தினங்களுக்கு முன் வந்துள்ளார். அவர் பெரும்பாலும் தெற்கே உள்ள பிள்ளையார் கோயிலில் தங்கி யுள்ளார். சில வேளைகளில் ஓர் வீட்டுக்கும் போய்த் தங்கு கிறார். அங்கே உணவும் அருந்துகிறார்" என்று சொன்னார். இவ்வார்த்தைகளை மிருதுவான குரலில் அவர் கூறினாலும் பலருடைய காதுள் புகுந்து கொண்டது. அவருள் இப் புதினத்தைக் கூறிய தமையனாரும் ஒருவர். இவர் சாமியா ரைப்பற்றி தம்பியாரின் அபிப்பிராயத்திற்கு எதிர்மாறான கருத்துடையவர். இவர் இளையவரை நோக்கி உரத்த குரலிலே "ஓகோ! நீ கண்டுபிடித்துள்ள சாமியாருக்குப் பிரச்சாரம் தொடங்கிவிட்டாயா? ஒரு பிழைப்பும் இல்லாத சோம்பே றிகள். வண்ணானுக்குக் கூலி கொடுக்க முடியாமல் வேட் டிக்குக் காவி போட்டுக் கொண்டு, அம்பட்டனுக்குக் கூலி கொடுக்க வழியற்று சடையையும் தாடியையும் வளர்த்துக் கொண்டு சாமியாராய்விடுகிறார்கள். உன்போல மடையர்கள் கும்பிடு போட்டு அவர்களைக் கெடுத்துவிடுகிறீர்கள்" என்று கண்டித்தார்.

உலகில் உள்ள எல்லா விடயங்களிலும் எப்போதும் இப்படிப்பட்ட இரண்டு அபிப்பிராயங்களே இருந்துவந்துள் ளன. நல்ல விடயங்கள் நல்ல முறையில் நிறைவேறுவதற்குக் கணிசமான அளவு எதிர்ப்பும் இருக்கவேண்டியுள்ளது. அப் போதான் மனிதன் ஆற்றும் கருமத்தைச் சிந்தித்து ஆற்று கின்றான்.

சில நிமிடங்களில் கூட்டம் கலைந்துவிட்டது. முழுகி விட்டு எல்லோரும் மரணவீட்டிற்கு வந்து சேர்ந்தனர். உணவு அருந்தியதும் முதல்நாள் இரவு முழுவதும் விழித்தி ருந்து தோத்திரம் பாடியகளைப்பினால் அவசர அவசரமாய் எல்லோரும் படுக்கையை விரித்தனர். சாமியாரைச் சந்திக்க வேண்டுமென்று கூறியவர் இராமச்சந்திரனாருக்குப் பக்கத் திலேயே வந்து படுத்து இருந்தார். இதுவும் இறைவனரது செயல் என்று இராமச்சந்திரனார் உணர்ந்து கொண்டார்.

அதிகாலை 4 மணியிருக்கும். இராமச்சந்திரனார் தமக்குப் பக்கத்தில் உள்ளவரை மெல்லத் தட்டினார். அவரும் சுருட்டி வாரி எழுந்திருந்தார். இருவரும் ஓசைப்படாது எழுந்து வெளியே சென்றனர். நேரே பிள்ளையார் கோயிலுக்குச் செல்வது, சாமியார் அங்கே இல்லாவிட்டால் வீடு திரும்புவது. வேறு எங்காவது தேடிச் செல்வதில்லை என்று திட்டமிட்டுக் கொண்டு இருவருஞ் சென்றனர். நடக்க வேண்டிய தூரம் ஒன்றேகால் மைல் இருக்கும். கோயிலுக்குப் போகுமுன் பல் விளக்கிக் கால் முகம் கழுவவேண்டும். தெருவில் நின்ற வேப்ப மரத்தில் குச்சிகள் முறித்து பல்லைத் துலக்கிக்கொண்டு இருவரும் முருகன் கோயில் கிணற்றுக்குச் சென்று தேகசுத்தி பண்ணிக்கொள்ள விரும்பினர்.

இருவரும் கோயில் கிணற்றை நோக்கி நடந்து செல்கிற போது நிலம் நன்ருக வெளிக்கவில்லை. கோயில் வளவில் ஒரடிப் பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தனர். அப்போது எத்தனையோ பழைய நினைவுகள் இராமச்சந்திரனாரின் உள்ளத்தில் தோன்றின. அரசமரத்தடியில் ஓர் சூலம் நடப்பட்டிருந்ததும், அதற்கு ஐயர் பூசை முடிவில் தீர்த்தம் தெளித்துவிட்டு பூச்சாத்துவதும் பளிச்சென்று அவர் மனக்கண்முன் தெரிந்தன. அந்தச் சூலத்தை வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் காப்பாற்ற ஓர் குட்டிக் கோயில் அமைக்கப் பட்டுள்ளதா என்று இராமச்சந்திரனார் உடன் வந்த அன்பரிடம் கேட்டார். “அப்படி ஒன்றும் இல்லை. நேற்றுக் காலைகூட இந்த வழியால் தான் போனேன்” என்ருர். “பழையகாலத்தில் இருந்த சூலத்தை எடுத்துவிட்டார்கள் போலிருக்கிறது” என்ருர். அப்படி என்ருல் மூன்றடி உயரத்தில்தெரிவது என்ன என்று கேட்டார் இராமச்சந்திரனார். அன்பர் திகைத்தவராய்க் கிட்டச் சென்று பார்த்தார். நாம் தேடிவந்த சாமியாரேதான் என்ருர்.

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் காட்சியளித்த பெருமானே என்று எண்ணக்கூடிய முறையில் கம்பீரமான தோற்றத்துடன் விளங்கினார். இருவரும் அவரை நெருங்கியதும் இராமச்சந்திரனாரை இருக்குமாறு பணித்துவிட்டு மற்றவரைப் பூப்பிடுங்கிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். விடயத்தைப் புரிந்துகொண்ட அன்பர் அவ்விடத்தைவிட்டு அகன்ருர்.

இராமச்சந்திரனுரை உற்றுப்பார்த்த சாமியார் "நீயும் நம்ம பட்டிதான், ஆன்மீக விஷயத்தில் அவசரப்படக் கூடாது" என்று ஆரம்பித்தார். "நேற்று மாலை சுடலையில் இருந்து வரும்போது சனங்கள் பேசிக்கொண்டதெல்லாம் எனக்குத் தெரியும். அவர்களுடைய கண்டனம் உனது செவியில் ஏறவில்லை என்பதும் எனக்குத் தெரிந்தது. ஆகையால் நீங்கள் இருவரும் வீட்டைவிட்டுக் கிழம்பியவேளையில் நானும் பிள்ளையார் கோயிலைவிட்டுக் கிழம்பிவிட்டேன். உனக்குச் சிரமம் தராது, உனக்கும் உனது தாயார்க்கும் புகலிடமாயிருந்த இந்தப் புனித இடத்தில் சந்திக்கச் சங்கல்பம் செய்துவிட்டேன். அந்தச் சங்கல்பம்தான் உங்கள் இருவரையும் இந்தப் பாதையில் வரச்செய்ததாகும்" என்று திருவாய் மலர்ந்தார்.

"பிரிந்த அம்மையார் உனக்கு மாத்திரம் தாயார் அல்லர். எனக்கும் இந்த ஊர் மக்கள் சகலருக்குமே அவர் தாயார் ஆவர். பெரிய இல்லறஞானி அவர். அன்னதானஞ் செய்வதில் அவருக்கு ஒரு தனி ஆனந்தம். இடம், பொருள், ஏவல் மூன்றும் பூர்வ புண்ணிய வசத்தால், வந்தமைந்தபடியால் அன்னாரின் கோரிக்கை பூரணமாய் நிறைவேறிவிட்டது. உங்கள் வீட்டுத் தலைவாசலில் ஓர் பெரிய குடம் நிறைய மோர் தில்லையம்பல வித்தியாசாலை மாணவ மாணவிகளின் தாகத்தைத் தீர்க்க தினந்தோறும் வைக்கப்பட்டிருக்கும். நானும் சின்னவயசில் நீ படித்த வகுப்புக்கு அடுத்த வகுப்பில் படிக்கும்போது, வயசொத்த பிள்ளைகளோடு வந்து மோர் குடித்துள்ளேன். குடத்தை மூடியிருந்த சட்டியின் மேல் ஓர் மூக்குப்பேணி இருந்த காட்சி மறக்க முடியாத ஒன்று" என்று இராமச்சந்திரனுரின் தாயாருடைய தெய்வத் தன்மைகளை விபரித்த பின்பு ஆன்மீக சம்பந்தமான விஷயங்களுக்கு வந்தார். மகாத்மா காந்தியுடன் இராமச்சந்திரனுருக்கு இருந்த தொடர்பு, யோகர் சுவாமிகளுடன் இருந்த அத்யாத்ம உறவு, சுவாமி இராமதாசர், சுவாமி சிவானந்தர் ஆதியோருடைய நூல்கள் மூலம் பெற்றுள்ள அறிவு முதலாயவற்றைத் தாமே சொல்லிவிட்டு இராமச்சந்திரனுரைப் பேசத்தூண்டும் முறையில் சம்பாஷணையைத் திருப்பினுர்.

முதலில் இராமச்சந்திரனுர் தான் தரிசித்த இலங்கைச் சாதுக்களைப் பற்றிக் கூறினுர்.

பெரியகடைச் சுவாமியின் அடியார்கள் என மதிக்கப்பட்ட காசிச்சுவாமி, கற்கண்டுச்சுவாமி ஆகிய இருவரின்

ஆசிகளைத்தான் மூன்ருவது வயசில் பெற்றதை எடுத்துச் சொல்லிவிட்டு, யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக்கல்வி கற்கும் போது சந்தித்த நல்லூர் செல்லப்ப சுவாமிகள், ஒட்டுமடம் பொன்னப்ப சுவாமிகள் இருவரையும் குறிப்பிட்டார். பின்னர் உத்தியோகமானபின் சந்தித்த அருளம்பல சுவாமிகள், சடைவரத சுவாமிகள் ஆகிய இருவரும் காட்டிய விசேட அன்பையும் விளக்கினுர். கொழும்பில் படிக்கும்போது ஆனைக்குட்டி சுவாமிகளைத் தரிசிக்கவில்லையோ? என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார் சுவாமியார். இருமுறை சந்தித்ததாக இராமச்சந்திரனுர் விடை கூறினுர்.

"அவர் உனக்கு ஒன்றும் கூறவில்லையா?" என்ருெரு கேள்வியைக் கேட்டார். இரண்டாம் முறை அவரது தரிசனம் தமக்குக்கிடைத்து, அஞ்சிலாம்படியில் என்றும் அப்போது அவர் ஒரு கள்ளுத்தவறணையின் எதிர்ப்பக்கக் கானுக்குள் நின்றுகொண்டு, அங்கு வந்து மது அருந்திக்கொண்டிருந்த ஆண்களையும் பெண்களையும் பார்த்தவண்ணம் சிரித்துக் கொண்டிருந்தார் என்றும் தம்மை வணங்கிய இராமச்சந் திரனுரைப் பார்த்து "நீயும் இப்படி ஒரு நாள் குடித்துவிட்டுக் கூத்தாடுவாய்" என்று சொல்லிப் புன்னகை செய்தார் என்றும் கூறினுர். அந்தப் புன்சிரிப்பை நினைவூட்டும் முறையில் சாமியாரும் ஓர் புன்முறுவல் பூத்த முகத்துடன் "குருநாதன் நல்ல ஆசி தந்துள்ளான்" என்ருர். "நீ இன்னும் சந்திக்க வேண்டிய ஒரு மகான் இருக்கிருர். அவர் திருவண் ணுமலையில் எழுந்தருளியுள்ளார். ரமண மகரிஷி என்பது அவர் பெயர். அவரைப்பற்றி நீ கேள்விப்படவில்லையோ?" என்ருர் சாமியார்.

"கேள்விப்பட்டிருக்கிறேன் சுவாமி. அவரது வரலாற் றையும் மௌன உபதேசமகிமையையும் படித்துமிருக்கிறேன். ஆனுல் அழைப்பு இன்னுங்கிட்டவில்லை. திருவருள் கூட்டுங் காலம் வரவில்லைபோலும்" என்று பதில் கூறினுர் இராமச் சந்திரனுர்.

"ஆம்! ஆம்! அவனன்றி அணுவேனும் அசையாதென்ற ஆப்தர் மொழியின் உண்மை ஆன்மீக வாழ்வில்தான் தெளி வாகப் பிரதிபலிக்கின்றது. திருவாதவூரர் திருப்பெருந்துறைக் குப் போனது பாண்டியன் கட்டளைப்படி குதிரை வாங்கவா, அல்லது குருதரிசனம் பெறவா? தாயுமானவர் மௌனகுரு

வந்திருக்கிருர் என்று கேள்விப்பட்டா திருச்சி மலைக்கோயிலுக்குப் போனவர்? வழக்கம்போல் தெய்வ ஆராதனைக்கல்லவோ சென்றவர்" என்று கேள்வியும் கேட்டு விடையும் தானே கூறினர். "சிறு வயதிலேயே உன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் சந்நிதானத்தில் ஸ்ரீ அருணசலேஸ்வரருக்கு அர்ப்பணஞ் செய்ததை அறியாயா? திருவண்ணமலையில் அந்த மகான் உனக்குத் தாயாகவும் தந்தையாகவும் குருவாகவும் விளங்குவார். உனது வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிருர்" என்று கூறினர். சுவாமிகளுடைய தீர்க்க தரிசனமான திருவார்த்தைகள் அடுத்த ஆண்டு திருக்கார்த்திகை வைபவத்தோடு நிறைவேறியது.

சுவாமியாரின் வார்த்தைகளில் மனதைப் பறிகொடுத்த இராமச்சந்திரனர் உள்ளம் உருகி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். வைகறை இருளும் அகன்றது. சுவாமிகளுடைய திருமுகமும் தேஜோமயானந்தமாக விளங்கியது. இராமச்சந்திரனர் எழுந்து அடியற்ற மரம்போல சுவாமிகளுடைய பாதத்திலே வீழ்ந்து தமது கண்ணீரால் பாதங்களைக் கழுவினர். சுவாமிகள் அவருடைய சிரசிலே தமது திருக்கரத்தை நாட்டி ஆசீர்வதித்தார்.

இந்தச் சாமியாரின் முழுப்பெயர் ஸ்ரீ முத்துக்குமார சுவாமிகள் என்பதாகும். ஆனல், யாழ்ப்பாணத்தில் பெரும்பாலோர் நயினதீவுச் சாமியார் என்றே அழைத்தனர். அவர் பிறந்ததும் அந்த ஊரில். அவரது சமாதிக்கோயிலும் அங்கே தான் நிறுவப்பட்டுள்ளது. இவரதுகுரு ஆனைக்குட்டிச்சுவாமிகளாகும்.

நயினதீவுச் சுவாமிகளுடைய இந்த உபதேசம், மகாத்மாகாந்தியைப் போற்றி பேணி வாழ்ந்து வந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. சுவாமிகளின் அன்புக்கட்டளைப்படி ஓர் பூரண ஞானகுருவை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தை இராமச்சந்திரனருக்கு அதிகரிக்கச் செய்தது. பெற்ருேருக்குச் செய்யவேண்டிய அந்தியேட்டிக் கிரியை முதலானவற்றை இராமேச்சுவரத்தில் மனைவியுடன் சென்று முடித்த பின்னர் தந்தை வழிப்பாட்டனரும், அவர்களது மூதாதையர்களும் குலதெய்வமாக வழிபட்ட பழனி தண்டாயுதபாணி சுவாமிகளின் தரிசனத்தை விரும்பி அங்குச் சென்றனர்.

பழனியில் சென்னைப் பத்திரிகைகள் இரண்டைப் படிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதில் முதற் பக்கத்தில் பெரிய

எழுத்தில் முக்கிய புதினம் ஒன்று காணப்பட்டது. காந்தி அடிகளின் உண்ணுவிரதத்தின் பின் எரவாடா மறியற்சாலையில் அவருக்குக் கடுமையான சுகவீனம் ஏற்பட்டு அரசாங்கம் அவரை விடுதலை செய்து விட்டதாகவும், அடிகள் இப்போ பூனுவில் லேடி தக்கர்ஜீ அரண்மனையில் சிகிச்சை பெறுவதாகவும் இருந்தது. பழனியிலிருந்து சுவாமி இராமதாசரைத் தரிசிக்க ஆனந்தாச்சிரமம் செல்ல இருந்த இராமச்சந்திரா குடும்பத்தினர் காந்தி அடிகளின் புதினத்தின் பின் தமது பிரயாணத் திட்டத்தை மாற்றிக்கொண்டனர். நேரே பங்களூர் மார்க்கமாகப் பர்ணகுடியை அடைந்தனர். அவர்கள் போன நேரம் வைத்தியர்களின் சிகிச்சை நடந்துகொண்டிருந்தபடியினுல் அடிகளைப் பார்க்க உத்தரவு கிடைக்கவில்லை. எனினும் மாலை 5-30 மணிக்கு நடக்கப்போகும் பிரார்த்தனையில் கலந்துகொள்ளவருமாறு அன்னை கஸ்தூரிபாய் பேரனுர் திரு. திருக்கம்சிமூலம் அழைப்புக்கொடுத்தார்.

அக்கூட்டத்தில் வண. சி. எவ். அன்றூஸ் (தீனபந்து), கவியரசி சரோஜினிதேவி, லேடி தக்கர் ஜீ உட்பட எட்டுப் பிரமுகர்களே அழைக்கப்பட்டிருந்தனர். இப்பெரியார்களுடன் கூடி ஒரு மணித்தியாலப் புனிதப் பிரார்த்தனையிற் பங்கெடுத்துவிட்டு நேரே மங்களூர் சென்ருர்கள். ஆனந்தாச்சிரமம் போய்ச்சேர்ந்த அன்றிரவே சுவாமி இராமதாசர் அவர்கள் இராமச்சந்திராவையும் அவரது மனைவியாரையும் தனிமையில் தோட்டத்திற்கு அழைத்துச்சென்று குடும்பவிஷயங்கள், உத்தியோக விபரங்கள் எல்லாம் விசாரித்த பின்,

"நீங்கள் பகவான் ரமண மகரிஷிகளைச் சந்தித்ததுண்டோ?" என்று கேள்வி கேட்டார்.

"இல்லை" என்று பதில் கூறினுர் இராமச்சந்திரா.

ஐந்து வாரங்கட்கு முன் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் பகவானிடம் போகுமாறு கொடுத்த அன்புக் கட்டளையையும் விபரமாக எடுத்துச் சொன்னுர். அதனைக்கேட்ட சுவாமிகள் "நீங்கள் இருவரும் கட்டாயம் அவரைத் தரிசிக்க வேண்டும்" என்று ஆசி கூறினுர்.

இரு மகான்களின் ஆசி கிடைத்த பின்பும் ரமணுச்சிரமம் போகாது இருக்க முடியுமா? ரமணுச்சிரமம் செல்ல முயற்சி செய்தனர். லீவு நாட்கள் முடிந்தும்விட்டன. அதனுல் உடனே ஊர் திரும்ப வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

"எண்ணியபடி எதுவும் நடக்காது
ஏதும் அவன் செயல் அல்லவா?" தரிசனம் பெற வேண்டிய காலமும் பொருந்தவில்லை போலும். ஊர் திரும்பியதும் லீவு எடுத்துக்கொண்டு மறுபடியும் யாத்திரையை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானித்தே ஊர் திரும்பினுர்கள். அந்த ஆண்டில் (1933) மறுபடியும் லீவு பெற்றுக்கொள்ள முடியவில்லை. அடுத்த ஆண்டுக்குப் போட்ட திட்டத்திற்கும் எதிர்பாராத தடை ஏற்பட்டது. இந்த நிலையில்தான் பகவானின் கருணை ஸ்ரீ ரமணபாதானந்தர் என்னும் மெய்யடியார் மூலம் வெளியாயது.

1933-ம் ஆண்டில் இராமச்சந்திரனுர் மனைவியாருடன் செய்த யாத்திரையின்போது ரமண பகவானின் தரிசனம்பெற முடியாமல் திரும்பிவிட்டோமே என்று ஏங்கினுர். அந்த ஏக்கம் ஆழத்தில் பதிந்து இருந்தது. மலையைத் தேடி மம்மது போகாவிட்டால் மம்மதைத்தேடி மலையே வந்து விட்டது போன்று பகவானின் திருவிளையாடல் ஒன்று நிகழ்ந்தது.

இந்திய யாத்திரையால் திரும்பிச் சில வாரங்கள் கூடஆகவில்லை. ஒருநாள் ஸ்ரீரமணபாதானந்தர் என்னும் மெய்யடியார் முகவைக்கண்ண முருகனுரால் எழுதப்பட்ட ரமண சந்நிதி முறைப் பிரதி ஒன்றுடனும் பகவானின் புகைப்படம் ஒன்றுடனும் இராமச்சந்திரனுரின் வீட்டு முற்றத்தில் காட்சி அளித்தார். இராமச்சந்திரனுரைப்பற்றி முன் பின் அறியாத ஒருவர் அவருடைய வீடு தேடி வருவதென்றுல் பகவானின் கருணையைத் தவிர வேறு என்ன நியாயத்தைக் கூறமுடியும். இதற்குச் சான்றுக,

"என்னிச்சையோ வருணையீசா படைத்தளிக்கும்
உன்னிச்சை யன்றேஉரை"

என்ற பகுதியே இலக்கணமாக அமைகின்றது. ஆரம்பத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணபரமகம்சர் விவேகானந்தருடைய வீட்டிற்குச் சென்று வலிந்து ஆட்கொண்டது போலவும், குதிரை வாங்கச் சென்ற மணிவாசகரை திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் எழுந்தருளியிருந்து சிவபெருமான் ஆட்கொண்டது போலவும் பகவான் தனது உத்தம சீடனுகப் போகும் ஒருவரை "உத்தம சீடனைக் கருவியாகக்" கொண்டு வலிந்து ஆண்டார் என்றுல் அது மிகைப்படுத்திக் கூறப் படுவதொன்றல்ல.

இராமச்சந்திரனுரின் சினேகிதர் ஒருவர் டாக்டர். ஒரு நாள் அவர் ஒரு கனவு கண்டார். தானும் இராமச்சந்திரனுரும் ஒன்று சேர்ந்து தலயாத்திரை செய்தார்களாம். ஒரு சாமியாரை இருவரும் காணச்சென்ற போது இராமச்சந்திரனுர் டாக்டரைப் பிடித்து சாமியாரின் அறையினுள்ளே தள்ளிவிட்டாராம். இக்கனவை டாக்டர் இராமச்சந்திரனுருக்குக் கூறிய போது இராமச்சந்திரனுர் ரமணபாதானந்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட ரமணபகவானின் படத்தை எடுத்து இவர்தானே நீங்கள் கனவிற்கண்டசாமியார் என்று கேட்டார். என்ன ஆச்சரியம்? அவரேதான்.

இதற்குமேலும் ரமணுச்சிரமம்செல்லுவதைப் பின்போடவிரும்பவில்லை. டாக்டரும் இராமச்சந்திரனுர் குடும்பமும் ஒருவாரத்துள் ரமணுச்சிரமம் போய்ச் சேர்ந்தனர். இவர்கள் ஆச்சிரமம் போய்ச்சேர்ந்த நேரம் மத்தியான நேரம். சாப்பாடு முடிந்த நேரம். மகரிஷிமாத்திரம் மண்டபத்தில் தனியாக இருந்தார். கனவின்படி முதலில் டாக்டரும் அவருக்குப்பின்னுல் இராமச்சந்திரனுரும் உள்ளே நுழைந்து சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினர். பகவான் இரு கைகளையும் உயர்த்தி இருங்கள் என்று பணித்தார். எதைத் தேடிச் சென்ருரோ அதைக்கண்டார். வாக்குமோனம் கடந்த அநுபவம். மூன்று தினங்கள் தங்கியிருந்து திரும்பினர்.

ரமண தரிசனம் கிடைத்து ஆண்டுகள் இரண்டு கழிந்துவிட்டன. ஆச்சிரம அடியார்கள் பலருடைய உள்ளத்தில் இராமச்சந்திரனுர் முக்கிய இடம் பெற்றுவிட்டார். முருகனுர் இயற்றிய ரமண புராணம் ஈசுவர வருஷம் கார்த்திகை மாதம் 15-ந் திகதி ரமணுச்சிரமத்தில் அரங்கேற்றம் பெற்றது. ரமணுச்சிரம பக்தர்களும், வெளியிலுள்ள பக்தர்களும் மத்தியானச் சாப்பாட்டின் பின்னர் மாலை 4 மணிவரை தத்தமது ஆத்மீக அனுபவங்களைப்பற்றிக் கலந்துரையாடுவது வழக்கம். பக்தர்ஒருவர்இராமச்சந்திரனுரை அணுகிஅவர்பகவானை வந்தடைந்த செய்திபற்றியும் அவரது சாதனை முறைபற்றியும் வினவினுர். இராமச்சந்திரனுர் காலை மாலை சிறுவயதிலிருந்து கந்தர்கலி வெண்பா பாராயணஞ் செய்யும் பழக்கம் உடையவராயிருந்தபடியினுல் தம்முடைய மனதிற்குப் பரிச்சயமான உள்ளத்தை அள்ளிய 12 வரிகளைப் பாடிக் காட்டினுர்.

"கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றி
குருபரனென்றோர் திருப்பேர்கொண்டு—திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி யுடலுறுபத் தெட்டுநிலம்
ஏழுமத்துவாக்கள் இருமூன்றும்—பாழாக
ஆணவமானபடலங் கிழித்து அறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி" வரிகள்: 24-26

"இடுக்கண் எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்
துல்லாசமாக உளத்திருந்து—பல்விதமாம்
ஆசுமுதல்நாற்கவியு மட்டாவதானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப்பியத் தொகையும்—ஓசை
எழுத்து முதலாமைந்திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்தொழுக்கமுடன்"
வரிகள் 117-119

இப்பாடல் வரிகளைக் கேட்ட அன்பர் தாம் இதுவரை குமர குருபர சுவாமிகளின் பாடலைக் கேட்டதில்லையென்றும் குறிப்பிட்ட அடிகளை எழுதித் தருமாறும் கேட்டார். இராமச்சந்திரனுர் உடனே ஒரு கடிதம் பெற்று அதனை எழுதிக்கொடுத்தார். அன்பர் அதனைப் பலமுறை வாசித்து வாசித்து உள்ளூர மகிழ்ந்தார். முந்திய ஆறு வரிகள் பகவானின் கருணைக்கும் அடியார்களாகிய எங்களின் அநுபவத்திற்கும் எவ்வளவு பொருத்தம் என்று கூத்தாடினுர். மற்றைய இரு வரிகளும் முருகனுர் ஒருவருக்கே பொருந்தும் என்று சொல்லி முடித்தார்.

முருகனுருக்குத் தகுதியும் தராதலமும் இருந்தது. இரந்து பெற்றுக் கொண்டார். உங்களுக்கோ, எனக்கோ, வேறு எவருக்கோ அவ்வித பக்குவம் இருக்கவில்லை. எனவே அந்த வரம் கேட்கவுமில்லை; பெறவுமில்லையென்று இராமச்சந்திரனுர் கூறினுர்.

# ஸ்ரீ ரமண மூர்த்தியின் அற்புத லீலைகளில் ஒன்று

இராமச்சந்திரனுர் புகையிரதப் பகுதியின் கணக்குக் கந்தோரில் வேலை பார்த்த காலம். அப்போது அதின் இரண்டாவது மேலதிகாரியாக இருந்தவர் திரு. ச. அவரது மிகநெருங்கிய பழைய நண்பர். இவர் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். சமயத்துறையில் குடும்பத்துடன் ஆலயம் போவதோடு நின்று விடுபவர். கூட்டுப்பிரார்த்தனை, குருபூசைகளில் ஈடுபடாதவர். 1942-ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட "பெரியார் தோத்திர மஞ்சரி"யின் பிரதி அவருக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதில் இராமகிருஷ்ணர், சாரதாதேவி, விவேகானந்தர், காந்தியடிகள், ரமணமகரிஷிகள், அரவிந்தர், இராமதாஸர், சிவானந்தர் முதலாயமகான்கள் மீது இராமச்சந்திரனுர் இயற்றிய தோத்திரங்கள் அடங்கியிருந்தன.

இராமச்சந்திரனுர் வேலைபார்த்த கந்தோர் கீழ்மாடியில் இருந்தது. 'ச'வின் கந்தோர் அதே கட்டிடத்தின் மேல் மாடியில் இருந்தது. ஒருநாள் 'ச' அவர்கள் தொலைபேசியில் இராமச்சந்திரனுருடன் பேசி "ஒரு பெரியார் உங்களைக் காண விரும்புகிருர். அவர் இப்போது என் அறையில் இருக்கிருர் ஐந்து நிமிடம் வரமுடியுமா?" என்று கேட்டார். உடனே அழைப்பிற்கிணங்கி மேலே சென்றுர். வந்திருந்த பெரியார் பண்டிதர் 'க' என அறிமுகப்படுத்தப்பட்டார். இவரைமுன்னர் ஒருபோதும் சந்திக்கவில்லை என்றும் பெயரைக் கேள்விப்பட்டுள்ளதாகவும், அவர் தமிழில் வரைந்த சில கட்டுரைகளைப் படித்துள்ளதாகவும் இராமச்சந்திரா மறுமொழி கொடுத்தார். மேசையின் மேல் பெரியார் தோத்திர மஞ்சரி இருப்பதும் அவருக்குத் தெரியவந்தது. சந்தித்துப் பேசவேண்டிய விஷயத்தையும் உள்ளறிவின் உதவி கொண்டு யூகித்துக் கொண்டார். "இப்பெரியார் நேற்றும் உங்களைத் தேடிவந்து பேசிப்போனவரல்லவோ" என்ற கேள்வியைப் போட்டுவிட்டு இராமச்சந்திரனுர் அருகிலிருந்த கதிரையில் இருந்தார்.

இரு அன்பர்களும் தாங்கள் சம்பாஷிக்க விரும்பிய விஷயத்தை வெளிப்படையாகக் கூறுவதற்குத் தயங்குகிருர்கள் என்பதை உணர்ந்து கொண்ட இராமச்சந்திரா

அவர்கள் தாமாகவே சம்பாஷணையைத் தொடங்கினூர். பண்டிதரை விளித்து "இந்தத் தோத்திர மஞ்சரியிலுள்ள பாடல்கள் சில உங்களுக்குப் பிடித்திராது. இந்த உண்மையை மனிதனைத் தெய்வமாக வழிபடுவதைக் கண்டிக்கும் பகுத்தறிவாளிகள் சிலர் எனக்கு நேரே அறிவித் தி ரு க் கி ரு ர் க ள்". முக்கியமாக

"முன்னொரு நாட்சனற் குமரனுகத் தோன்றி
மூவருடன் மறைபயின்ற முருகன் கண்டாய்
பின்னொருகாற் சம்பந்தப் பெருமானுகிப்
பிறைசூடி மகிழப் பண்இசைத்தான் கண்டாய்
மன்னுயிர்கள் உய்வதற்காய்ப் பாண்டி நாட்டில்
மறுபடியும் வந்துதித்த மணுளன் கண்டாய்
உன்னுவாருளத் தொளிரும் உண்மை கண்டாய்
உலக குருவாம் ரமணமூர்த்திதானே"

"என்ற பாட்டையும் ரமணரை முருகன் அவதாரமாகப் பாடியிருப்பதையும் வைதிக சைவர்கள் விரும்பவில்லை" என்று கூறிமுடித்தார்.

இக்கூற்று இரு பெரியார்களின் உள்ளத்தில் வி ய ப் பு உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. பண்டிதர் கூச்சந்தெளிந்து "நீங்கள் நல்லூர்க் கந்தசாமி கோயிலில் உள்ள ஆறுமுக சுவாமியை வழிபட்டிருக்கிறீர்களா?" என்ற கேள்வியைப் போட்டார். யாழ்ப்பாணத்தில் கல்லூரி மாணவனுக இருந்தபோது எப்போதும் அதிகாலையில் அந்த மூர்த்தியைத்தவருது கும்பிட்டதாக இராமச்சந்திரா கூறினூர். பண்டிதர் அடுத்த கேள்வியையும் கேட்டார். அதாவது தானும் மாணவனுக இருந்த காலத்தில் அதனை விசேடமாக வழிபட்டதுண்டு. அப்போது அந்த விக்கிரகத்தின் இருமருங்கிலும் தேவிமார் அமர்ந்திருந்தனர். "நீங்கள் வழிபட்ட காலத்திலும் அப்படித்தான் இருந்ததோ" என்ருர். "ஆம்" என்று கூறிவிட்டு "நகரக் கோயிலானபடியினுல் ஆகமவிதிப்படி ஸ்ரீ சண்முக விக்கிரகம் அப்படித்தானே அமையவேண்டும் என்று இராமச்சந்திரனூர் விளக்கங்கொடுத்தார். பண்டிதர் சிரித்தவராய் சந்தித்துப் பேசியதற்காக நன்றி செலுத்தி விடை பெற்றுக்கொண்டார். இச் சம்பாஷணையில் மற்ற நண்பர் "ச" பங்கெடுக்கவில்லை.

அடுத்த நாள் தொலைபேசி அழைப்பின் மேல் அவரை இராமச்சந்திரனார் தனிமையில் சந்தித்தார். அப்போது பண்டிதர் பெற்ற அநுபவத்தை பின்வருமாறு இராமச்சந்திரனாருக்கு விபரமாக எடுத்துரைத்துத் தமது மயக்கத்தையுந் தீர்த்துக் கொண்டார். பண்டிதர் முதன்முறை தம்மைச் சந்தித்தபோது "பெரியார் தோத்திர மஞ்சரியைப் பார்வையிட நேர்ந்ததென்றும் அதில் அடங்கிய பாடல்கள் சில அவருக்குப் பிடிக்கவில்லை என்றும் குருபக்தியில் ஒருவர் தோத்திரஞ் செய்யலாம்; ஆனால் அப்பாடல்களை அச்சிட்டுப் பரப்புதல் சைவமரபுக்கு முறையானதல்ல என்றும் கூறினாரென்றும் தெரியச் செய்ததோடு அவர் கருத்துக்களையே தாமும் நூலைப் பார்த்தபோது மனதில் பெற்றதாகவும் சொன்னார்.

அன்றிரவு நித்திரையில் பண்டிதர் ஓர் விசித்திரமான கனவு கண்டு, அதைத்தனக்கு எடுத்துக் கூறவும் இராமச்சந்திராவைச் சந்தித்துப் பேசவே அடுத்த நாள் அவசர அவசரமாக இரண்டாம் முறை வந்ததாகவும் தெரியவந்தது. அக்கனவில் பண்டிதர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போயிருந்ததாகவும், அங்கே ஸ்ரீ சண்முகர் தேவிமார் இல்லாமல் காட்சி அளித்ததைக் கவனித்து குருக்களிடம் தேவிமாரை ஏன் எடுத்துவிட்டீர்கள்? என்று கேட்க அவர் "இது பக்தன் இராமச்சந்திரனுக்கு காட்சி அருள்வதற்காக" என்று மறுமொழி கூறினாராம். இதன்மேல் இராமச்சந்திரனாருக்கு பகவான் புரிந்த திருவிளையாடல் விளங்கிவிடட்டது. பண்டிதர் ஓர் வளர்ந்த ஆத்மா ஆனபடியால் கனவில் உபதேசம் அருளிவிட்டார் என்பதில் மகிழ்ச்சி உண்டாயது. அதன்மேல் தாம் பகவானை முதலில் தரிசித்தபோது பெற்ற அற்புத அனுபவத்தை அன்பர் 'ச'வுக்கும் அவர் மூலம் பண்டிதருக்கும் தெரியச் செய்வது தம்கடமையென்றுணர்ந்து அதனை விவரமாக எடுத்துரைத்தார். அதாவது ஸ்ரீ ரமண மூர்த்தி மனித உருவில் காட்சி அளிக்கவில்லை. வயிற்றில் மூன்று மடிப்பும் வலக்கையில் தண்டமும் இடது கை இடுப்பில் விளங்க கோவணம் உடுத்த ஞானஸ்கந்தராகவே தம்மை ஆட்கொண்டருளினர் என்பதாம்.

# கவிதைகள்

இராமச்சந்திரனுரின் தமிழ்மொழிச் சேவையையும் இந்துமதப்பணியையும் விபரிக்கும் இப்பகுதியைமுடிக்குமுன் அவரதுகவிதையின்சிறப்பைப்பற்றியும்சிறிதுசொல்லவேண்டி உள்ளது. அவர் எழுதிய நூல்களைப் பாராட்டி எழுதிய ஓர் அணிந்துரையில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்,

"இராமச்சந்திரனுர் எழுதிய கட்டுரைகள் பலதுறைப் பட்டவைகள். அவைகள் அவ்வத்துறை கைவந்தவர்களுக்குச் சிறப்பாகப் பயன்படுதல் மாத்திரமன்றி, சமய பக்தியை வளர்த்தலினுலே யாவருக்கும் பொதுவாகவும் பயன்படு பவை. அவர்களியற்றிய பக்தி கவிதைகளிற் கிடைத்தவற் றைப் படித்துச் சுவைப்பதில் நான் தவறுவதில்லை" என்று வரைந்துள்ளார்கள்.

கம்பன் கவிதையிலும் இருபதாம் நூற்ருண்டில் தோன்றிய சுப்பிரமணிய பாரதியார் நாமக்கல் கவிஞர், தேசிகவிநாயகம் பிள்ளை, யோகி சுத்தானந்த பாரதியார் முதலிய கவிஞர் களின் பாடல்களிலும் திளைத்தவர். இவரது பாடல்களில் உண்மையான கவிதைக்கியல்பான எளிமையும், இனிமையும், தெளிவும், அருமையும் அமைந்திருப்பதைக் காண்கிருேம். அகராதியிலுள்ள கடினமான சொற்களைத் தேடி எடுத்து சேர்க்கப்பட்ட செய்யுள்கள் அல்ல இவை. பேனுவின் உதவி கொண்டு கடதாசியில் வரையப்பட்டனவுமல்ல.

அக்காரணத்தினுல் அவர் முப்பது வயசுக்கு முன் இயற் றிய தோத்திரங்கள் மறைந்துவிட்டன. இப்போது கிடைத் துள்ளவை அவரது புத்திரிகளும் கொழும்பு சத்சங்க அன்பர் களும் காலத்திற்குக் காலம் கவனமாகச் சேகரித்து வைத்த வையேயாம். எளிய நடைக்கு உதாரணமாக அவரால் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மீது பாடப்பட்ட தோத்திரங்களில் ஒன்றை மாத்திரம் பார்ப்போம்.

"எனக்கென்ருேர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் நலமொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை"

உயர்வற உயர்ந்த இலட்சியமொன்று எவ்வளவு எளிய சொற்களில், குழந்தைகளின் மழலைப்பேச்சுப்போல் விளக்கம் பெறுகிறது. நாவலர் பெருமான் மீது இராமச்சந்திரனாருக்குச் சின்னஞ் சிறு வயதிலிருந்தே அளவற்ற பிரேமை உண்டு. அவரைப் பழந்தமிழ் மரபுக்குப் பொருந்திய ஓர் இணையற்ற வீரனாகவே அவர் கண்டார். எனவே அவர் பாடிய தோத்திரம் அவரது வீரத்தையும் தீரத்தையும் விளக்கும் தரத்தில் அமைந்துள்ளது.

அதையும் பார்ப்போம்:

“அச்சமுற்று அடிமைகளாய் அயலார்க்கஞ்சி
.................................................................
.................................................................
எழில்நல்லை நாவலனருள் ஏத்துவோமால்”

இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடவேண்டிய ஓர் முக்கிய விஷயம் உண்டு. ஐந்தாங்குரவர் என்ற தலைப்புடன் யோகி சுத்தானந்தரைக் கொண்டு நாவலர் வரலாற்றை எழுதத் தூண்டியவர் இராமச்சந்திரனாராகும். அந்த நூலை 1940-ம் ஆண்டில் புதுச்சேரியில் அச்சிடவேண்டிய பணத்தைச் சேகரித்து அனுப்பியவரும் அவரே.

# தற்கால மகான்களைப் போற்றிய வண்ணம்

இராமச்சந்திரனுரின் உள்ளம் மெய்யடியார்களைப் போற்றிய மனப்பான்மைக்கு இலக்கணமாய் அமைந்தது பின்வரும் திருத்தொண்டத்தொகைப்பாடலாகும்.

"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசியமுனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே."

தற்காலத்திலே உடல்கொண்டு உலாவும் மகான்களது பிறந்த தினங்கள் சந்நியாச தினங்கள் ஆகியனவற்றை 63 நாயன்மாருடைய குருபூசைகள் போலவே ஈழத்தில் கொண்டாடும் ஒரு மரபை முதன் முதல் ஏற்படுத்திய பெருமை இராமச்சந்திரனுரையே சாரும்.

சைவ சித்தாந்த மரபையும் வேதாந்த மரபையும் போற்றி வளர்த்த குடும்பத்திலே பிறந்து வளர்ந்த இராமச் சந்திரனுருக்கு 12 வயதுக்குள்ளேயே 63 நாயன்மார்களுடைய திருச்சரிதத்தை அறிந்திருக்கும் வாய்ப்புக் கிடைத்திருந்தது. ஆனுல் யாழ்ப்பாணச் சைவ மக்கள் மத்தியகால மகான்களுக்கு மாத்திரம் குருபூஜை விழா எடுத்துக்கொண்டாடினுர்களே தவிரப் பிற்காலத்தவரைக் கொண்டாடினுல் சிவத்துரோகமாகும் என்றும் சிலர் எண்ணினர். இந்தத் துறையில் வட இந்தியாவிலுள்ள இந்துக்கள் முன்னணியில் நின்றதை இராமச்சந்திரனுர் உணரமுடிந்தது. 15-ம் நூற்றுண்டு தொடங்கி 20-ம் நூற்றுண்டு வரை தோன்றிய தென்னிந்திய மகான்களின் வரலாற்றைக் கற்று இம்மகான்களிற் சிலர் நாயன்மார்களுடைய வாழ்க்கையிற் கூடிய பெறுபேறுடையவர்களாயும் அனைத்துலகுக்கும் பொதுவான போதனைகளைச் செய்தவர்களாயும் இருந்ததை உணர்ந்தார். இந்த அனைத்துலக மனப்பான்மையே பழமை போற்றும் இந்துக்களது மனத்தில் ஒருவித துவேஷத்தை உண்டாக்கியதையும் அறிந்தார்.

இராமச்சந்திரனுர் முதன் முதல் கொண்டாடிய தினம் மகாத்மாவின் பிறந்த தினமாகும். மகாத்மாவின் திருப்பாதம் தீண்டப்பெற்ற இல்லத்தை உடைய பெருமையும் இராமச்சந்திரனுருக்குரியதாகும். 1922ஆம் ஆண்டிலே மகாத்மா காந்தி அடிகள் பூனு நகரிலுள்ள எரவாடாச் சிறையிலே இருந்த போது நயினுதீவிலே காந்தியின் பிறந்த தினத்தை முதன் முதலாகக் கொண்டாடினுர். வழமைபோல இக்கொண்டாட்டத்தின்போது பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்கண்டும் கடலையும் வழங்கப்பட்டன. இதன்பின் வருடந்தோறும் வெவ்வேறு இடங்களில் காந்தியின் பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. இராமச்சந்திரனுரே பிரதமபேச்சாளராக விளங்கினுர். 1927ல் முதன் முதல் கொழும்பில் காந்தி தினம் கொண்டாடப் பட்டது.


இதற்குச் சில வாரங்களின் பின் கதர் இயக்கத்திற்குப் பணம் சேர்க்கும் நோக்கமாக காந்தி அடிகள் இலங்கை வந்தார். மலைநாட்டில் காந்தியின் சுற்றுப் பிரயாணத்திற்கு இராமச்சந்திரனுரே முக்கிய பொறுப்பாளராக இருந்தார். இராமச்சந்திரனுர் மகாத்மாவுடன் தமக்குக் கிடைத்த அனுபவங்களை சரித்திரம் திரும்புகிறது, கடவுளை நேருக்கு நேராகக்காணல்- என்ற இரு கட்டுரைகள் மூலம் விளங்க வைத்துள்ளார். இவ்விரு கட்டுரைகளும் 1955இல் வெளியிடப்பட்ட "மகான்களின் மத்தியில்" என்ற நூலில் காணப்படுகின்றன.

1932-ல் வெள்ளவத்தையில் காந்திஜயந்தி வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த வைபவத்தில் ஹரிஜனங்களும் உயர்ஜாதி இந்துக்களும் கலந்து பங்குபற்றினர். இந்த வைபவத்திற்கும் இராமச்சந்திரனுரே காரியதரிசியாக இருந்தார். ஆனந்தாக் கல்லூரி அதிபர் H. A. மெத்தானந்தா பிரதம பேச்சாளராக விளங்கினுர். திருவாளர்கள்: ம. ஸ்ரீகாந்தா, K. C. தங்கராஜா, K. பேரம்பலம் ஆகியோரும் இவ்வைபவத்தைச் சிறப்பிக்க உதவியாக இருந்தனர்.

ரமணமகரிஷி, பகவான் அரவிந்தர், சுவாமி இராமதாசர், சுவாமி சிவானந்தர், ஆகியோரின் பிறந்த தினங்கள் குறிப்பிட்ட நாட்களில் இராமச்சந்திரனுரின் இல்லத்தில் கொண்டாடப்பட்டன.

இராமச்சந்திரனுரின் உள்ளத்தைக் கவர்ந்த நூல்கள் முக்கியமானவை இரண்டாகும். இராதாகிருஷ்ணனின்

"இந்து வியூ ஒவ் லவ்", "ஐடியல் லவ்" என்பவையே அந்த நூல்கள். ஆனால் இந்த இரு நூல்களையும் வாசிப்பதற்கு முன்னரேயே இலங்கையில் வாழும் பல்வேறு மதத்தவர் களும் ஒன்றுபட்டுச் சமரசமாக வாழ்வதற்கு அரும்பாடு பட்டு வந்தார்கள். 1920ல் யாழ்ப்பாணத்தில் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் கடுமையான முரண்பாடு தோன்றியபோது சில இந்துக்கள் மதவெறியர்கள் போலத் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். அப்பொழுது இராமச்சந்திரனார் ஒற்றுமையையும் அமைதியையும் நிலவச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இதைக்கண்ட சிலர் ஏழனமும் செய்தனர். ஒரு குறிப்பிட்ட சஞ்சிகை தனது பத்திராதிபர்க் குறிப்பிலேயே நேரடியாகக் கண்டித்து எழுதியது. இவ்வெதிர்ப்புகள் அவரது சமரச ஆர்வத்தை மேலும் கூட்டின. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக அவர் சமரசக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகிறார். அப் பொழுது அவரைக் கண்டித்தவர்கள் இப்பொழுது அவர் தீர்க்கதரிசனம் உடையவர் என்று போற்றுகிறார்கள். அவரது கட்டுரைகளின் தொகுப்பாகிய "சமரச ஞானக் கோவை" என்னும் நூல் வெளியீட்டு விழாவின்போது இதனை நேராகக் கண்டோம்.



1960-ம் ஆண்டில் பெல்ஜியத்தில் "காந்திசமாதான சர்வகலாசாலை"யில் நடைபெற்ற சகல தேச மாணவர் மகாநாட்டில் திரு. க இராமச்சந்திரா அவர்கள் கலந்துகொண்டபோது எடுத்த படம். அருகில் நிற்பவர்கள் வண. பிதா. டொமினிக் பியரும், சங்கைக்குரிய அமெரிக்க பாதிரியார் றெவேட் வாட்லெற் அவர்களும்.

# தீர்க்கதரிசி

1930ஆம் 1940ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பகுதியில் சம்பள விகிதாசார அறிக்கையை எதிர்த்து ஒரு மாபெரும் எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கினர். அக்காலத்தில் எல்லாத் தொழிற்சங்கங்களும் இணைந்த பகிரங்க சேவை ஆணைக் குழுவிற்கு இராமச்சந்திரனுரே காரியதரிசியாகக் கடமை யாற்றினர்.

இளமையிலே சிறிதளவு சோதிடமும் கைரேகை சாஸ்தி ரமும் தமது சொந்த முயற்சியினுல் கற்றுக் கொண்டவர். அதனுல் கொழும்புச் சமுதாயத்தினர் அவரைக் கைரேகை சாஸ்திரியார் என்றும் சோதிடர் என்றும் அழைத்தனர். Y. M. C. A. பணம் சேர்ப்பதற்காக நடத்திய காணிவல் ஒன்றில் சோதிடச்சாலை ஒன்று ஏற்படுத்தி அதனை நடத்தும் பொறுப்பை இராமச்சந்திரனுரிடம் ஒப்படைத்தனர். இராமச் சந்திரனுர் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஆரம் பத்தில் அதனைச் சிலர் பொழுது போக்காகக் கருதினர். ஆனல் கைரேகை பார்த்துக் கொண்டவர்கள் அவரது திறமையை மெச்சினர். அந்தக்காலத்தில் இராமச்சந்திரனுர் பத்திரிகைகளுக்கு எழுதிய சோதிட விஞ்ஞானக் கட்டுரை கள் சோதிடத்தில் நம்பிக்கை இல்லாதோருக்கும் நம்பிக்கை ஊட்டின இராமச்சந்திரனுருடைய சோதிடம் விஞ்ஞான அடிப்படையிலேயே ஆராய்ந்து சொல்லப்பட்டது. ஆதலால் அதனைப் பௌதிக சோதிடம் என்று அழைத்தனர்.

அக்காலத்து 3 பிரபல்யமான சத்திர சிகிச்சை நிபுணர் கள் இராமச்சந்திரனுரிடம் சோதிடம் கேட்டார்கள். அதில் இருவர் இராமச்சந்திரனுர் கூறிய சோதிடப்படி இருதய நோயினுல் இறந்தவர்களாவர். கொழும்பு Y.M.C.A. கைப் பற்றிய வழிகளைப் பின்பற்றி புத்த வாலிப சங்கம், இந்து மகளிர் சங்கம், கிறிஸ்தவ இளம் பெண்கள் சங்கம் ஆதியன தமக்கு வேண்டிய நிதி திரட்டுதற்காக இராமச்சந்திரனுரின் சேவையைப் பயன்படுத்தினர். புத்த சமயக் காணிவல் நிகழ்ந்த போது ருசிகரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

சோதிட நிலையத்திற்கு இரண்டு புத்த பெண்கள் பொறுப்பாய் இருந்தனர். அப்பெண்கள் ஒரு நேரத்தில்

ஒருவரைமாத்திரமே சோதிடத்திற்கு அநுமதித்தனர். ஆனால் ஆண்களையும் பெண்களையும் கொண்ட 6 பட்டதாரி மாண வர்கள் சோதிடவிற்பன்னருடன் தமாஸ்பண்ண உள்ளே நுழைந்தனர். எல்லோரும் ஒரே நேரத்தில் உள்ளே விடுமாறு சத்தமிட்டனர். இராமச்சந்திரனரின் சிபார்சுப்படி 6 பேரும் உள்ளே அநுமதிக்கப்பட்டனர். வந்தவர்களில் ஒரு பெண் முதலில் கையை நீட்டினர். "நீர் வாழ்க்கையில் அநுகூல மடைய வேண்டுமானால் உம்மீது ஆசை காட்டும் ஒரு வாலிபனுக்கு உற்சாகம் ஊட்டக் கூடாது. காரணம் அவர் உம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருக்க மாட்டார்" என்று கூறினர். இது சொல்லும் போது அவ் வாலிபரும் அங்கு வந்திருப்பதை இராமச்சந்திரனர் அறிந் திருந்தார். இதைக் கேட்டதும் அவ்விளம் பெண் மௌனமாக வெளியேறினர். மற்றையோரும் ஒவ்வொருவராகப் பின் தொடர்ந்து வந்து தமது கைகளை நீட்டினர். இதேவிதமான அனுபவம் அவருக்கு நுகேகொடை சென். யோன்ஸ் காணி வல்லிலும் பெல்சியத்தில் உள்ள கே என்ற இடத்தில் காந்தி பல்கலைக் கழகத்திலும் ஏற்பட்டன. இளமை தொட்டே இராமச்சந்திரனர் வருங்காலத்தை உணருந்தன்மையைப் பெற்றிருந்தார். வருங்கால நிகழ்ச்சிகளைக் குறிக்கும் முன் னறிவித்தல்கள் ஏற்படுவதுண்டு.

பல்வேறு மக்களின் வருங்காலத்தை உணரக்கூடிய மூன்றுவது கண்பார்வை பெற்றிருந்தார். அவருடைய தீர்க்க தரிசனம் தனி மனிதருடன் மாத்திரம் நிற்கவில்லை. அப்பா லும் சென்றது. சிலவேளைகளில் தேசீய ரீதியிலும் சர்வதேசீய ரீதியிலும் அவருடைய தீர்க்க தரிசனம் காணப்பட்டது.

தியானத்தின் பின் இருக்கும் தெய்வீக மனநிலையுடன் ஒரு கட்டுரை எழுதினர். 1939 ஜனவரியில் யாழ்ப்பாணச் சஞ்சிகை ஒன்றில் 'தமிழ்மகள்' அது பிரசுரமானது. அந்தக் கட்டுரையில் அந்த வருடந் தொடக்கம் 7 வருட காலத்திற்கு இருண்டகாலம் என்றும் அதனை உலகம் அனுபவிக்கும்என்றும் குறித்து மக்கள் தமது வாழ்க்கையைச் சமய வாழ்க்கைக்குத் திருப்பிக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு அர்த்தமில்லாத விடயங்களை எழுதுவது மடமை என்று சில தமிழ் அறிஞர்கள் ஏழனம் செய்தனர். ஆனால் 1940ஆம் ஆண்டு மே மீ இவ்வாறு ஏழனம் செய்த ஒருவர் மேற்குறித்த கட்டுரையின் பத்தாயிரம் பிரதிகளை அச்சிட்டு எல்லா இடங்களுக்கும் இனமாகப் பரப்பினர். இந்த இருண்ட

காலம் இராமச்சந்திரனுருடையகட்டுரையின்படி 1945இல்முடிவடைந்ததையிட்டு சிலர் அதிசயப்பட்டனர். மேலும் 1958-ம் ஆண்டு சித்திரை மீ முதலாம் கிழமை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும், தமிழிலும் அவர் எழுதியதைப் பலர் அறிந்திருப்பார்கள். இக்கட்டுரையில் இலங்கையில் இரத்த ஆறு பெருகும் என எச்சரித்தார். மே மீக் கடைசியில் இது உண்மையாக நடந்து முடிந்தது. இங்கு 6-6-57இல் அப்பொழுதிருந்த பிரதமருக்கு எழுதிய கடிதமும் தினப்பத்திரிகைகளில் 4-2-58இல் எழுதிய கட்டுரையும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. இவை இரண்டும் அவருடைய தீர்க்க தரிசனத்தை விளக்குவனவாகும்.

அண்மையில் நடந்த சில விடயங்களைக் குறிக்குமிடத்து அவருடைய சஞ்சிகை 15-12-66இல் கிறிஸ்தவச் செய்தி என்னும் கட்டுரையில் கடைசி வசனம் மேற்கோளாகக் காட்டப்படுகிறது.

"அடுத்த வருடத்தில் புதிய கஷ்டங்களும் எதிர்ப்புக்களும் ஏற்படும். சமாதான காலத்தை அடையும் பாதையில் உலகம் ஒரு பெரிய சோதனைக் காலத்தைத் தாண்ட நேரிடும். ஆகவே எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளை, எங்கள் தெய்வீக இயல்பையும் மற்றவர்களிடம் தெய்வீகத்தைக் காணுந் தன்மையையும் கண்டுகொள்ளும் சந்தர்ப்பங்களாக பாவிக்கவேண்டும். புதுவருட வாசற்படியை எமது அன்புக் கீதத்துடனும் எங்கள் மனதில் இறை அமைதியுடனும் வரவேற்றுத் தாண்டுவோமாக."

கீழ்க்காணும் அழகிய மொழிகளை எங்கள் பிரார்த்தனையில் இந்தப் பருவத்தில் சேர்த்துக்கொள்வோமாக.

"கடவுளே உங்கள் காருண்யம் மனிதவர்க்கங்களிலும் பிரகாசிப்பதாக! நீர் இருப்பதை வரவேற்பார்களாக!"

இராமச்சந்திரனுருடைய எழுத்துக்கள் இவ்வுலகத்தில் ஒரு புதிய மனித உலகம் தோன்றும் என்ற நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றன. இராமகிருஷ்ணர், இராமலிங்கர், அரவிந்தர், ரமணர் முதலியோரும் இதையே உணர்த்தி உள்ளனர். இதனுல்தான் ஆதி வேத ரிஷிகள் கூற்றுகிய "இவ்வுலகத்தில் ஒரு தெய்வீக இனத்தை உண்டாக்குவோமாக" என்பதை அவர் அழுத்தி உரைத்திருக்கிருர்.

# தியானசாதனையே அவரது வாழ்வு

மூன்று வயதிலிருந்தே தாயாரால் ஊட்டப்பட்ட பக்தியின் மேலீட்டால் இவர் இளம் பராயந்தொட்டே தனது நித்திய சாதனைக்கு எடுத்துக்கொண்ட நூல்கள் கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம் ஆகியனவாகும். பின்னர் நூலறிவு வளர வளர தேவார திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், இராமலிங்க சுவாமிகள் பாடல் முதலானவற்றில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்களையேநித்தியபாராயணத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளார்கள். நடுவயதில் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் சந்நிதியில் முதல் முறையாகச் சந்தித்த வித்வான் ஸ்ரீ கணேசைய்யர் அவர்களின் ஆசியுடன் கிரந்த லிபியில் வடமொழி கற்க அவாவுற்றனர். அம்மொழியில் உள்ள தோத்திரங்கள் மிகவும் அருமையானவையும் சக்தி வாய்ந்தவை என்பதையும் அப்பெரியாரிடமிருந்து தெரிந்து கொண்டனர்.

ஆதி சங்கரரிடம் அளவற்ற பக்தியும் மதிப்பும் இவருக்கு உண்டு. வட மொழி கற்க ஆரம்பித்ததால் அன்னூர் அருளிய கணேசபஞ்சரத்தினம், மீனாட்சி அஷ்டகம், இராஜ ராஜேஸ்வரி அஷ்டகம், அன்ன பூர்ண ஸ்தோத்திரம் முதலியன இவரின் நித்திய பாராயணத்தில் இடம் பெற்றன. சஷ்டியப்தபூர்த்தியின் பின்னர், ஆதி சங்கரரால் விரிவுரை எழுதப் பெறும் பாக்கியமுள்ள ஸ்ரீ லலிதா திரிசதி இவருடைய பூசை அறையில் தினமும் தோத்திரம் செய்யப்பட்டு வந்தது. இந்தச் சாதனையால் இவரின் குடும்பத்தினர் மாத்திரமன்றி வேறும் பல அன்பர்கள் தேவி உபாசனையில் ஈடுபட்டு அளப்பரிய பேறுகள் பெற்றுள்ளனர் எனக் கூறுதல் மிகையாகாது.

இப்பொழுது இவர் நித்திய சாதனைக்கு எடுத்துக்கொண்டிருக்கும் நூல், ஸ்ரீ சுப்ரமணிய புஜங்கம் ஆகும். ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் அவர்களுடைய கல்வி தவம் யோகம் இவைகளின் சிறப்பைக்கண்டு பொறுமையுற்ற அபிநவகுப்தர் என்ற ஒரு புலவர், ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியாரவர்கள் மீது மந்திர ஏவுதல் செய்ததின் விளைவாக ஆசாரிய சுவாமிகள் க்ஷய நோயால் பீடிக்கப்பட்டார். இவ்வுபாதையைப் பொறுக்க முடியாது இவர் தவிக்கும் காலத்து, ஒரிரவு சிவபெருமான்

கனவில் தோன்றிக் காட்சியளித்து "திருச்செந்தூருக்குச் சென்று குமரனைத் தெரிசனம் செய்தால் இவ்வியாதி அடியோடு நீங்கிவிடும்" என்று சொல்லி விபூதிப் பிரசாதத்தை ஆச்சாரியர்களுடையகையில்கொடுத்தருளினர். உடனேகாலையில் யோக மகிமையால் ஆகாய மார்க்கமாக திருச்செந்தூரைச் சென்றடைந்துதெரிசித்து, முருகப்பெருமானுடைய திருவடிகளிலே வடமொழியில் பாமாலை ஒன்றைச் சூட்டினர். இதுதான் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய புஜங்கமாகும்.

ஏழு வயதுவரை இவரை வாட்டிய ஒருவகைத் தொய்வு நோய் எழுவதாம் வயதுவரை மறைந்திருந்தது. சென்ற மூன்று ஆண்டுகளாக ஒருவகைத் தொய்வு நோய் இவரைத் திரும்பவும் பீடித்துள்ளது. பலவகையான மருத்துவம் செய்தும் பூரண சுகம் இன்னும் இற்றைவரையில்லை. அதனுல் ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தை தினமும் தோத்திரம் செய்து வருகிருர்கள்.

இத்தொடர்பில் ஈண்டுக் குறிப்பிடப்படவேண்டிய பிறிதொரு முக்கிய விஷயமும் உண்டு. ஆதிசங்கரர் ஸ்தாபித்த சிருங்கேரி மடம், பூரிமடம், துவாரகை மடம், இமயத்திலுள்ள ஜோதிர் மடம், காமகோடி பீடம் ஆகிய ஐந்து அறநிலையங்களையும் தரிசித்து ஆங்காங்கு அருட்செங்கோலோச்சிய மகான்களையும் தரிசிக்க வேண்டும் என்ற பிரதிக்ஞை இவருக்கு இருந்தது. இவற்றுள் ஜோதிர்மடந்தவிர்ந்த ஏனைய நான்கிற்கும் யாத்திரை சென்றுள்ளார்கள். ஜோதிர்மட யாத்திரை தடைப்பட்டதும் ஓர் அற்புத முறையிலாகும்.

1936ம் ஆண்டு அந்த யாத்திரையை மேற்கொள்வதற்கு முன்னதாக, ரிஷிகேசத்தில் அப்பொழுது ஒரு குகையில் தவத்திலிருந்த சுவாமி சிவானந்தரைத் தரிசிக்கச் சென்ற பொழுது, சுவாமிகள் அந்த யாத்திரையை வேண்டாம் எனத் தடுத்துவிட்டார்கள். அம்மகானின் தீர்க்கதரிசனக் குறிகள் வாக்கிலிருந்து தோன்றிய எச்சரிக்கையின் உண்மை ஒரு வாரத்துள் தெரிய வந்ததெனலாம். இவர் பிரயாணம் செய்ய இருந்த விமானம் இமயமலைப் பள்ளத்தாக்கில் விழுந்து பிரயாணிகள் அனைவரும் உயிரிழந்தனர் என்ற செய்தி பின்னர் பத்திரிகைகளில் வெளிவந்தன. இந்நிகழ்ச்சியால் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் அவர்கள் தன்பால் காட்டிய கருணையை எண்ணி உள்ளம் நெகிழ்ந்தது. அந்நேரத்தில் இவர் இயற்றிய தோத்திரம் ஒன்றில் வரும்,

"நாயினேன் சடலம் நடுக் காடுறுது
தாய்போற் காத்த நற்பரா போற்றி"

வரிகள் என்றும் எம்மவர்க்கு மகான்களின் அளப்பருங் கருணையை நினைவூட்டுகின்றன.

தற்போது ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தில் சிரேஷ்ட சுவாமி களில் ஒருவராக இருந்து பணி புரிபவர் ஸ்ரீமத் சுவாமி அசங்கானந்தாஜீ அவர்கள் இலங்கையில் உள்ள இராம கிருஷ்ண மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். எவராவது சுவாமி அசங்கானந்தஜீயைத் தெரியாது இருக்க முடியாது. கொழும்பு மடத்திற்கு இருதடவைகள் தலைவராக இருந்து பணி ஆற்றி உள்ளார்கள். அன்னாரின் ஆத்மசக்தி யில் முளைத்தெழுந்தனவே இன்று கொழும்பு மடத்தருகில் உள்ள கலாச்சார நிலையமும், கதிர்காமத்தில் அருந்தொண்டு புரியும் இராமகிருஷ்ணமடமும்ஆகும்.சுவாமிகளுடையதொண் டினாலும், அருளினாலும் ஈர்ந்து கவரப்பட்டோர் பலர். மடத் துடன் நெருங்கிய ஈடுபட்ட பலர் சுவாமிகளுடைய தொண் டின் பெருமையை இன்றும் பாராட்டுவார்கள்.

சுவாமிகள் இரண்டாந் தடவையாக கொழும்பு மடத்தி லிருந்து பேலூர் தலைமை மடத்திற்கு மாற்றலாகிச் செல்லு முன் அவருக்குச் சத்திர சிகிச்சை ஒன்று நடைபெற்றது. ஸ்ரீ இராமகிருஷ்ணதேவரின் பெரும் பக்தரும் அன்புச் சேவை யாளருமான டாக்டர் இராசரத்தினம் அவர்களின் வைத்திய சாலையில் சுவாமிகள் சத்திர சிகிச்சை செய்து கொண்டிருந் தார்கள். சுவாமிகளின் நலனில் அக்கறையுள்ள அன்பர் ஒருவர் சுவாமிகளை அடிக்கடி போய் வைத்தியசாலையில் பார்ப்பார். ஒருநாள் மாலையில் போன பொழுது சுவாமிகள் சிறிது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். சுவாமி என்ன செய்யலாம் என்று அந்த அன்பர் கேட்டார்.

"முடியுமானால் போய் திரு. இ ரா ம ச் ச ந் தி ரா வை அழைத்து வாருங்கள். அவர் வந்து எனது பக்கத்திலிருந்து தியானித்தால் எனக்கு இது சுகமாக இருக்கும்."

இருவருக்குமே தியானத்தின்மேல் இருந்த நம்பிக்கை யையும் தியான சாதனையில் அவர்கள் பெற்ற வெற்றியையும் நாம் ஓரளவு யூகித்துக்கொள்ள முடிகிறது. இராமச்சந்திர னின் அருமை பெருமைகளை இலங்கையில் மிகச்சிலருக்

குத்தான் தெரியும் என சுவாமிகள் அருளினார்கள். சுவாமிகளுடைய கட்டளைப்படி இராமச்சந்திரனார் வந்து தியானம் செய்த காட்சியையும் அதனால் சுவாமிகள் ஆறுதல் பெற்றதையும் நேரில் பார்த்த அந்த அன்பர் அவர்கள் மிக உருக்கத்துடன் கூறினார்கள்.

இராமச்சந்திரனாரின் அருமைத் தாயாருக்கு நீண்டகாலமாக ஒரு ஆசை. தமது பாட்டனார் இராமச்சந்திரபட்டர் போலத் தமது மகனும் பூணூல் அணிய வேண்டும் என்பதே அந்த ஆசையாகும். ஸ்ரீ நாகலிங்கக் குருக்கள் இராமச்சந்திரனார் மீது இணையற்ற பாசம் கொண்டிருந்தவர். இராமச்சந்திரனாரின் தந்தையார் புலால் உண்பவர். ஆனபடியினால் இராமச்சந்திரனாருக்கு அக்கிரியை தகாது என்றும் தீட்சை மாத்திரமே போதியது என்றும் கூறிவிட்டார். ஆனால் தாயாரின் உள்ளத்தில் உதித்த புனித எண்ணம் வீண்போகவில்லை.

1954ஆம் ஆண்டில் இராமச்சந்திரனார் சிருங்கேரியாத்திரை செய்தபோது அப்போது அங்கு குருமடத்திலிருந்த ஞானசித்தரான ஸ்ரீ சந்திரசேகர பாரதி சங்கராச்சாரியாரின் அற்புத சக்தி, ஸ்ரீ தனுஷ்கோடி சாஸ்திரியார் என்பவரைக் கொண்டு அங்குள்ள தீர்த்தக்கரையில் உபநயனச் சடங்கை நிறைவேற்றியுள்ளது.

# உலகப்பணி

1955ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று இராமச்சந்திர ஞரது இல்லத்தில் ஒரு விசேட வழிபாடு நடந்தது. அந்த வழி பாட்டில் கலிபோணியாவைச் சேர்ந்த செல்வி சாள்ஸ் ஹில் டாவும் அவருடைய சிநேகிதியும் கலந்துகொண்டார்கள். கூட்டு வழிபாட்டில் தமது மனதைப் பறிகொடுத்த அம்மை யார்கள் இருவரும் இராமச்சந்திரஞரை யப்பானில் நடை பெற இருக்கும் சர்வமத மகாநாட்டில் கலந்துகொண்டு தமி ழர் கண்ட சமய நெறி பற்றிப் பேசுமாறு அழைத்தனர். இறைவன் இட்ட பணி என்று கருதிய இராமச்சந்திரஞர் அதனை அன்புடன் ஏற்று தமது கடமையைச் செவ்வனே நிறைவேற்றிஞர். அம்மகாநாட்டில் கலந்துகொண்ட ஜேர் மன் அம்மையார் ஒருவர் தமது நாட்டில் மார்பெச் பல்கலைக் கழகத்தில் தாயுமாஞர், வள்ளுவரைப் பற்றிப் பேசுமாறு அழைப்பு விடுத்தார். 1960இல் அங்குச் சென்று அப்பணியை யும் நிறைவேற்றிஞர்.

உள்ளத்திலே கடவுட் கொள்கையும் சமயக் கருத்தும் நாளடைவில் விரிவடைந்து வந்தது போலவே சிறுகத்தொ டங்கிய யாத்திரையும் உலகயாத்திரையாக மாறியது. வீட்டுப் பணி, நாட்டுப்பணியாகி, உலகப்பணியாக விரிவடைந்தது. ஆரம்பத்தில் குலதெய்வமான முருகப்பெருமானின் ஆறு படை வீடுகளும் இடம் பெற்றன. சின்னஞ்சிறு வயதில் தாயா ருடன் கூடி அநுட்டித்து வந்த கந்த சஷ்டி விரதத்தை வரு டத்திற்கு ஒரு தலமாக அநுட்டித்து பின்னர் இலங்கையி லுள்ள முருக தலங்களாகிய கதிர்காமம், செல்லச்சந்நிதி, கந்தவனக்கடவை, நல்லூர், நயினதீவு முருகன் ஆலயம் முதலிய இடங்களில் அநுட்டித்து இறுதியாக 1934இல் திருச் செந்தூர் சென்று அந்த விரதத்தைப் பூர்த்தி செய்தார். இது தாயார் மறைந்து 1½ வருடங்களின் பின்பாகும். இப்படி முருக தலங்களுடன் ஆரம்பித்த யாத்திரை தேவாரம் பெற்ற சகல வைஷ்ணவ சிவதலங்களுடன் நிறைவேறியது.

பல ஆத்மீகச் செல்வர்களை ஈழத்திற்கு அழைத்து அவர் களை ஆதரித்து அவர்களுடைய ஆத்மீகக் கருத்துக்களையும் சமய சாதன முறைகளையும் இலங்கை முழுவதும் பரவச் செய்த பெருமை இராமச்சந்திரஞரைச் சார்ந்ததாகும்.



1968-ம் ஆண்டில் சுவிற்ஸர்லாந்தில் நடந்த உலகசமாதான மகாநாட்டில் கலந்து கொண்டபோது, பரீஸில் ஏழைபங்காளராகவும் தீனபந்துவாகவும் போற்றப்படும் வண. பிதா. அவே பியரே அவர்களுடன் நிற்கும் காட்சி. அம்மகாநாட்டிற்கு இருவரும் பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தனர்.

575

# ஆத்மஜோதியின் ஆரம்பம்

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கம்பளை ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயிலில் பகவான் ரமண மகரிஷிகளின் ஜெயந்தி தினம் கொண்டாடப்பட்டது. அதைப்பற்றிய அறிவித்தல் ஒன்று கைக்கு எட்டியது. புகையிரத நிலைய அதிபராயிருந்து தற்போது இளைப்பாறியிருக்கும் திரு. பாலக்கிருஷ்ணன் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஜெயந்தியின் முக்கிய இயக்குநராக இராமச்சந்திரனுர் சில சத் சங்க அன்பர்களுடன் வந்திருந்தார். அவர்களை இன்னுரென நான் அறிந்திருந்தேன். ஆனால் அவர்கள் என்னை இன்னுரென அறிந்திருக்க நியாயமில்லை.

கோயிலில் பூஜை நடைபெற்றது. பூஜையின் போது அவர்களுக்குப் பக்கத்தில் நின்று வணங்கும் வாய்ப்புக் கிடைத்தது. குருக்கள் தேவாரம் அருளிப்பாடுக என்றுர். தேவாரம் பாடத்தக்கவர்கள் பலர் இருந்தும் ஒருவருமே வாய்திறக்கவில்லை. காரணம் இராமச்சந்திரனுர் பாடவேண்டுமென்று பலர் விரும்பியமையே. அவர்களோ முகமெலாங் கண்ணீர் வாரத் தம்மையும் மறந்து நின்றுர்கள்.

திரு. பாலக்கிருஷ்ணன் அவர்கள் அவருக்குக் கிட்டவந்து தேவாரம் பாடவேண்டும் என்று சொன்னுர்கள். பாலக்கிருஷ்ணன் அவர்கள் சொன்னதை விளங்கிக் கொள்ளவே சில விஞடிகள் சென்றன. அத்தகைய நிலையில் அவர்கள் வாய் திறந்திருந்தால் ஒருவரிக்குமேல் தேவாரம் பாடியிருக்க முடியாது. எல்லோரும் அழுது தீர்த்திருப்பார்கள்.

பக்கத்தில் நின்ற நான் மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து கண்ணீர் ததும்பி நிற்கும் இராமச்சந்திரனுருடைய முகத்தைப் பார்த்தேன். அவர்கள் தழுதழுத்த குரலில் என்னைத் தேவாரம் பாடுமாறு பணித்தார்கள். அது தேவியின் கட்டளை என்று சிரமேற் கொண்டு பாடினேன். ரமண பகவானைப்பற்றி அவர்கள் பேசும்போதெல்லாம் நாத் தழுதழுக்க பக்தி வெள்ளத்தில் மூழ்கியதைக் கண்டேன். அன்றைய தினம் அவர்களோடு உரையாடும் வாய்ப்போ பழகும் வாய்ப்போ ஏற்படவில்லை.

நாவலப்பிட்டி புகையிரதப் பகுதியில் வேலை செய்யும் அன்பர் ஒருவர் இராமச்சந்திரனாரின் உற்ற நண்பர். அக் குடும்பத்தினரை வெள்ளிதோறும் கோயிலில் சந்திப்பது வழக்கம். ஒரு வெள்ளிக்கிழமை கோயிலில் சந்தித்த அன்பர் இராமச்சந்திரனார் நாளை கொழும்பு சத்சங்க அன்பர்களுடன் குயீன்ஸ்பரி போக வருகிறார்கள். "புகையிரத நிலையத்திற்கு வந்தால் சந்திக்கலாம்" என்றார்கள். புகையிரதநிலையத்திற்கு நானும் சென்றிருந்தேன். வேறும் பல அன்பர்களும் வந்திருந்தார்கள். 15 பேர்வரை புகையிரதத்திலிருந்து இறங்கினார்கள்.

வந்தவர்கள் யாருமே முகப்பரிச்சயம் இல்லாதவர்கள். என்னை அழைத்துச் சென்ற புகையிரத நிலைய அன்பர் இவர்தான் முத்தையா மாஸ்டர் என்று இராமச்சந்திரனாரிடம் அறிமுகம் செய்து வைத்தார். "புகையிரதம் உளப்பனையில் வரும்போதே இவரைக் கண்டுகொண்டுதான் வருகிறேன்" என்றார்கள். அவர்கள் மனக்கண்ணால் கண்டதை என்னால் அப்போ உணரமுடியவில்லை. ஆத்மீகத்தில் அரிவரிப்பாடம் படிக்கத் துடிக்கும் ஆத்மீகக் குழந்தைக்கு இவையெல்லாம் புதிராகத் தானே இருக்கும்.

இச் சந்திப்பின் பின்புதான் ஒருவரை ஒருவர் பழகவும் புரிந்துகொள்ளவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமகம்ச தேவரை முதன் முதல் சந்தித்தபோது நீ இங்கு வருவதற்கு இவ்வளவு காலம் ஏற்பட்டுவிட்டதா? என்று பரமகம்சர் குறிப்பிட்டபோது விவேகானந்தர் "இது அசல் பைத்தியம்தான்" என்று நினைத்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் எனது மனோநிலையும் விவேகானந்தருடையதைப் போன்றே இருந்தது. பி. ஏ. படிக்கும் மாணவனுடைய அனுபவத்தை முதலாம் வகுப்பு மாணவன் எவ்வாறு புரிந்துகொள்ள முடியாது தவிப்பானோ அப்படியானதொரு தவிப்பு எனக்கும் ஏற்பட்டது.

இராமச்சந்திரனாரின் வீட்டில் நடைபெறும் பகவான் அரவிந்தரின் ஜயந்திக்கு வருமாறும் அதில் 10 நிமிடங்கள் பேசுமாறும் கடிதத்தின் மூலமாக அழைப்பு வந்தது. இராமச்சந்திரனாரோடு நெருங்கி உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. மாலையில் நடக்கும் கூட்டத்திற்குக் காலையிலேயே சென்று சேர்ந்துவிட்டேன். அன்று முழுநாளும் அவர்கள் தனிமை

யிலே இருந்தார்களாதலினால் அவர்களுடன் பல விடயங்களைப் பற்றியும் உரையாடவும் வாய்ப்புக் கிடைத்தது.

நாவலர் பெருமானைப்பற்றிய பேச்சும் எழுந்தது. நான் பண்டிதமணி அவர்களுடைய மாணவன் என்று சொல்லிக் கொள்வதில் எனது பெருமையை வெளிப்படுத்தினேன். பண்டிதமணியின் மீது தமக்கிருந்த அபிமானத்தையும் அவர் வெளிப்படுத்த தவறவில்லை. "நாவலர் பெருமான் தொடக்கிய பணிகள் அப்படியே நின்றுபோய் விட்டனவே; அவை தொடர்ந்து நடைபெற எம்மாலானவற்றை நாம் செய்யவேண்டாமா? முக்கிய பணியாகிய பத்திரிகைப் பணியைக் குறிப்பிட்டேன். காலத்திற்கேற்ற வகையில் ஆத்மீகப்பணியை உலகளாவிய வகையில் நாம் ஆற்ற வேண்டும். 'ஆத்மஜோதி' என்ற பெயரில் மாத வெளியீட்டை நடத்துவோம். தான் கௌரவ ஆசிரியராக இருப்பதாகவும் என்னை நிர்வாக ஆசிரியராக இருக்குமாறும் பணித்து விட்டார்கள்.

பொழுதுபோக்குக்காகப் பேசிக்கொண்ட விஷயம் செயலிலும் உருவாகும் என்று அப்பொழுது நான் கருதவில்லை. எனக்கோ பத்திரிகை நடத்துவதில் எவ்வித அநுபவமுமில்லை. இந்து சாதனத்தில் நாவலர் பெருமானைப் பற்றியும் சில திருமுறைப் பாடல்களை நிலைக்களனாகக் கொண்டு எழுதப்பட்ட இரண்டொரு கட்டுரைகளுமே எனது எழுத்துத்துறை அநுபவமாகும். இக் கட்டுரைகளை இராமச்சந்திரனார் கவனமாக வாசித்து வைத்து எமது சம்பாஷணையின் போது குறிப்பிட்டார்கள்.

ஆவணி மாதம் 15-ம் திகதி இதனைப் பற்றிச் சிந்தனை எழுந்து பேச்சில் உருவாகியது. திருக் கார்த்திகைத் தினத்தன்று முதலாவது பத்திரிகை வெளிவரவேண்டுமென்று பணித்தார்கள். சமரசமான பத்திரிகையான படியினால் முகப்புப்படம் சிவஞானபாதமாக வருதல் பொருத்தமானதென்றும் கூறியதோடு அந்த நிமிடமே வேலையும் ஆரம்பித்துவிட்டார்கள். நான் வீடு வந்து சேர்ந்த அடுத்த நாளே ஆத்மஜோதி பற்றிய ஆலோசனைகளும் கட்டுரைகளும் அனுப்பத் தொடங்கி விட்டார்கள். அவர்களுடைய ஆத்மீகப் பிரவாகம் அடியேனுடைய நெஞ்சக் கல்லில் விழுந்து உலகிற்குப் பாய வேண்டு மென்று இறைவன் கருதியுள்ளான் என்பதை உணர்ந்தேன்.

மாதந்தோறும் ஒவ்வொரு மகான்களுடைய படத்தையோ அன்றி திருத்தலங்களின் படத்தையோ முகப்பில் வெளியிட்டு அதுபற்றிய ஆசிரியர் கட்டுரையும் விசேட கட்டுரையும் வெளிவரும் ஒருபாணியைக் கையாண்டு வந்தோம். அது பற்றிப் பலர் பாராட்டி எழுதியிருந்தார்கள். எனது உள்ளத்தே மறைந்திருந்த ஆத்மீக உணர்வு விழித்தெழுவதற்கேற்ற சந்தர்ப்பங்கள் பல இதன் மூலமாகக் கிடைத்து வந்தன. ஈழத்திலும் பாரத நாட்டிலும் பல மகான்களுடைய செயல்களும் வாழ்வும் குடத்துள் விளக்காகவே இருந்து வந்தன. அவர்களை மலை மேல் விளக்காக வைத்து பெரும் பணியை ஆத்மஜோதி செய்து வருகின்றதென்றால் அது மிகையாகாது.

இராமச்சந்திரனார் ஒரு முற்கோபக்காரர். ஒரு சிறு பிழையையும் பொறுக்கமாட்டாதவர். ஒரு நிமிட நேரமேனும் அக் கோபம் உள்ளத்தில் தங்குவதில்லை. ஒரு நிமிடத்தின் பின் இவரா கோபித்தார் என்று சொல்லும் அளவிற்குச் சாந்த நிலையை அடைந்து விடுவார். இறைவன் அருளால் தான் அந்தக் கோபமும் வந்தது என்ற பூரண நம்பிக்கை உடையவர். சஞ்சிகையில் சிறு எழுத்துப் பிழையோ அச்சுப் பிழையோ ஏற்பட்டுவிட்டாலும் பொறுக்கமாட்டாதவர். இதனால் பல கண்டனக் கடிதங்களையும் பெற்றுள்ளேன்.

நாம் 2ம், 3ம் முறைகளில் திருத்திக் கொடுத்ததையும் அச்சக வேலைப் பையன்கள் எழுத்தை மாறிப்போட்டு சிறிதாக இருந்த பிழையை பெரிதாக்கியும் விடுவதுண்டு. இதனை நாம் நன்கு கவனிக்கவில்லை என்றே இடித்து எழுதுவார்கள். இத்தகைய பிழைவிடும் எமக்கு அவர்கள் அளிக்கும் தண்டனைதான் என்ன என்று அறிய ஆசைப்படுவீர்கள் அல்லவா? தன்னை ஒறுத்தல்தான் அவர்கண்ட காந்தீய நெறியும், வள்ளுவர் நெறியுமாகும்.

> "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
> நன்னயம் செய்துவிடல்"

என்ற குறளுக்கு இலக்கிய புருஷனாக அமைந்தவர்.

அவரது சமரச சன்மார்க்கக் கொள்கை சிலருக்குப் பிடித்துக் கொள்ளாது. அதனால் கருத்துமோதல்களும் ஏற்படுவதுண்டு. உள்ளத்திலே ஏற்படும் ஏதோ ஒரு தூண்டு

தலின் பேரிலேயே தமது எழுத்துப்பணி நடந்து வருகிறது என்று சொல்லுவார்கள். காந்தியடிகள் தன்னையும் அறியாத சக்தியொன்று தன்னை வழிநடத்தி வருவதாகக் கூறியதை நாம் எல்லாரும் அறிவோம். அதேபோல்தான் இராமச்சந்திரனும் தன்னையும் அறியாத ஒரு உள்ளத் தூண்டுதல் தம்மை வழிநடத்துகிறது என்று கூறிக்கொள்ளுவார்கள்.

இதே ஆத்மஜோதி தமிழில் மாத்திரமல்ல இந்த நாட்டுப் பெரும்பான்மை சமூகத்தினரின் மொழியாகிய சிங்களத்திலும் உலக மொழியாகிய ஆங்கிலத்திலும் வெளிவர வேண்டுமென்று ஆசை கொண்டவர்கள். அவர்கள் பிற்காலத்தில் நடத்திய ''சமய மஞ்சரி'' என்ற ஆங்கிலச் சஞ்சிகை மூலம் ஓரளவு அவரது ஆசை நிறைவேறியது. சிங்களத்தில் வெளிவர வேண்டும் என்ற ஆசை இன்னும் நிறைவேறவில்லை. அதற்கேற்ற சந்தர்ப்பம் ஒன்றை ஆத்மஜோதி எதிர்பார்த்துக் கொண்டே உள்ளது. அதற்கு முன்னோடியாக ஆத்மீக சம்பந்தமான சில சிங்களத் துண்டுப் பிரசுரங்களையும், சுவாமி விவேகானந்தர் உபதேசங்கள், நாவலர்பெருமானின் சைவ வினவிடை முதலாம் புத்தகம் ஆகிய இரு நூல்களையும் சிங்களத்தில் ஆத்மஜோதி நிலையம் வெளியிட்டுள்ளது என்பதை அன்புடன் நினைவூட்டுகின்றோம்.

# இராமச்சந்திரனார் கண்ட முப்பெரும் விழாக்கள்.

இராமச்சந்திரனாருக்கு தாரமாய் வந்து சகோதரியாய் மாறி இறுதியில் தாயாகி வாழ்கின்ற திருமதி சின்னத் தங்கம் இராமச்சந்திரா தமது அன்பர்களுடனும் உறவினர்களுடனும் பேசும்போது கூறிய வசனம் ஒன்று உண்டு. "உலகில் சாதாரணமாக ஒரு பெரியாரின் பெருமையும் புகழும் பேசப் படுவது அவர்கள் உடல் மறைந்த பின்னராகும். தமது நாயகரைப் பொறுத்த மட்டில் இந்த விதிக்கு விலக்கு உண்டு. வேண்டிய விழாக்கள் எல்லாம் அவர் உடல்கொண்டு உலாவும் போதே நடந்தேறிவிட்டன. சரமகவி பாடும் தேவை அற்றுப் போய்விட்டது. இது முற்றிலும் உண்மை. அது மாத்திரமன்றி ஏதோ பூர்வ புண்ணியத்தின் பயனாக ஆங்கிலத்திலும் தமிழிலும் செய்த பிரசங்கங்கள் வானொலிப் பேச்சுக்கள் வரைந்த கட்டுரைகள் உடனுக்குடனாய் அச்சேறிவந்து உலகம் முழுவதும் பரவிய காட்சியை அவரே நேரில் பார்க்கும் பாக்கியமும் கிடைத்தது. அத் தொண்டைச் செய்து முடிப்பதற்கு பிறநாட்டு அன்பர்களிற் பலரைத் துணைக்கருவியாகத் திருவருள் சேர்த்து வைத்துவிட்டது. எமக்குத் தெரிந்த விழா முதன் முதல் எடுத்த விழா சஷ்டியப்த பூர்த்திவிழா ஆகும்.

# சஷ்டியப்த பூர்த்தி விழா

இராமச்சந்திரனுரின் சஷ்டியப்த பூர்த்திவிழா கொழும்பு ஜிந்துப்பிட்டி சுப்ரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் கௌரவ சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் ஷண்முக அர்ச்சனை வழிபாட்டின் பின் நடைபெற்றது. தலைவர் தமது முன்னுரையில் இராமச்சந்திரனுரின் முன்மாதிரியான வாழ்க்கையைப் பின்பற்றி வாழவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இந்துசாதனப் பத்திராதிபர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் அவர்கள் பேசும்போது அடியார்களைப் பேணி பெரியோரைத் தேடிச்சென்று போற்றி அவர்களின் திருவடி நிழலில் வாழும் பேறு பெற்றவர் இராமச்சந்திரனுர் என்று குறிப்பிட்டார். கவிஞர் பரமகம்சதாசனுர் வாழ்த்திய கவி ஒன்று பார்ப்போம்.

"மாந்தர் தம்மை நொடிப் பொழுதில்
மயக்கும் மோகக் கவர்ச்சிபல
சூழ்ந்த கொழும்பு மாநகரில்
துள்ளும் இளைஞர் பலர் நெஞ்சைக்
காந்தம் போலக் கவர்ந்திழுத்துக்
கடவுளின்பக் கடலாட்டும்
ஏந்தல் நின்னை எண்ணுகையில்
இதயம் மலர்தல் இயல்பன்றோ"

திரு. இராமச்சந்திரனுர் இன்றும் ஒரு மாணவனைப்போலவே அறிவுத்துறையில் ஈடுபட்டு அவப்பொழுதை தவப்பொழுதாக்கி வருகின்றுர்கள் என்று ஈழகேசரி எழுதியது.

"அடியார்களைப் பேணுவதே சைவச்சார்பில் உள்ள சிறந்த பண்பாடாகும். இதற்கேற்ப இராமச்சந்திரனுர் பெரியார்களைச் சென்ற இடமெல்லாம் தேடிச்சென்று அவர்களின் நிழலில் வாழ்வதையே தமது சத்திய விரதமாகக் கொண்டுள்ளார்."

—வீரகேசரி.

"அறுபது ஆண்டுகளில் நாற்பது ஆண்டுகளை பொதுநல ஊழியத்திற்கென்றே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட இந்து சமய ஊழியர்."

—தினகரன்.

"சமய இலட்சியங்களுக்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்துள்ள ஸ்ரீ இராமச்சந்திரனுரின் சஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடுவதில் மக்கள் தங்களையே கௌரவித்துக் கொண்டவர்களாவர். மனிதகுலத்திற்குச் சேவை செய்வதற்காக ஸ்ரீ இராமச்சந்திரன் அவர்களுக்கு நீண்ட ஆயுளை அருளுமாறு கடவுளைப் பிரார்த்திப்பது சகலருடைய கடமையாகும்."

—சிருங்கேரி மடாதிபதியான ஸ்ரீ சங்கராச்சாரியசுவாமிகள்

"தமிழிலும் ஆங்கிலத்திலும் அநேக நூல்களை எழுதியுள்ள இராமச்சந்திரனுர் அவர்கள் சகல வாழ்க்கைத் துறைகளிலுமுள்ள மக்களின் நன்மதிப்பையும் மரியாதையையும் பெற்றுள்ளார். அவருடைய உதாரணத்திலுைம் ஆலோசனையினுலும் வாழ்க்கை முறையினுலும் பயன் அடைந்தவர்கள் அநேகர். அவருடைய உதாரணத்திலுைம், அநுஷ்டானத்திலுைம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இந்துக்களின் சமய வாழ்க்கையின் தரம் உயர்ந்து வளமடைந்துள்ளது. இலங்கை மகா ஜனங்களுக்கு அவர் செய்துவரும் சேவைகளில் ஒன்று விசேடமாகக் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இந்தியாவிலுள்ள சமயத் தலைவர்களை இலங்கைக்கு அழைத்து அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்க இலங்கை மக்களுக்கு அவர் அளித்துள்ள சந்தர்ப்பமாகும். சுவாமி சிவானந்தர், சுவாமி இராமதாசர், சுவாமி சுத்தானந்தர் ஆகியோர் இலங்கைக்கு வருவதற்கு அன்னுரின் முயற்சியே காரணமாகும். திரு. இராமச்சந்திரனுரின் சமய வாழ்க்கையை உருவாக்கி அவருடைய அறிவை விசாலமாக்கிய நூல்களுள் பெரியபுராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தர்கலிவெண்பா ஆதியன சிலவாகும். மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்தபோது நாவலப்பிட்டியிலுள்ள இராமச்சந்திரனுரின் இல்லத்தில் ஓரிரவு தங்கியதன் மூலம் அவரை ஆசீர்வதித்துள்ளார். மகாத்மா மலைநாட்டுப் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதில் இராமச்சந்திரனுர் அரும்பாடுபட்டார்.

இராமச்சந்திரனுர் ஊரெழுவைச் சேர்ந்த பிரமஸ்ரீ சதாசிவக் குருக்களிடம் சமய தீட்சை பெற்ருர். அவர் எழுதியுள்ள நூல்களில் சில பின்வருமாறு: செல்வச் சந்நிதிப் பதிகம், ரமணஸ்தோத்திரமஞ்சரி, ரமணத்தியானம், ரமணரின் அவதார மகிமை, அன்னை கிருஷ்ணுபாய், முருகன்புகழ்மாலை, உதிர்ந்த மலர்கள், பெரியார் தோத்திர மஞ்சரி.

இராமச்சந்திரனுரின் சமயப்பணிகளை அன்னுரின் அன்புக்குரிய பத்தினியும் மக்களும் பகிர்ந்து கொண்டனர்.''

—ஞாயிறு தினகரன்.

''இராமச்சந்திரனுர் நீண்ட காலம் ஆத்மீக சேவை செய்துள்ளார். அவர் இலங்கையில் ஆத்மீக வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகிறவர்களுக்கு குன்றின்மேலிட்ட தீபமாக விளங்குகிருர்.''

—சுவாமி இராமதாசர்.

''இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் ஆன்மீகப் பாலம் திரு. இராமச்சந்திரனுர் ஆவர். தெற்கே கதிர்காமம் முதல் வடக்கே ரிஷிகேசம் வரை இவர் யாத்திரை செய்யாத தலம் இல்லை என்றே கூறலாம். பாரத நாட்டுக்குப் பன்முறை விஜயம் செய்து இருதேசங்களின் ஆன்மீக உறவுகளைப் பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். மதுரை திருஞானசம்பந்தர் மகா சந்நிதானம் அவர்கள் இராமச்சந்திரனுரின் தமிழ், சமயத் தொண்டுகளைப் பாராட்டி ''திருநெறிச் செல்வர்'' என்னும் பட்டத்தை வழங்கியுள்ளார்கள். ரிஷிகேசம் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் ''திவ்ய ஜீவன சங்க நட்சத்திரம்'' என்ற பட்டத்தை வளங்கியுள்ளார்கள்.

—ஞாயிறு வீரகேசரி.

# அமிர்தோற்சவ விழா

இவ்விழா 9-11-65 செவ்வாய்க்கிழமை வெள்ளவத்தைப் பிள்ளையார் கோயிலில் நடைபெற்றது. இலங்கையின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் அடியார்கள் சமூகம் அளித்திருந்தனர். இராமச்சந்திரனுரின் எழுபதாவது ஆண்டு ஜயந்தி விழாவாகக் கொண்டாடப் பெற்றது. பல சமயத்தவர்களும் கலந்து கொண்டமை இராமச்சந்திரனுரின் சமரச சன்மார்க்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. இலங்கை அரசாங்க தர்ம கர்த்தாவாகிய திரு. வி. எப். குணவர்தன அவர்கள் அமிர்த மஹோற்சவ ஞாபகார்த்த வெளியீடாகிய "மெய்யடியார் அருளுறவில்" என்னும் ஆங்கில நூலை திரு. இராமச்சந்திரனுருக்கு வழங்கி அவருடைய சமரசசமய உலக சமாதான சேவையைப் பாராட்டி வாழ்த்தினுர்கள். பிரபலபௌத்த சமரச அன்பரும், இராமகிருஷ்ணமடத்து நிர்வாகக் கமிட்டியின் பலவருட அங்கத்தவருமாகிய முகாந்திரம் பி.வக்வெல்லவும் பேசினுர். மேலைத்தேச அன்பர்கள் முயற்சியால் கனடாவில் உள்ள ஒரு சர்வதேச பிரபல கலாச்சார ஸ்தாபனம் இராமச்சந்திரனுருக்கு "தத்துவ கலாநிதி" என்ற பட்டத்தை 1956-ம் ஆண்டு வழங்கியது.

உலக சமாதானத் தொண்டுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்ட பெல்ஜிய தேசத்து வண. பிதா. டொதுனிக்பியர் அடிகள் தம்மைவிட மேம்பட்ட உலக சமாதானப் பணியை திரு. இராமச்சந்திரனுர் ஆற்றியுள்ளார் என போற்றியிருப்பதொன்றே மேற்கத்திய நாடுகளில் இவருக்கும் "சமய மஞ்சரி"க்கும் *Religous Digest* நிலவிய பெருமதிப்புக்கும் சான்ருகும்.

இராமச்சந்திரனுர் அவர்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் பாடிய கதிர்காமப் பதிகத்தின் பாடல் ஒன்றுக்கு அவரே இலக்கிய புருஷராகவும் இலட்சிய புருஷராகவும் திகழுகின்றமை யாவராலும் போற்றப்படவேண்டிய ஒன்ருகும்.

"சந்ததமு நினதருளைச் சார்ந்து வாழ்ந்திடுகின்ற
சற்சனர் தம்முறவு வேண்டும்
சரவண பவாகுகா சண்முகா என்று
நிதம் சாற்றடியார் நேயம் வேண்டும்

சிந்தனையில் உந்தனது சித்துரு தியானிக்கும்
சிவயோகர் ஆசி வேண்டும்
சிவர்களின் சேவையே சிவபூசையாக் கொண்ட
சிலர்களின் சேர்க்கை வேண்டும்
பந்தமத கன்றிட்ட பரமஞானியர் பதம்
பற்றிப் பிடிக்க வேண்டும்
பாரெங்கும் அவர்மொழி பரவிடும் பணியில்யான்
பங்கெடுத்துய்ய வேண்டும்
கந்தா! விசாகனே! கருணகரா! என்று
கதறுநெறி தருதல் வேண்டும்
கதிர்காம க்ஷேத்திரந் தனிலமர்ந்து அன்பர்க்குக்
கருணைமழைபொழி தெய்வமே''

''ஒருவனுடைய வாழ்வின் உயர்வுக்கு ஒன்றில் அவர் தாய் இன்றேல் மனைவி காரணராய் இருப்பதைக்காணலாம். ஆனால் இராமச்சந்திரனரைப் பொறுத்த அளவில் அவர் இரண்டையும் பெற்ற பாக்கிய சீலராய் விளங்கினர்.''

—ஸ்ரீ கிருஷ்ணனந்த முனிவர்.

''இவர் மகான்கள் மெய்ஞ்ஞானிகள் வாக்குகளை ஒவ்வொரு வீட்டுக்கும் பரப்பியுள்ளார். அவருடைய வாழ்க்கையே கோடிக்கணக்கான மக்களுக்கு உதாரணமாகும். அவருடைய இனிய எளிய சுபாவம் போற்றுதற்குரியது.''

—ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி.

''எம்மத உண்மையும் சம்மதமாக
நம்மதம் பரப்ப நாவலர் போன்று தொண்டுசெய் புலவன்
தோழமைக் கினியான் பண்டும் புதுமையும் பழுதறத்
தேர்ந்தோன் இலங்கை மணியெனும் இராமச்சந்திரன்
கலங்கரை விளக்கெனத் துலங்குக மாதோ.''

—ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

